எஸ்.ரி.பிரேமராஜன்



# தீட்சண்யம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**THEEDCHANYAM (Poems)**
**Author: S.T. Premarajan (Theedchanyan)**
**(Thiyagarajah Premarajan)**

First Edition: May 2009

Price: Rs. 180.00

© by Manaosai Verlag
74523 Schwaebisch Hall, Germany
Email: manaosai@gmail.com

© Chandravathanaa Selvakumaran
Email: chandra1200@gmail.com

Compilation: Chandravathanaa Selvakumaran
Illustrations & Cover design: Muunaa

Production: Chuvadi, Chennai - 600 005, India
Phone: +91-044-28441672

Printed by:
Chennai Micro Print (P) Ltd, Chennai - 29

Official Distributors in India:
Sudharsan Book Processors and Distributors,
New No: 257, Triplicane High Road,
Chennai - 600 005, India

ISBN: 978-3-9813002-1-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எஸ்.ரி. பிறேமராஜன்

# தீட்சண்யம்

கவிதைகள்

மனஓசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ்.ரி. பிறேமராஜன்

தீட்சண்யன்

30.01.1958 - 13.05.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பிரிய அண்ணனுக்கு...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


- தீண்டிச்சென்ற தென்றல் தீட்சண்யன் 11
- வன்னியிலே கவி படித்த வானம்பாடி 13
- அணிந்துரை 16
- முன்னுரை 20
- நினைந்து நினைந்து 25

**கவிதைகள்**

1. அறிமுகம் 27
2. வளம் தருவாய் 28
3. மாவீரர்கள் 29
4. மாவீரர்நாள் 30
5. மாவீரன் துயிலும் இல்லம் 31
6. எங்கள் வளநாடு 33
7. வீரம் விளையும் ஈழவள நாடு 35
8. வானகம் போன்றொரு . . . 37
9. ஈழவர் பூமி 38
10. ஈழம் எங்கள் தாகமென்று . . . 39
11. முல்லையதன் சிறப்பு 40
12. எங்கள் தமிழர்க்கு இன்னல் விளைந்தால் 41
13. ஊர் எங்கும் போர் எழுச்சி 42
14. தமிழீழம் மலரட்டும் 43
15. இதய மலர்கள் 45
16. தேசப்பற்று 19
17. சேனைப் புலவிற்குள் யானைகளென . . . 53
18. அணையாத தீபமென எமை அழைத்தால் போதாது 56
19. இருளகற்ற வந்த அஸ்தமனத்துச் சூரியன்கள் 57
20. கரும்புலிகள் 60
21. உறங்கும் உண்மைகள் 61
22. அத்திவாரக்கற்கள் 62
23. எம்மை நினைத்து யாரும் கலங்கக் கூடாது 63
24. ஜயசிக்குறு யாழுவா 66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 25. | ஜயசிக்குறுவுக்கு ஒரு கடிதம் | 67 |
| 26. | வேருக்கு நீர் வேண்டும் (ஜயசிக்குறு தொடர்ச்சி) | 69 |
| 27. | ஈழம் வென்று வரும் | 72 |
| 28. | திலீபா...! நீ சாந்தி பெறு | 74 |
| 29. | நினைவில் என்றும் நிலைத்தீர் மாமா | 75 |
| 30. | நல்லூரின் வீதியிலே வந்து சிரித்தாய்! | 76 |
| 31. | திலீபன் பாடல் – ஈழ எம் நாடெனும் போதினிலே | 77 |
| 32. | திலீபன் மாமா – ஆதரவென்று கூறியவாறே! | 78 |
| 33. | திலீபன்-சிறப்புக்கவிதாஞ்சலி | 79 |
| 34. | இந்த நூற்றாண்டில் இவன் போலும் யாருளரோ! | 85 |
| 35. | தம்பியல்லவோடா நீ | 89 |
| 36. | கப்டன் மயூரன் | 93 |
| 37. | நம் இனிய பரதா | 97 |
| 38. | இனி என்ன செய்ய | 99 |
| 39. | தனம் அண்ணா | 100 |
| 40. | மாவீரன் கலையரசன் | 101 |
| 41. | நாவண்ணா...! ஈரத்தால் என் மடலும் சரிகிறதே | 103 |
| 42. | கரும்புலி மில்லர் | 105 |
| 43. | பட்டேல் அண்ணா | 106 |
| 44. | களமுனைக்கு ஒரு சேதி | 107 |
| 45. | எங்களின் நாடும்.. | 108 |
| 46. | மாங்குளத்தில் மாவீரர் விழாக்கவி | 109 |
| 47. | சிறுமை கண்டு பொங்குவோம் | 115 |
| 48. | குருதிக் கடலிலே குருத்தோலைகள் | 118 |
| 49. | வேண்டும்! வேண்டும்! | 119 |
| 50. | ஆசிரியர்கள் | 120 |
| 51. | மாணவர்கள் | 121 |
| 52. | கல்வியைக் காதலிப்போம் | 122 |
| 53. | வீரம் விலை போகாது | 123 |
| 54. | றெட்பானா முன் பள்ளி வாழியவே | 124 |
| 55. | தொழில் வளம் இழந்தாலும்... | 125 |
| 56. | ஒன்று படு தொழிலாளர் வர்க்கமே! | 128 |
| 57. | கரும்புலி – அந்தாதிக் கவி | 130 |
| 58. | தையலென வந்த தை மகளாள் – அந்தாதிக் கவி | 134 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 59. | சித்திரைப்புத்தாண்டு வந்தென்ன போயென்ன! | 137 |
| 60. | வீரம் சுமந்து வா தோழி | 140 |
| 61. | பெண் எழுச்சி | 142 |
| 62. | வேலியடைப்போம் வாருங்கடி | 143 |
| 63. | மங்கையர் நாங்கள் | 144 |
| 64. | சீதனம் எந்னும் மாயையை ஒழிப்போம் | 146 |
| 66. | கறைகள் | 147 |
| 67. | ஜன்னல் மலர் | 148 |
| 68. | விளக்கம் | 149 |
| 69. | மயிர்க்கொட்டி | 149 |
| 70. | ரசனை | 150 |
| 71. | விடிவு | 150 |
| 72. | காதல் | 151 |
| 73. | கவிதை | 151 |
| 74. | மகிழ்வு | 152 |
| 75. | லயம் | 152 |
| 76. | நாங்கள் பார்ப்பது | 153 |
| 77. | நாங்கள் ஊமைகளல்ல | 153 |
| 78. | விருட்சங்கள் | 154 |
| 79. | திசை திருப்பம் | 154 |
| 80. | மலைதான் | 155 |
| 81. | சரணாகதி | 155 |
| 82. | பிள்ளையாரே! | 157 |
| 83. | அன்னைக்கோர் கடிதம் | 159 |
| 84. | போரும் வாழ்வும் | 161 |
| 85. | தங்கைக்கு! | 163 |
| 86. | என் பிரிய தங்கையே! | 164 |
| 87. | பட்டினி படுத்தும் பாடு | 165 |
| 88. | எங்கே போகிறோம்...? | 167 |
| 89. | நிலவே நீயேன் அழுகின்றாய்? | 169 |
| 90. | ஊமை இருட்டு | 171 |
| 91. | திரும்புங்கள்! வாருங்கள்! ஏந்துங்கள்! | 172 |
| 92. | இங்கே தயவு செய்து மலர் போட வேண்டாம் | 173 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

+

## தீண்டிச் சென்ற தென்றல்

தீட்சண்யன் -
என்னைத் தீண்டிச் சென்ற தென்றற் காற்று, கவிதை தீந்தமிழ் அமுத ஊற்று.
"தோற்றிடுதற் கில்லை" என்ற ஒரு நாள் எழுதிக் கொண்டு வந்தவர் உரை புகுந்த வேளை.
மாற்றான் எறிகணையால் காலொன்று துண்டுபட, மதுரகவி; கையும் உடைந்து 'ஆற்றல் போச்சே' என்று அந்தரித்து அமர்ந்திருந்த அந்நாள். அந்நிலையிலும் கண்ணீர்த் துளியில் கவிப்புனல் சுரந்த உள்ளமுள்ளோன்.
ஆங்கிலமும் தமிழும் ஆற்றொழுக்காய் நாவில் வர பூங்காற்றில் தமிழ் எழுதிப் போக விட்ட புதிய கவிஞன்.
'புத்திவாத்தி' என்ற பெருமையினை மறந்து, தன்னைத்தானே "சோத்தி வாத்தி" சொல்லிக் கொண்டு தாழ்வுச் சிக்கலில் தவித்துக் கொண்டிருந்தவன், பின்னர் தன் வாழ்வுச் சிக்கலுக்கு விடை தேடி விழி மூடிக் கொண்டவன்.
மண்மீட்கப் போராடி, மண்ணுக்கே உரிமை மாவீரத் தம்பியர் இருவருக்கும், தங்கையர் இருவருக்கும் முன்னோடியாய்ப் பிறந்த மூத்த பிள்ளை.
வாழ்வு தேடி, வன்னிக்கு இடம் பெயர்ந்து வந்த என்னை தன் கவிதைக் கண்ணிகளில் கட்டிவைத்துக் கொண்டவன். இதை எண்ணிப் பெருமை கொண்டேன், என்னை இழப்பிலும் ஏமாற்றம் பெற்ற இதய உறவு இவன்.
ஆனால் — மின்னாமல் நட்பிலுக்குள் மின்னலாய் மறைந்துவிட்டான்.
இன்று, கண்கள் வழிந்தோடத் தனக்காக கவிதை எழுதவைத்தான்.
புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும், சொந்த நிலம் மறந்து வாழாத தங்கையர்கள் - அவர்களில் மூத்தவள் சந்திரவதனா செல்வக்குமாரன்; தன் தமையனாம் இந்தத் தமிழ்க்கவிஞனை தமிழ்க்குலம் மறக்கவொண்ணாது என்பதற்காக தொகுத்துக் கொடுத்த கவிச்சுடரே 'தீட்சண்யம்'.
ஆங்காங்கு சிதறுண்டு கிடந்த தீட்சண்யனின் கவிதைப் பூக்களைச் சேர்த்தெடுத்து மாலையாக்கித் தமிழ்த் தாய்க்குச் சூட்டிய கவிமாலையே 'தீட்சண்யம்'.
[illegible]
கவிஞர் வற்றாப்பளையூர் தீட்சண்யனின் ஆத்மசாந்திக்காக அவன் தங்கை செய்யும் பூசைக்கு ஏற்ற பூவே இந்தப் புத்தக வடிவம் 'தீட்சண்யம்'.
மறைந்த கவிஞர்-மக்கள் மனங்களால் மறையக் கூடாது என்பதற்காக 'தங்கை தமையனுக்காற்றும் நன்றிக்கடனிது'.
தங்கை சந்திரவதனாவின் கணவர், கவிஞர் தீட்சண்யனின் மைத்துனர் செல்வக்குமாரனின் சித்திர வேலைப்பாடுகளும், இந்த நூலை வடிவமைப்புச் செய்து தக்கதொரு பெருமை சேர்க்கின்றன.
கவிஞரின் கவிதைகளை -
குடத்துள் விளக்காய் குன்றியிருந்தவை, குன்றின் மேல் விளக்காய் ஒளி ஏற்றி வைக்கும் இவர்களின் முயற்சி, அவர்கள் தம் இலட்சியத்தில் வெற்றிபெற செய்யும் நன்றிக்கடன் மட்டுமல்ல; தமிழ் உலகிற்குச் செய்யும் திருப்பணி என்பதே எனக்குள்ள திருப்தி.
இவர்கள் நற்பணியும், கவிஞர் தீட்சண்யன் புகழும் நிலைக்கட்டும்.
நன்றி
[illegible]
[illegible]/10/02.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டிச் சென்ற தென்றல் தீட்சண்யன்

என்னைத் தீண்டிச் சென்ற தென்றற் காற்று. கவிதை தீந்தமிழ் சுரந்த ஊற்று. நேற்றிருந்தார் இன்றில்லை என்ற நெடுநாள் மொழிக்கொப்ப கூற்றுவனார் ஊர் புகுந்த குயில்.

மாற்றான் எறிகணையால் கால் ஒன்று துண்டு பட, மறுகாலும் கையும் ஊனமுற ஆற்றல் போச்சே என்று அந்தரித்து அமர்ந் திருந்த ஆசான். அந்நிலையிலும் கன்னித் தமிழில் கவிப்புனல் சுரந்த ஊருணி.

ஆங்கிலமும் தமிழும் ஆற்றொழுக்காய் நாவில்வர பூங்காற்றில் தமிழ் எழுதிப் போக விட்ட புதிய கவிஞன்.

'புத்தி வாத்தி' என்ற பெருமையினை மறந்து, தன்னைத்தான் 'சொத்தி வாத்தி' என்று சொல்லிக் கொண்டு தாழ்வுச் சிக்கலில் தவித்துக் கொண்டிருந்தவன். பின்னர்தான் வாழ்வுச் சிக்கலுக்கு விடைதேடி விழி மூடிக் கொண்டவன்.

மண் மீட்கப் போராடி மண்ணுக்கே உரமான மாவீரத்தம்பியர் இருவருக்கும், தங்கையர் இருவருக்கும் முன்னோடியாய்ப் பிறந்த முதற்பிள்ளை.

வாழ்வு தேடி வன்னிக்கு இடம் பெயர்ந்து வந்த என்னைத் தன் கவிதைக் கண்ணிக்குள் கட்டி வைத்துக் களித்தவன். இதை எண்ணிப் பெருமை கொண்டேன். ஏனெனில் இழப்பினுள்ளும் யான்பெற்ற இதய உறவு இவன்.

ஆனால், மூன்றாண்டு நட்பினுக்குள் மின்மினியாய் மறைந்து விட்டான். இன்று, கண்கள் வழித்தூற்ற தனக்காகக் கவிதை எழுத வைத்தான்.

புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் சொந்த நிலம் மறந்து வாழாத தங்கையர்கள். அவர்களில் மூத்தவள் சந்திரவதனா செல்வ குமாரன். தன் தமையனாம் இந்தத் தமிழ்க்கவிஞனை தமிழ்க் குலம் மறக்கக் கூடாது என்பதற்காகத் தொடுத்துக் கொடுத்த கவிச்சரமே 'தீட்சண்யம்'.

ஆங்காங்கு சிதறிக் கிடந்த தீட்சண்யனின் கவிதைப் பூக்களைச் சேர்த்தொன்றாய் மாலையாக்கி தமிழ்த்தாய்க்குச் சூட்டிய கவியாரமே 'தீட்சண்யம்'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் வற்றாப்பளையூர்த் தீட்சண்யனின் ஆத்மசாந்திக்காக அவன் தங்கை செய்யும் பூசைக்குரிய பூவே இந்தப் புத்தக வடிவம் 'தீட்சண்யம்'.

மறைந்த கவிஞர், மக்கள் மனங்களால் மறையக் கூடாது என்பதற்காக தங்கை தமையனுக்காற்றும் நன்றிக்கடனிது.

தங்கை சந்திரவதனாவின் கணவர், கவிஞர் தீட்சண்யனின் மைத்துனர் செல்வகுமாரனின் சித்திர முத்திரைகள் புத்தகத் துக்குத் தனி மெருகூட்டி நிற்கின்றன.

கவிஞரின் கவிதைகளை, குடத்துள் விளக்காய் குன்றியிராமல், குன்றின் மேல்விளக்காய் ஒளிர ஏற்றி வைக்கும் இவர்களின் இம் முயற்சி, அவர்கள் தம் குடும்பத்தில் ஒருவருக்குச் செய்யும் நன்றிக்கடன் மட்டன்று. தமிழ் உலகிற்குச் செய்யும் திருப்பணி என்பதே எனக்குள்ள திருப்தி.

இவர்கள் நற்பணிகளும், கவிஞர் தீட்சண்யன் புகழும் நிலைக்கட்டும்.

நன்றி

**நாவண்ணன்**
*25.10.2002*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியிலே கவி படித்த வானம்பாடி வற்றாது சுரந்து நின்ற தமிழின் ஊற்று

பிறேமராஜன் எஸ்.ரி. பிறேமராஜன் எனவும், பிறேம்மாஸ்ரர் எனவும் நண்பர்கள் மத்தியிலும், கற்றோர்கள், உற்றோர்கள் மத்தியிலும் நன்கு அறியப்பெற்றவர்.

வடமராட்சியின் வீரம் விளையும் பருத்தித்துறையின் அழகிய ஊரான ஆத்தியடியில் 30.1.1958 அன்று தியாகராஜா, சிவகாம சுந்தரி தம்பதிகளின் மூத்த முத்தாக வந்துதித்தவர்.

ஆரம்பக்கல்வியை வடமராட்சி இந்துமகளிர்கல்லூரியிலும், உயர் கல்வியை ஹாட்லிக் கல்லூரியிலும் திறமையாகக் கற்றவர். சின்ன வயதிலேயே கல்வியிலும், கலைகளிலும் பேச்சு வன்மையிலும் விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கியவர். பன்னிரண்டாவது வயதிலேயே தனது முதற்கவிதையை எழுதி பாடசாலையில் ஆசிரியர்களின் பலமான பாராட்டைப் பெற்றவர். தமிழை மட்டுமின்றி சிங்களத்தையும், ஆங்கிலத்தையும் நன்கு கற்று, தங்கு தடையின்றிப் பேசியவர்

எழுவருக்கு அண்ணனாய், ஆசானாய், குறும்பில் மன்னனாய், நண்பர்கள் மத்தியில் மிகுந்த கலகலப்பானவராய் சுற்றி இருந்த எல்லோரையும் குதூகலிக்க வைத்தவர்.

கற்று முடித்து மதவாச்சியில் தொழில் நுட்பவியலாளராகக் கடமையாற்றியவர். என்ன நினைத்தாரோ! வெளிநாடு சென்று பொருள் தேட எண்ணியதில் சிங்கப்பூர் பயணமானார். ஒரு மாதம்தான், வெளிநாடு இவருக்குப் பிடிக்கவில்லை. தாயகத் திற்கே திரும்பி விட்டார். தொழில்நுட்பத்தைவிட ஆசிரியப் பணி இவருக்குப் பிடித்தமானதால் பேராதனை வரை சென்று கற்கத் தொடங்கினார்.

1983இல் கற்பின் தெய்வமாகக் கருதப்படும் கண்ணகி உறைந் துள்ள பத்தாம்பளையில் பிறந்த மஞ்சுளாவை மனையாளாக வரித்து, வளங்கொழிக்கும் வற்றாப்பளையில் தனது இல்லறத்தை இனிதே தொடங்கினார். இல்லறமும் பேராதனை ஆசிரியக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியும் இனிதே தொடர்ந்து, அதி சிறந்த சித்தியடைந்து ஆங்கில ஆசிரியரானார்.

தமிழிலிலும், ஆங்கிலத்திலும் இவர் பெற்றிருந்த புலமையும் இயல்பாகவே இவர் கொண்டிருந்த கற்பிக்கும் திறமையும் ஆசிரியப் பணிக்கு இவர் மிகவும் பொருத்தமானவர்தான் என்பதை எல்லோருக்கும் பறைசாற்றியது.

இந்த இனிமையான நிலையில்தான் ஈழத்தில் போர் மேகம் சூழத் தொடங்கியது. மண்மீது பாசம் இவர் மனை கொண்டது. இவருக்குப் பின்னவராம் இவரோடு பிறந்தவர்களான மொறிஸ், மயூரன் இருவரும் தாயக மீட்பிலே தமை அர்ப்பணித்துக் கொள்ள இவர் ஈழத்தை நேசித்த தேசக்கவியானார்.

1990 இல் தாண்டிக்குளம் தாண்டுகையில்தான் அந்த அவலம் நடந்தது. இடது கால் தொடையோடு அறுந்து போக, வலதுகால் பெருவிரல் தொலைந்து போக, இடதுகை அறுந்து அந்தரத்தில் தொங்க ராஜ நடைபோட்ட இவர் வாழ்வில் இருள் சூழ்ந்து கொண்டது. ஊன்றுகோல் இன்றி நடக்க முடியாது ஊனமாகிப் போனார். மனது தாழ்வுச் சிக்கலில் தளர்ந்து போக 'ஊனமுற்ற வாத்தி நான்' என்று வாட்டமுடன் கூறினார்.

ஆனாலும் தாயகமீட்பில் தளராத விருப்பும் நம்பிக்கையும் வைத்து, யாருக்கும் முகம் காட்டாமலே, எவருக்கும் முகவரி தெரியாமலே பொட்டம்மானின் அருகில் உள்ளிருந்தே தன் பணியைத் தொடர்ந்தார். உலகெலாம் பரந்திருந்த போராட்டம் சம்பந்தமான ஆங்கில நூல்களை தமிழில் மொழிபெயர்ப்பது இவரது அரும்பணியாக, இவருக்கு ஆத்மதிருப்தி தரும் பணியாக இருந்தது. 'தீட்சண்யன்' என்ற பெயர் கொண்டார். புலிகளின் குரல் வானொலியில் கவி மழை பொழிந்தார். கவியரங்குகளிலும் கவிதைப் போட்டிகளிலும் தன் குரலிலேயே போர்ப்பறை அடித்தார். அது மட்டுமா, எந்த விழாக்கள் விளையாட்டுப் போட்டிகள் என்றாலும் ஆங்கிலத்தில் அறிவிப்பாளராய் இவர்தான் முழங்கினார். குரல்வளத்தால் எல்லோரையும் கவர்ந்து கொண்டார்.

தான் கல்வி கற்பிக்கும் வற்றாப்பளை மகாவித்தியாலயத்தின் ஆங்கிலதினப் போட்டிகளிலும், தமிழ்தினப் போட்டிகளிலும் இயல் இசை நாடக வடிவில் நிகழ்ச்சிகளை உருவாக்கி பாடசாலை மாணவர்கள் எல்லோரையும் முதலிடம் பெறவைத்து மாவட்ட மட்டத்தில் பாடசாலைக்கு ஒரு தனி இடம் பெற்றுத் தந்து பெருமை சேர்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'வெளிநாடு வந்து விடு'*
என்று சகோதரர்கள் அழைத்த போதெல்லாம்

"EAST OR WEST HOME IS BEST"
என்று சொல்லி மறுத்து விட்டார்.

*வாழ்ந்தால் பயனுடன் வாழ்வேன் — அன்றில்*
*கணத்தில் சாவேன்*
என்பது அவர் தாரக மந்திரம்.

அதற்கொப்ப வாழ்ந்தார் பயனுடன். நோய்வாய்ப்பட்ட போது மருத்துவம் வஞ்சிக்க வீழ்ந்தார் *13.5.2000* அன்று. தாயகம், தேசத்தை நேசித்த ஒரு நேசக் கவிஞனை இழந்து கண்ணீர் சொரிந்தது.

*வீழ்ந்தது வெற்றுடல்தான்*
*வாழ்கின்றார் கவிதைகளில் தீட்சண்யன்.*

**தூரிகை**
**2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சமுதாய அமைப்பிலும், மனித உறவுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வரும் காலகட்டத்தில் வாழும் ஆக்க இலக்கியக் காரரின் உணர்வினை புதிய சூழ்நிலையால் தோன்றும் மனித இன்னல்கள் தாக்குகின்றன. இதுவே நவீன இலக்கியத்தின் கருவாக அமையும்.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் 1950 முதல் 1980 வரை ஆதிக்கம் செலுத்திய தமிழ்த்தேசிய உணர்ச்சி, வர்க்கப் போராட்ட எழுச்சி என்பன சாத்வீகத்தை தம் ஆயுதமாகக் கொண்ட நிலை படிப்படியாக மாறத் தொடங்கி 1981இல் ஒரு புதிய வடிவத்தைப் பெற்றன.

ஐம்பதுகளில் ஈழத்தமிழர்களின் உரிமைகளைப் பாராளுமன்ற ஜனநாயக மூலமாகவும், சாத்வீகப் போராட்டம் மூலமாகவும் வென்றெடுக்கலாம் என்ற நம்பிக்கை நிலவியது. அக்கால இலக்கிய கர்த்தாக்களும் இந்தக் கருத்து நிலையையே பிரதி பலித்தனர்.

கத்தி, இரத்தம் எதுவுமின்றி
கையில் வாள், கணை, ஈட்டி இன்றி
சித்தமிசைச் சினம் ஏதுமின்றி
சிங்களர் மீது குரோதம் இன்றி
எத்திசை யும்வியப் பெய்த இங்கே
ஈழத்தி லேயறப் போரிடுவோம்

என முருகையன் பாடியுள்ளதை அவதானிக்கலாம்.

எண்பதுகளின் பின் கவிதையின் சுருதி மாற்றத்தைக் காணக் கூடியதாக இருக்கிறது. விடுதலை உணர்வின் போக்கில் மாற்றம் ஏற்பட்டது.

அகிம்சைப் போராட்டத்தால் ஈழத்தமிழரின் உரிமைகளை வென்றெடுக்க முடியாது என்பதைக் கண்ட இளைய தலைமுறையினர் ஆயுதம் ஏந்தத் தலைப்பட்டனர். நீறு பூத்த நெருப்பாக இருந்த சிங்களப் பேரினவாதம் தன் அக்கினிப் பிழம்பைக் காட்டத் தொடங்கியது. பேரினவாதத்தின் ஒடுக்கு முறைத் தாக்குதலினால் இதுவரை நிலவி வந்த சாத்வீகப் பண்பாட்டின் ஆழமின்மையும், வெறுமையும் உணரப் பட்டது. சமுதாயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைபொருளான இலக்கியமும் -- சிறப்பாகக் கவிதையும் -- புதிய திசையிலே வீறுநடை போட வேண்டியது வரலாற்று நியதியானது.

ஆனையிறவு வீழ்ச்சி பற்றி நிலாந்தன் எழுதிய கவிதை இந்தத் திசைமாற்றத்தைச் சுட்டி நிற்கிறது.

யாரங்கே
தளபதிகளை மாற்று
அஸ்திரங்களை மாற்று, வியூகங்களை மாற்று
செய் அல்லது செத்து மடி
ஓர் இரவுக்குள்
ஓராயிரம் யானைப் பலம்
எல்லாளர்களுக்கு எப்படிக் கிடைத்தது

இளையதலைமுறைக் கவிஞர்களான சேரன், வ.ஐ.ச.ஜெயபாலன், கனகரவி, நிலாந்தன், முதலானோர் ஆயுதப் போராட்டம், போராளிகளின் தியாகம், பேரினவாதிகளின் இராணுவ அட்டூழியங்கள், மக்களின் அவலங்கள் என்பவற்றைத் தம் கவிப்பொருளாக்கினர். இந்த வரிசையில் வந்தவர்தான் 'தீட்சண்யன்' என்ற கவர்ச்சியான புனைபெயரில் தன்னை மறைத்துக் கொண்டு கவிதை யாத்த 'பிறேமராஜன்'.

இவர் தனது பன்னிரண்டாவது வயதிலேயே கவிதை இயற்றி ஆசிரியர்களின் பாராட்டுக்களைப் பெற்றவர் எனினும் எண்பது களுக்குப் பின்பே கவிதையுலகில் பிரகாசிக்கத் தொடங்கினார். இவர் எந்தத் தலைப்பில் பாடினாலும் விடுதலை வேட்கை, பேரினவாத ஒடுக்கு முறை, போராளிகளின் வீரம், தியாகம், மக்களின் அவலங்கள் முதலான உணர்வுகளே மேலோங்கி நிற்கின்றன. இவரது மறைவுக்குப்பின் வெளிவரும் 'தீட்சண்யம்' என்னும் இக்கவிதைத் தொகுப்பிலுள்ள கவிதைகளைப் பின்வரு மாறு வகைப்படுத்தலாம்.

- இராணுவ நடவடிக்கைகள்
- போராளிகளின் வீரம், அஞ்சா நெஞ்சம், தேசப்பற்று, தியாகம்
- மாவீரர் அஞ்சலிக் கவிதைகள்
- மருந்துத்தடை, பொருளாதாரத்தடை
- மக்களின் அவலங்கள்
- பொது, ஆசிரியர், மாணவர், ரசனை, காதல்,

சூரியக் கதிர், சத்ஜெய, ஜயசிக்குறு, எடிபல முதலான இராணுவ நடவடிக்கைகளில், போராளிகள் காட்டிய வீரதீரச் செயல்கள் கவிதையாக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடிபலவில் எம் பெடியள் விநயமாய் விலகிநிற்க
புலிப்பலம் உடைந்ததென்று பேயனாய் நீ புரிந்து - எம்மிடம்
அடிபட வென்றே ஒரு
அழகான திட்டமிட்டாய் - அதுவோ
ஜயசிக்குறு என்ற பெயரளவில் முழிக்கிறது
கோடானு கோடியாய்க் குவித்திட்ட ஆயுதமும்
ஏராளமான சிங்களப் படைகளும் எம்
வீராதி வீரப் புலிகளின் விரலசைவில்
ஊனமுற்றுப் போய் ஒருக்களித்து நிற்குதையா

என்னும் கவிதை ஜயசிக்குறு இராணுவத்தின் தோல்வியை விபரிக்கிறது.

கரும்புலிகளின் தியாக வரலாறு பின்வரும் கவிதையில் இடம் பெறுகின்றது.

மனித நேயங்கள் மதிக்கப் படாத போது
மனிதக் குண்டுகளாய் மாறிக் கொள்பவர்கள்
எங்கள் அடையாளங்களை
நிலை நிறுத்துவதற்காக
தங்கள் அடையாளங்களை
விலையாகக் கொடுப்பவர்கள்!

மாவீரர்களே!

பாசத்தை மறந்து தேசத்தின் விடுதலைக்காய்
பாடையிலே போனவரே
ஆசையுடன் உமை அள்ளி அணைத்த
அன்னையைப் பிரிந்தீரே
தேசமே பற்றென நெஞ்சில் வரித்து
போர்க்களம் புகுந்தவரே...

என்னும் கவிதையில் சொந்த பந்தங்களை மறந்து தேசப்பற்றுடன் போர்க்களம் புகுந்து சாவைத் தழுவிக் கொண்ட போராளிகளின் சரித்திரம் விரிகிறது.

மாவீரர் அஞ்சலிக் கவிதைகளே இத்தொகுதியின் பெருமளவு இடத்தை அடைக்கின்றன. தியாகி திலீபன், கரும்புலி மில்லர், கப்டன் மயூரன், கப்டன் மொறிஸ், பட்டேல் அண்ணா, மாவீரன் கலையரசன், கிங்ஸ்லி உதயன் முதலானோருக்கான அஞ்சலிக் கவிதைகள், மாவீரர்களுக்கான அஞ்சலிக் கவிதைகள் என்பன இத்தொகுதியில் இடம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரின் வீதிதனில் நாடறியாச் சன வெள்ளம்
இலட்சோப இலட்சமாய் பட்சமிகு மக்கள்
கண்ணீரும் கதறல்களும் காற்றோடு பேசத்
திலீபன் கண்ணோடு கண் மூடினான்

என்னும் திலீபன் அஞ்சலிக் கவிதை எமது மனத்தையுருக்கும்.

'எங்கே போகிறோம்' என்னும் கவிதை மருந்துத்தடை, பொரு ளாதாரத்தடை, என்பவற்றால் மக்கள் படும் அவலத்தைக் கோடி காட்டுகின்றது.

மூளைக்குள்ளேயே லேசர்க் கதிரினால்
நுட்பமான சத்திரசிகிச்சை நடக்கிறது
ஆனால் நாமோ
தலையிடிக்குப் போடப் பனடோலுக்கும் வழியின்றி
தடிமனுக்குப் போடப் பிறிட்டோனுக்கும் வழியின்றி
எங்கே போகிறோம் நாம்
நியோன் ஒளி வெள்ளம்
எலெக்ரோனிக் மின் நடனம் என
நகரங்களெல்லாம் பிரகாசித்துப் பளபளத்து
நர்த்தனமாட, நாம்
குப்பி விளக்கிற்கு எண்ணெய் தேடி
குடும்பக் காட்டுடன் கியூவில் நிற்கிறோம்.

கவிஞர் பிறேமராஜன் மரபுக்கவிதையிலும், புதுக்கவிதையிலும் பரிச்சயமுடையவர் என்பதை 'தீட்சண்யம்' கவிதைத் தொகுதி காட்டுகின்றது. சாதாரண கிராமிய வழக்குச் சொற்களை மரபுக் கவிதையில் பயன்படுத்தி கவிதையை மிகவும் எளிமையாக்கி யுள்ளார். புதுக்கவிதையில் வழக்கமாக ஆக்கிரமிக்கும் படிமங் கள் இவர் கவிதைகளில் இல்லை. சொல்ல எடுத்துக் கொண்ட வற்றை கலைநயத்துடன் கவிதையாக வடித்துள்ளார்.

இக்கவிதைத் தொகுதியில் சமகால நிகழ்வுகள் ஆவணப்படுத்தப் பட்டிருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

**முல்லைமணி**
**(வே.சுப்பிரமணியம் S.I.E.A.S)**
**இலக்கியச் செல்வர், தமிழ்மணி, கலாபூஷணம்**
**நாவலர் வீதி**
**முள்ளியவளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கவிஞர் தீட்சண்யன் எனது நெருங்கிய நண்பர். பிறேம்மாஸ்ரர் என்று அறியப்படுகின்ற அந்த இனிய மனிதரின் உள்ளக் கிடக்கைகளின் சில பக்கங்களை அறிந்தவன் என்ற தகுதியில் இந்த தீட்சண்யத்துக்கான முன்னுரை எழுத விளைகிறேன்.

தீட்சண்யன் ஒரு யதார்த்தவாதி. தமிழீழத் தேசிய விடுதலைப் போரில் இரண்டு மாவீரர்களை அர்ப்பணித்த ஒரு குடும்பத்தின் மகன். அவரது மும்மொழிப் புலமை விடுதலைக்கு அவர் ஆக்கபூர்வமான பணியாற்ற அவருக்குத் துணை நின்றது. அவரோடு தொடர்பு பட்டவர்களுக்கு மட்டுமே அவரது பணிகள் தெரியும். தனது பணிகளின் நெருக்கடிகளிற்கு இடையில், தனது கால் இழப்பின் பாதிப்பின் மத்தியிலும் அந்த அற்புதமான கவிஞன் பேனாவை எடுத்தால் சொற்கள் அவன் சொற்கேட்கும் என்று சொல்கின்ற அளவுக்கு ஆழமான கவிதைகள் ஊற்றெடுக்கும்.

தனது அங்கவீனத்தை எண்ணி நொந்துகொள்ளும் சில மாலைப் பொழுதுகளில் – அந்த நெஞ்சத்தின் வேதனை என்னையும் பாதித்ததுண்டு. அந்தப் பொழுதுகளில் அந்தக் கவிஞன் – ஒரு குழந்தையைப் போல தேம்பியதுண்டு. எனினும் மறுகணமே தன்னைச் சுதாரித்துக் கொள்ளும் 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' அவரிடம் இருந்த படியால்தான் காலத்தால் அழியாத கவிதைகளையும் விடுதலைப் போருக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பையும் அவரால் வழங்க முடிந்தது.

'தீட்சண்யம்' என்ற இந்த நூலில் தீட்சண்யன் சிங்களத்தின் எறிகணை வீச்சுக்கு காலை இழக்க முன்னும் பின்னும் எழுதிய கவிதைகள் உள்ளன. 'அன்னைக்கோர் கடிதம்' என்ற கவிதை தீட்சண்யனின் சோகத்தை எங்கள் இதயங்களிலும் ஊடுருவ வைக்கிறது.

> கொள்ளிக்கும் கொடுப்பனவு இல்லாமற் போய் விட்ட
> 'ஷெல்'லின் பாற்பட்ட வெறும் ஊனனாகி விட்டேனே!

என்ற வரிகள் அவரது துயரத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்சண்யனின் 'எங்கே போகிறோம்..?' என்ற கவிதை அன்றைய வன்னியின் அவல நிலையை, ஒவ்வொரு வன்னித்தமிழனும் சொல்ல நினைத்து முடியாமல் போய் விட்ட வார்த்தைகளை மிக அழகாகச் செப்புகிறது.

குப்பி விளக்கிற்கு
எண்ணெய் தேடி
குடும்பக் காட்டுடன்
கியூவில் நிற்கிறோம்
உண்மையில் நாம்
எங்கே போகிறோம்...?

என்று கேட்கின்ற தீட்சண்யனின் கேள்வி யதார்த்தமானது.

'வீரம் சுமந்து வா தோழி!' என்ற கவிதையில் பெண்ணுக்கு அவர் விடுக்கும் அழைப்பு பாரதியின் பரம்பரை ஈழத்திலும் தொடர்கிறது என்பதை எடுத்தியம்புகிறது.

குனிந்து நடந்து
குரல் வளையது
நலிந்து நின்றது போதும்
நிமிர்ந்து தோளில் போர்க்கலனைச்
சுமந்து வந்திடு தோழி!

என்று அவர் விடுக்கும் அழைப்பு அவரின் பெண்கள் தொடர்பான கருத்தோட்டத்திற்கு சான்று பகர்கின்றது.

'திரும்புங்கள்.. வாருங்கள்.. ஏந்துங்கள்..' என்ற கவிதை இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலப்பகுதியில் எழுதப்பட்டது. அதில் கவிஞர் சொல்கிறார்

...சொந்த மண்ணிலே வீதியிலே
எங்கள் காணிகள் மனைகளில்
மனைவிகளில் கூடவா
மாற்றானின் விரல்கள்..?

எவ்வளவு நாசூக்காக எம்மீது திணிக்கப்பட்ட அடக்கு முறை சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

'கரும்புலிகள்' என்ற கவிதையொன்றில்

முகம் தெரியாமலே
மறைந்து போன இவர்கள்
சில சமயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவரொட்டிகளிலும் கூடத்
தலை காட்டுவதில்லை...

*என்ற வரிகள் எவ்வளவு தூரம் ஆழமானவை..!*

*கவிஞர் தீட்சண்யனின் கவிதைகள் அர்த்தம் நிறைந்தவை மட்டுமல்ல. சந்தம் நிறைந்தவையும் கூட. 'இந்த நூற்றாண்டில் இவன் போல் யார் உளர்' என்ற கவிதையில்*

உடலைக் கருக்கியுன்
குடலைக் கருக்கி நீ
கடலைப் பிளந்திடும்
தியாகப் போர் தொடுத்தாய்
விடலைப் பருவத்து
விருப்புகளைத் துறந்தாய்
குடலைப் பருவத்தில்
குலத்துக்காய் மடிந்தாய்...

*என்ற வரிகள் இதற்குச் சான்று பகர்வன.*

*புரட்சிக்கனலாகச் சுடரும் இவர் மார்கழிப் பனியாகக் குளிரும் கவிதைகளையும் எழுதுவதில் வல்லவர். 'ரசனை', 'லயம்' என்ற கவிதைகள் இதற்குச் சான்று பகர்கின்றன.*

*இறுதியாக...*

இங்கே தயவு செய்து மலர் போட வேண்டாம்
தமிழீழத்துக்குக் கொஞ்சம் உரமேற்றுங்கள்...

*என்ற வேண்டுகோளுடன் தீட்சண்யனின் பேனா மௌனித்து விட்டது. என்றாலும் அவர் கவிதைகள் ஊடாக காலமெல்லாம் வாழ்ந்து கொண்டிருப்பதை 'தீட்சண்யம்' உங்களுக்கு உணர்த்தும்.*

**திரு. க. ஜெயவீரசிங்கம் BA (ஆசிரியர்)**
**வற்றாப்பளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எனது அண்ணன் தீட்சண்யன் 1970இல் இருந்தே கவிதைகள் எழுதிக் கொண்டிருந்தாரானாலும், தமிழரது விடுதலைப் போராட்ட காலத்தின் ஒரு பகுதியான 1987 இலிருந்து 2000ம் ஆண்டு மே மாதம்வரை அவரால் எழுதப்பட்ட கவிதைகளிலிருந்து என்னால் சேகரிக்க முடிந்த 92 கவிதைகளே இத்தொகுப்பில் இடம் பெறுகின்றன. (இக்கவிதைகளில் சிலவற்றை மீள் பார்வை செய்து முழுமைப்படுத்துவதற்கு முன்னரே தீட்சண்யன் மரணத்தைத் தழுவிக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது)

இவ்வேளையில், அண்ணனின் மரணச்செய்தி கேட்டு, ஆற்றொணாத்துயரில் நான் ஆழ்ந்திருந்தபோது அண்ணனின் இந்தக் கவிதைகளை ஒவ்வொன்றாக எனக்கு அனுப்பி வைத்த அண்ணியையும், மருமகன் கௌசியையும், 2002இல் இக்கவிதைத் தொகுப்பை நான் தொகுக்க முனைந்தபோது இது வெளிவர வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வமும், முனைப்பும் காட்டிய அண்ணனின் நண்பரும், நாட்டுப் பற்றாளருமான கவிஞர் நாவண்ணன் அவர்களையும், அணிந்துரை தந்த அண்ணனின் நண்பர் முல்லைமணி (வே.சுப்பிரமணியம் S.I.E.A.S) அவர்களையும், முன்னுரை தந்த அண்ணனின் நண்பர் திரு.க. ஜெயவீரசிங்கம் (BA, ஆசிரியர், வற்றாப்பளை) அவர்களையும், 2002இல் வன்னியில், அண்ணன் இல்லாத எனது அண்ணனின் வீட்டுக்குச் சென்று மனம் கலங்கி, விழி கசிந்து நின்ற போது "மாமி, மாமி" என்றபடி என் பின்னால் திரிந்து, விடுபட்ட கவிதைகளைச் சேகரித்துத் தந்த எனது மருமகன் (பரதன்) மாவீரன் கப்டன் மயூரனையும், இப்புத்தகத்தை நான் வெளியிடுவதற்கு உகந்த சில உதவிகளையும், ஆலோசனைகளையும் தந்த திரு. பத்மனாப ஐயர் அவர்களையும், கவிதைகளுக்குப் பொருத்தமாக ஓவியங்களை வரைந்து தந்த எனது கணவர் மூனாவையும், ஒவ்வொரு பொழுதிலும் எனக்குத் துணையாகவும், பலமாகவும் நின்ற எனது அன்பு அம்மாவையும் நெஞ்சார்ந்த நன்றியோடு நினைத்துக் கொள்கிறேன்.

**சந்திரவதனா**
**21.04.2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைந்து.. நினைந்து..

அண்ணனா... தீட்சண்யனா..?
எனக்குள் என்றும் உயிர்ப்புடன்
கிளைவிடும் பெரு விருட்சம் போல.!
அவ்வப்போது ஆறுதலுக்காய்...
அதன் கீழ் நான்..!
மெல்லிய தென்றலென வருடும்...
குளிர்ந்த இலைகள்...
துயரைத் துடைக்கும் கிளைகள்...
காற்றில் மோதியெழும் இனிய நாதமென...
எப்பவும் ரீங்கரிக்கும் கவிதை வரிகள்...
அல்ல... அல்ல... நீ உதிர்த்த வார்த்தைகள்!


வரிகளிற்குள் அடக்கிவிட முடியா மலைப்பு!
பேசியவை சில தான்...
பேசாமல் பேசவைத்தவை பல!
கைபற்றி அழைத்து... இன்னுமோர் அறிவுலகுள்
என் கால் பதிய வைத்த உன் காருண்யம்...
என் நெஞ்சு கரைகிறது..!
மலைப்பும் மகிழ்வும் நெருடலுமாய்...
கரைந்து... நெகிழ்ந்து... நாம்!
நீ மட்டும் கவிதை வரிகளிற்குள்...
எப்பவும் அடங்கி விடாமல்..!!

**சந்திரா. ரவீந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சியின் வீரம் விளையும்
பருத்தி நகரில் பிறந்தவன்
இடம் பெயர்வென்று ஏதும் வர முன்னரே
வன்னிக்கு நகர்ந்தவன்
வற்றாப்பளையென்னும் வளம் கொழி பூமியில்
வாழ்வு அமைத்தவன்
எத்தேசத்திருப்பினும் ஈனமாய் வாழ்வதை
முற்றாக வெறுப்பவன்
சுதந்திர வேட்கையின் சூக்கும வேதத்தை
உள்ளாரச் சுகிப்பவன்
உடலால் ஊனமுற்றிருப்பினும்
உளத்தால் களத்தில் நிற்பவன்
ஆடாத் தலைவனின்
வாடா வேகப் புயல் மூச்சதனில் – மாறா
ஈழம் மாண்புடன் மலருமென
மனதார நினைப்பவன்
தீர்க்கமான திடநெஞ்சு கொண்ட
போர்க்குணத் தீட்சண்யன்

**எஸ்.ரி. பிறேமராஜன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வளம் தருவாய்

வடுவுற்ற வாழ்நிலத்தில்
வதங்கி நிற்கும் வளர் பயிர் நாம்
ஒருமித்த உணர்வுடனே தளைகளெலாம் உடைத்தெறிய
வலுவான மனஉறுதி வளம் தருவாய் வரிப்புலியே!

கானகத்துப் பாசறைகள் படைக்கலனால் நிறைந்திருக்க
எம்மகத்துச் சிறார்களெல்லாம் பயிற்சிக்கென அணி திரள
அந்நியப் படைகளை நாம் அழித்தொழிக்கும் வீரநிலை
எம்முளத்தில் வளர்ந்திட நீ வளம் தருவாய் வரிப்புலியே!

சுதந்திரத் தீ எம் மனத்தில்
சுவாலையென மூண்டெரிய
செந்நிறத்தால் களத்தினை நாம் சேறாக்கிக் களையறுக்க
திண்ணியதோள் திடவீர வளம் தருவாய் வரிப்புலியே!


மாகாண அரசை நீ ஏற்காமல் மறுத்ததனை
மதி கெட்ட தனமென்று
மனம் நொந்தோம் அந்நாளில்
ஆகாத அரசதென்று ஆறுதலாய்ப் புரியவைத்தாய்
சீரான சிந்தனையும் தீர்க்க தரிசனமும்
மாறாமல் எமக்கருளும் வளம் தருவாய் வரிப்புலியே!

வேகாத அரசியற் சாம்பாரில் மிதக்கின்ற
பெருமாளும் பெருச்சாளிக் கூட்டமும் கூசி நிற்கும்
தரமான சாட்டையடிக் கவிதை நான் படைப்பதற்கு
வாளொத்த வார்த்தைகளின் வளம் தருவாய் வரிப்புலியே!

**எஸ்.ரி. பிறேமராஜன்**
**(தீட்சண்யன்)**
**24.11.89**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாவீரர்கள்

எங்கள் இலட்சிய மாடத்தின்
அத்திவாரக் கற்களே!
அமைதியாக எம் மண்ணில்
புதைந்திருக்கும் விதைகளே!

பூகம்பங்களாய் களமாடிய நீங்கள்!
பூவிதழ்களாய் விரிந்திருக்கிறீர்கள்—ஆனால்
இங்கெரியும் தீபங்களால் நீங்கள்
மூட்டிடும் விளக்குகள் ஏராளம்!

கல்லறைக்குள்ளிருந்தே களப்புலிகளைப் பிரசவிக்கும்
வல்லமை கொண்டவர்கள் நீங்கள்!
மலர்தூவ வருவோரின் மனங்களில் பொறிபாய்ச்சி
கனல் தெறிக்க வைப்பவர்கள் நீங்கள்!

நெய்யூற்றி உங்கள் முன்னால்
விளக்கெரிப்போம் நாங்கள்—உங்கள்
இலட்சியத்தின் சுமையினை துணிந்தே
பொறுப்பெடுப்போம் நாங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாவீரர் நாள்

எங்கள் தமிழினம் வருடாவருடம்
தீக்குழித்(து) எழும் திருநாள் – இது
திங்கள் முகத்தெழில் திண்தோள் வீரர்கள்
மண்ணில் கண்களை மூடிய நாள்

கண்களில் நீர் கோர்த்து கல்லறைகள் முன்னே– நாம்
நெய்யில் விளக்கெரித்து நெஞ்சில் தீ மூட்டி
பொய்யில்லை உங்களின் இலட்சியப் போரென
மனதில் மை பொறித்து நிரையில் சேர்ந்திடும் நாள்

சந்தனப் பேழைகளே!
உங்கள் சுந்தர வதனத்தைத் தீவந்து சூழுமோ!
சாவின் கணப் பொழுதில் நீங்கள்
வாயில் உச்சரித்த 'தமிழீழம்' மாறுமோ!

எங்கள் கரங்கள் இனிமேலும் தயங்குமோ!
பொங்கும் உணர்வலைகள் நெஞ்சில் வந்து முட்ட
செந்தணல் மூச்செறிந்து வீரம் கொப்பளிக்க
இந்த மாவீரர் நாளில் நாம் களம் புகுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாவீரன் துயிலும் இல்லம்

வெறுமே நிணமும் நீரும் கொண்ட ஒரு பிண்டமல்ல
வீரமும் விடுதலை வேகமும் கொண்டவன்
ஈகமும் மனதில் ஈழமும் கண்டவன்
தானைகள் தகர்த்தொரு தடவழி சமைத்தவன்
எங்கே போர்க்களம் எங்கே பகைவன்—என
வானமும் நடுங்கிட வையகம் நடந்தவன்
மார்பிலே குண்டேற்றி மரணத்தை அணைத்தவன்
உறங்கிடும் கதை சொல்லும் உண்மையின் தலமிது

கற்களும் முட்களும் காலடி நெருட
புற்களும் புழுதியும் பாதம் மறைக்க
கைகளில் சுடுபொறி கருத்துடன் ஏந்தி
விழிகளில் விடுதலைச் செம்பொறி தாங்கி
தலைவனின் காலடித் தடமது தொடர்ந்து – தன்
விழுப்புண் வாங்கிய திண்ணுடல் நோக
காகமும் கழுகும் உண்டிடவென்று
எதிரியைக் கிழித்தவன் உறங்கிடும் பூமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வாழ
மக்கள் வாழும் மண்ணது மீள
கற்கை மறந்தவன்
தாயின் தழுவல்
பொற்கை மறந்தவன்
சொந்த வீட்டுப்
படுக்கை மறந்தவன்
புதுத்
தளிர்க்கை மறந்தவன்
பந்த பாசம் எல்லாம் ஒன்றாய்
வெந்து மாளும்
வேட்கை நிறைந்தவன்

மண்ணிலே தவழ்ந்து
மண்ணிலே நடந்து
மண்ணையே குருதியால் நனைத்து
மண்ணுக்காய் உரமாகி
கண்ணொத்த விடுதலைக்காய்
விண்ணையே அளந்தவன்
விழி மூடும் தலமிது

மாண்டவர்க்கு மனங்கலங்கி
மண்ணிட்ட சமாதியல்ல
வாழ்பவர்கள் சென்று நிதம்
வழிபடுமோர் சந்நிதி
வீழ்ந்தவர்கள் கதை முடிக்கும்
விடுகதையின் முடிவல்ல
சேர்ந்து நிதம் களம் புகுவோர்
வழிபடுமோர் பொன்னடி

மாவீரர் பாதங்களை அடி தொழுவோம் நாங்கள்
ஈகச் சுடரதனில் வழிதெளிவோம் நாங்கள்
மானம் பெரியதெனும் படையணியில் செல்வோம்
ஈனம் எதனையுமே இடர் கண்டு ஏற்கோம்
தானம் தவமிரண்டும் போரினிலே காப்போம்
வானம் திரண்டிடினும் வந்த வழி மீளோம்
ஈழம் எமதெனவே இரு கண்ணில் ஏற்போம்
தலைவர் வழி காட்டும் திசை நோக்கிச் செல்வோம்

**பிரசுரம் - எரிமலை - 47 (மார்ச் 1994)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எங்கள் வளநாடு

வானுயர் பனை மரங்கள் வைரமென வளர்ந்தெழுந்து
பாரினில் எமக்குநிகர் யாரிங்கு உண்டென்று
போரினில் படைத்தபுகழ் பூவினுக் கெடுத்தியம்பும்
சோலைகள் நிறைந்த தெங்கள் ஈழவளநாடு

பனியினை நிகர்த்த மணல்க்கும்பிகள் உயர்ந்தெழுந்து
குவளைகள் வளைய நல்ல கருவளம் கொண்டமணற்
காடுகள் நிறைந்த கடற் கரைகளைக் கொண்டநிலப்
புதுமைகள் குறைந்ததில்லை எங்கள் வளநாட்டில்

மீனினம் பெருகிநிதம் அலைகளிற் றெறித்துவந்து
பூவினில் கதைபடிக்கும் வண்டிசையின் தொனிகூட
நாணிடும் வகையிலொரு கீதமழை யாழ்மீட்டும்
தேனிசைக் கடற்பரப்பால் சூழ்ந்ததெங்கள் நாடு

இறாலினம் கரைகுதித்து நண்டோடு கைகுலுக்க
மானினமும் மரையினமும் புலியோடு கதைபேச
சிங்கத்தின் முதுகினிலே முயல் ஏறி விளையாடும்
மங்காத வளமெல்லாம் பொங்குமெங்கள் நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கக் கடலடியில் கரைவலையைப் போட்டிழுப்போர்
எங்கிதனைக் கொட்டிடுவோம் எப்படி நாம் ஏற்றிடுவோம்
என ஏங்கித் தலை விறைத்து மணலோரம் சாய்ந்திருக்க
திங்கள் ஒளிபட்டு மீன் சிரிப்பதெங்கள் ஈழ வளநாடு

சூடடித்த நெற்களத்தில் விடுபட்ட நெல்மணிகள்
நீரடித்துச் செல்கையிலே வேரோடி விளையும் கதிர்ப்
போர் மட்டுமே போதும் எங்களூர் வயிறடைக்க—என
மார்தட்டிச் சொல்லும்—வளவயல்கள் நிறைநாடு

மாரோடு துப்பாக்கி ரவைகளோடு தானேந்திப்
போராடும் இளம்புலிகள் களமேறும் வேளையிலே
நாவோடு வாய் நனைக்க நல்ல இளநீர் மரங்கள்
பூவோடு பிஞ்சாகப்பொலியும் எங்கள் நாடு

வடக்கோடு கிழக்கிணையும் எல்லைநிலப் பூமியிலே
மிடுக்கோடு நின்றுபுலி அடக்குமுறை கிழித்தெறிய
வனப்போடு இருள் கவிந்த கானக மரங்களெல்லாம்
நிலத்தோடும் நெடிதுயர்ந்தும் நிற்கும் எங்கள் நாடு

நெருப்போடு திடவீரம் நெஞ்சமதில் தினமேந்தி
பொறுப்போடு தமிழர்க்கு அரணாகத் தாம் விளங்கி
இருட்டோடு இருட்டாக படைதுரத்தும் கடற்புலிகள்
கருத்தோடு படகோட்டும் கடலேரி கொண்டநாடு

அடுப்போமோ அடக்குமுறை எனத்தலைவர் விழிநிமிர்த்த
பொறுப்போமா நாமென்று புயலாகப் புலி பாய
விருப்போடு எமதினத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்
உறுப்பான இயற்கை வளம் கொண்டதெங்கள் நாடு.

**26.3.94**

**பிரசுரம் - இளங்காற்று, ஏப்ரல் 1997**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வீரம் விளையும் ஈழவள நாடு

வளங்கள் நிறைந்ததெம் நாடு – புலி
சினங்கொள் களங்களில் போராடும் வீடு
மனங்கள் தளர்ந்திடோம் நாங்கள் – ஈழ
நிலங்கள் என்றென்றும் எதிரிசுடுகாடு

சுற்றி வளைத்ததாய்ச் சொல்வான் – எதிரி
பற்றியே நின்றிடப் பாதையிங்கில்லை
கற்றவர் மற்றவர் எல்லாம் – களம்
கண்டிடத் துடித்திடும் வீரமறநாடு

தடைகள் பலப்பல செய்வான் – எம்
எல்லையில் காடையர் குடியேறவைப்பான்
மடைகள் திறந்து படைவரினும் – மனம்
தூங்காது காத்தெமது புலிவீரன் நிற்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிகள் மீதவன் குண்டுமழை பொழிவான் – எம்
புள்ளிகள் என்றென்றும் புகழ்தொட்டு நிற்கும்
கல்வியின் கூடங்கள் தகர்ப்பான் – நம்
கல்வியோ குலையாது கடல்போன்று பெருகும்

புதுப்புதுப் பெயர்கொண்டு தாக்குதல் செய்வான் – புலி
பார்த்திடப் பின்வாங்கித் தந்திரம் என்பான்
பாதையில் உடல்சிதறித் தொகையாய்க் கிடப்பான் –எதிரி
வானொலியில் தலைகீழாய்ப் பிரச்சாரம் செய்வான்

புலிகள் தொலைந்ததாய்க் கூக்குரல் இடுவான் – எம்
தாக்குதல் மேலிடத் தலைகள் கவிழ்வான்
நாடோறும் வளர்ந்திடும் எங்கள் புலிச்சேனை – தலைவர்
நல்வழி காட்டிடும் ஈழமெங்கள் நாடு

கல்வியும் வீரமும் கலந்தே பயில்வோம் – உயர்
சுதந்திர வேள்வியில் உயிர்கள் கலப்போம்
மானம் எம் வாழ்வென மனதில் பதிப்போம் – இது
விடுதலைப் புலிவீரர் விளைகின்ற நாடு

களங்களில் காவியம் புதிதாய்ப் படைப்போம் – எம்
கருத்தினில் சுதந்திர மோகம் வளர்ப்போம்
கடலினில் தமிழனின் கீதம் இசைப்போம் – இது
மாவீரர் அடிதொழுது வீறு கொள்ளும் நாடு.

**பிரசுரம் - மாவீரர்தின வெளியீடான மாவீரர் பதிப்பகச் சஞ்சிகை, முல்லை மாவட்டம். (1992)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானகம் போன்றொரு....

வானகம் போன்றொரு வையம் அமைத்திட
நேரில் உதித்தவன் எம் தலைவன்
வரி வேங்கையைக் கொண்டொரு சேனை அமைத்து — நல்
ஈழம் படைப்பவன் எம் தலைவன்

பாரினிலே தமிழ்நாடு மலர்ந்திட
போர்க்களம் காண்பது எமது இனம்
மாரினிலே செம் பொறியினைத் தாங்கி
வேலெனப் பாய்வது எமது படை

தோளொடு தோள்தரு தோழர்கள் கூடி
வாளென வஞ்சகர் தலையது வீழ்த்தி
எல்லைகள் எங்கணும் புலிக்கொடி நாட்டி
தொல்லைகள் தீர்க்கும் திருநாடு

பூக்கள் சுமந்திடும் புத்தொளி மங்கையர்
தீக்குள் குளித்தொரு புதுயுகம் படைக்கும்
போர்க்கள காவியம் நித்தம் உயிர்க்கும்
சத்திய பூமி நம்நாடு

பச்சிளம் பாலகர் பந்தடி மறந்து
நிச்சய வெறியுடன் நெஞ்சு நிமிர்த்துவோம்
சுற்றியே நின்றிடும் சிங்களம் வீழ்த்தி
வெற்றி சுமந்தொரு மங்களம் காண்போம்

பாசறை தேடிப் பாய்ந்து புகுந்து — நம்
தேசத்தில் தரித்திரு நீசரை அழிப்போம்
வீரம் விளைந்திடும் ஈழமண் மீட்டு
பாரில் எமக்கொரு தாயகம் காப்போம்

18.3.94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஈழவர் பூமி

வீழ்ந்திடும் வீரரின் சிதைகள் எல்லாமே
விதைகுழி சென்று விதைகள் தளிர்த்து
மாண்டவர் மீண்டொரு விருட்சமே ஆகி
புதிது புதிதாய்ப் போர்க்களம் இறங்கும்
புதினம் நிறைந்தது ஈழவர் பூமி

மங்கையர் கூட மஞ்சளை மறந்து
மையல் இலக்கிய நளினம் துறந்து
பையவே நடந்திடும் பாவனை கடந்து
மனதில் விடுதலைத் தீயை வளர்த்து
களத்தில் சுடுபொறி ஏந்திடும் பூமி

ஆதரவற்ற சிறிசுகட்கெல்லாம்
சீதள அன்பினைச் செறிந்து சொரிந்து
பாதைகள் காட்டி நல் வழி நடத்தி
சாதனை படைக்க சாலை அமைக்கும்
செஞ்சோலைகள் நிறைந்ததெம் பூமி

பகைவனின் படைகளைப் பதுங்கிட வைத்து
பறந்திடும் அசுரக் கழுகுகள் அழித்து
கறுப்பாய் கடலில் நகர்ந்திடும் பேய்களை
கரும்புலிப் பாய்ச்சலில் முழங்கிட வைக்கும்
வரிப்புலிச் சேனைகள் வலம் வரும் பூமி

அசையாத் திடமும் அறிவொளிக் கண்ணும்
பகைமை நடுங்கிடும் பார்வை மிடுக்கும்
தொகையாய்ச் சேனையைக் கட்டிக் காக்கும்
ஆளுமை நிறைந்த தலைமைத் திறனும்
கொண்ட எம் தலைவன் ஆண்டிடும் பூமி

விரைவில் எல்லைகள் புதிதாய்ப் படைப்போம்
உயரே புலிக்கொடி பறந்திட வைப்போம்
வளங்கள் நிறைந்ததொரு தாயகம் சமைப்போம்
புஜங்கள் திரண்டிட தலைகள் நிமிர்வோம்
உலகப் படத்தில் தமிழீழம் பொறிப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் எங்கள் தாகமென்று...



ஈழம் எங்கள் தாகமென்று
வீரம் தன்னை விழி சுமந்து
போரில் நின்று பகையுடைக்கும்
புலிகள் வாழும் நாடடா!

ஈனர் நெஞ்சம் கிழித்தெறிந்து
தானை தடைகள் தகர்த்தெறிந்து
மானம் நமது மாட்சியென்று
படை நடத்தும் வீடடா!

சிங்களத்தின் சிகை பிடித்து
செங்களத்தில் விலா முறித்து
பொய்முகத்தின் திரை கிழித்து
விலங் கொடிப்போம் வாங்கடா!

புத்ததர்மம் பேசிநிற்கும்
பித்தலாட்டக் கும்பலையும்
பேச்சுவார்த்தை ஜாலம்காட்டும்
குள்ளநரிக் கயவரையும்

ஆர்த்தெழுந்து களம் நிறுத்திக்
கழுமரத்தில் ஏற்றுவோம்
கரும்புலியாய் நெருங்கி வந்து
கரும்புகையாய் மாற்றுவோம்

வானம் இடிந்து விழுந்த போதும்
கடல் குமுறி எழுந்த போதும்
தோள்கள் நின்று தினவெடுக்க
எதிரி நோக்கி ஓடுவோம்!

ஈழம் எங்கள் தேசமென்று
வீரம் எங்கள் வாழ்வு என்று
தீரம் கொண்ட தமிழினத்தின்
மானம் காக்க வாழுவோம்!

18.3.94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லையதன் சிறப்பு

செங்கதிரோன் பொற்கிரணம் நீர்ப்பரப்பிற் சிதறி நின்று
தங்கத் தாம்பாளமெனத் தகதகக்கும் காலையிலே
வங்கக் கடல் நெடுகக் கெண்டையன் கிளாத்தியென
துள்ளும் எழில் மீனழகைத் தினம் கண்டு சொல்லவா?

ஞாயிறவன் மேலுயர்ந்து தென்னை இள மரங்களிலே
பச்சையெனச் சிவப்பு எனச் செம்மஞ்சள் வர்ணமதில்
பூரித்த பெரும் இளநீர்க் குலைகளிலே கலை வடித்து
பொன்கமுகு முட்டைகளாய் மின்னலிடல் சொல்லவா?

கோடை வெயிற் கோரமதில் பாளமாய்ப் பிளந்திருந்து
பொட்டல் வெளிப் புழுதிநிலம் கட்டைவேர் களைந்தங்கே
நிலக்கடலைப் புதுத்தளிரில் பனித்துளிகள் மின்ன நிற்கும்
களத்தோற்றப் பசுமையதன் புதுமெருகைச் சொல்லவா?

வளத்தோடு வாழுமெழில் முல்லையதன் இயற்சிறப்பு
வயலோடும் வனத்தோடும் நின்று விடும் வனப்பல்ல
களத்தோடு தாமொன்றிக் களிப்போடு உழைத்திடும்
நற் சிறப்போடும் சீர் மிகுந்த மக்களொடும் சேர்ந்ததே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் தமிழர்க்கு இன்னல் விளைந்தால்

எங்கள் தமிழர்க்கு இன்னல் விளைந்தால்
சிங்களம் சீர்கெட்டுச் சிதறிப் பறக்குமென
கண்கள் சிவந்து செவிப் பறைகள் அறுந்துபட
மங்காத போர்க்களச் சங்கே முழங்கு!

பாரில் எமக்கொரு நாடில்லை என்ற நிலை
இனிமேலும் வரலாற்றில் பதிய விடமாட்டோம்
போரில் புலிக்கு நிகர் யார் இங்கு உண்டென்று
கூவிக் குரலெடுத்துச் சங்கே முழங்கு!

தீயில் குளித்துநிதம் நம் வேலி காப்போம்
வாளின் முனையிலும் நாம் நடந்து பகை தீர்ப்போம்
மாவீரர் துயிலுமிடம் பணிந்து களம் புகுவோம்
எம் தலைவன் மனங்குளிரச் சங்கே முழங்கு!


மார்பிலே குண்டேற்றி மரணம் அணைப்போம்
மானத்தை என்றும் மடியவிட மாட்டோம்
போரிலே அங்கம் சிதறுண்டு மாள்வோம்
வீணராய் என்றும் வீழ்ந்து விடமாட்டோம்!

வானம் பிளந்து வரும் குண்டுமழை ஏற்போம்
வஞ்சகர் காலினை வருடிவிட மாட்டோம்
உடலெங்கும் குண்டேற்றி உள்ளே புகுவோம்
ஈனர் சகவாசம் நாம் தேடமாட்டோம்!

திசை பிசகாமல் தலைவனின் வழியிலே செல்வோம்
வீரத்தை ஒரு போதும் விலை பேச மாட்டோம்
விழிதூங்காது கால்களை முன்னோக்கி வைப்போம்
ஈழம் மீளும் வரை நாம் ஓய மாட்டோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊர் எங்கும் போர் எழுச்சி!


ஊர் எங்கும் போர் எழுச்சி!
உலகமெல்லாம் விழி நிமிர்த்த
ஊர் எங்கும் போர் எழுச்சி!
பாரெல்லாம் பார்த்திருக்க
ஊரெங்கும் போர் எழுச்சி!
நாமெல்லாம் களம் இறங்க
ஊரெங்கும் போர் எழுச்சி!
நாடெங்கும் போர்ப் பயிற்சி!

அண்ணன்மார் அக்காமார் அன்னையர்கள்
பாட்டன்கள் பாட்டிகள் பூட்டிகள்
அப்பாக்கள் அம்மாக்கள் மாமாக்கள்
அத்தனை பேர் கரங்களிலும் போர்க்கருவி!
சாலைகள் வீதிகள் ஒழுங்கைகள்
அத்தனையின் மருங்குகளிலும் அணிநடப்பு!
ஊரெங்கும் ஒருமித்த போர் முழக்கம்
பாரெங்கும் விழி நிமிர்த்த போர் எழுச்சி!

பேச்சினிலும் மூச்சினிலும் போர் வேகம்
ஆட்டத்தில் பாட்டிலெல்லாம் போர் நாட்டம்
சின்னன்கள் சிறிசுகளும் நிலையெடுப்பு!
விளையாட்டுக் களமெங்கும் அணிவகுப்பு!
கூட்டங்களாய் குழுக்களாய் படை நடப்பு!
கிராமத்து வெளியெல்லாம் ரவை வேட்டு!
சாமத்து வேளையிலும் போர்ப் பாட்டு!
இனியென்ன நாளை வரும் தமிழீழம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழீழம் மலரட்டும்

நீண்ட பல்லாண்டுகளாய் நீறு பூத்திருந்த எங்கள்
கொண்டாட்ட நினைவுகளும் குதூகலக் கனவுகளும்
தூண்டிய மணிவிளக்காய் சுடர்விடும் இந்நாளில்
மலர்க தமிழீழம் நம் மக்கள் மனம் நிறைய

களத்தினில் இளைஞர்கள் களித்து விளையாடிட
மனைகளில் மாதர்கள் மகிழ்ந்து கொண்டாடிட
புத்தெழில் மங்கையர் நர்த்தனம் ஆடிட
புனிதப் போர் வீரர்கள் பொலிவுடன் போரிட
எத்திசை பார்க்கினும் சுதந்திரம் பீறிடும்
தனித் தமிழீழம் மலரட்டும் தரணியில்

அந்நிய இராணுவக் காலடி அழிந்திடும்
எத்தர்கள் கூட்டத்தின் இருப்பிடம் தகர்ந்திடும்
காவல் தெய்வங்கள் கானகம் நீங்கிடும்
ஈனர் பாசறைகளில் இருள் வந்து சூழ்ந்திடும்
மக்கள் மனங்களில் மகிழ்ச்சியே பொங்கிடும்
மாட்சிமை கொண்ட தமிழீழம் மலரட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடை காலத்துப் பாலை நிலங்களாய்
பரிதவித்த நாம் சுதந்திர மழைக்காய்
விடுதலை வானை அண்ணாந்து பார்த்தோம்!
மலர்களுக்கும் மாஞ்சோலைகட்கும்
வசந்தங்கள் என்றும் மாறி மாறி வந்து போகும்.
மனிதர்கள் நாம் இழந்து விடும் வசந்தங்களாம்
மகத்தான எம் இளமைக் காலங்கள்
மீண்டும் வராமலே போய் விடும்.

எங்கள் மண்ணின் மழலை மொட்டுக்கள்
விரியும் போதாவது வசந்தம் வரட்டும்
நம்பிக்கை ஒளியே வீசும் காலத்தில்
செந்தீப் பொறியாய் தமிழீழம் மலரட்டும்

காடுகள் வயல்கள் களனிகள் நிறையட்டும்
இரத்தச் சேறின்றியெம் வாழ்வு தொடரட்டும்
போரிடும் புலிகளெம் ஜெயத்தினைத் தேடட்டும்
மார்பினில் சுதந்தர மலர் வந்து வீழட்டும்
ஏனினித் துயரென எம்மக்கள் சிரிக்கட்டும்
பாரினில் சுதந்திர ஈழம் மலரட்டும்.

**18.2.90**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதய மலர்கள்

மாவீரர்களே!
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாதமும்
உங்களிற்கான உணர்வின் அலைகளும்
உத்வேகமான நினைவின் தணல்களும்
மேலும் மேலும் வீச்சுறுகின்றன.

97 இன் மாவீரர் வாரத்தில்
பண்ணேற்றும் ஓர் செய்தி பறந்து வந்தது
முன்னேற்பாடாக
விமானப் பறப்புகள் யாவும் நிறுத்தமாம்!
சிறீலங்காவில்
வடக்கிற்கும் கிழக்கிற்கும் பறப்புகள் ரத்தாம்!
மாவீரர் வாரத்தில் புலிகள் தாக்கலாம் – என
'பைலட்' கள் பயமாம்.

மாவீரரே!
பார்த்தீரா இப்போ பாதையின் போக்கினை!
எமக்கு முன்னரே எதிரிகளன்றோ
முண்டியடித்து உங்களுக்கெல்லாம்
மண்டியிட்டு நினைவு கூர்கின்றனர்..!
களத்தில் இறங்க மறுத்து மறைந்து
உங்கள் நினைவுக்
குளத்திலன்றோ மூழ்கி நிற்கின்றனர்!?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் தியாகத்தால் எங்கள் தேசியம்
உருவாக்கம் பெறுவது உறுதியாய்த் தெரியுது
உங்கள் நினைவுகள் எங்கள் மனங்களில்
உள வைரத்தை ஊட்டி வளர்க்குது
எங்கு மில்லாத புதுமையன்றோ
இங்கே ஈழ மண்ணில் நடக்குது!
விடுதலை பெற்ற தேசங்கள் மட்டுமே
தேசிய வீரர்க்கு விழாவெடுக்கையிலே...
இங்கே எங்கள் தேசம் மட்டும்..,

போரின் வீச்சு வீறுடன் தொனிக்க
எறிகணை மழையாய் மக்களில் வீழ
அச்சுறுத்தல்கள் ஆரோகணிக்க
தலையில் மூட்டை முடிச்சுகளோடு
தாழ்வாரங்கள் தேடி மக்கள்
தறி கெட்டுழன்று ஓடித்திரிய..!
மனத்தில் உறங்கும் மாவீரர்க்கு
மாட்சிமையான விழாவினையெடுத்து
தேசியத்தின் தலைவர் அவர்கள்
தேசத்திற்கோர் பேருரையாற்றி
தீபங்களாலே அர்ச்சனை செய்யும்
தேசப் புயல்நாள் அனுஷ்டிக்கிறது

நெருக்கடி நிலைகள் தொண்டையை நெரிக்கவும்
பகுத்தறிவற்ற துரோகம் வதைக்கவும்
வருத்தமுடன் நாம் வதங்கிட வில்லை...
கருத்தொருமித்து உமை நெஞ்சினில் வைக்கிறோம்
குருத்தினிலே குழிசென்ற குஞ்சுகளே உமை யெண்ணி
சிட்டிகளில் நெய்வார்த்து சிறுவிழிகள் நீர் கோர்த்து
தேசம் எங்கணும் தீபம் ஏற்றுகிறோம்
உங்கள் உரமுணர்ந்து உருகுகிறோம் – அவ்வழி
இறுக்கமாயுள்ளோம், இனித்தளரோம்.

பொருத்தமாய் எமக்கொரு தீர்வுதர வேண்டுமென
அடக்கமாய் பேசிய காலமெலாம் போச்சு – இனி
எகத்தாளமாகவே எதிரியை மோதிநின்று
சுகந்தானா நீயென சூடாக வினவி நின்று
பகுத்தாளும் ஆட்சிமுறை படு குழியில் போகும் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகர்த்தவர் எமக்கில்லை என்ற நிலையினையே ஸ்தாபித்து
கருத்தாழம் மிக்கதொரு கட்டத்தை எட்டாமல்
பொறுத்தாள மாட்டோம் – இது
புண்ணியர்கள் நீர் வரித்த வழிப்பாதையினாலே
வென்றதொரு நற்பாதை... இனி நின்றுகதை பேசோம்

மாவீரரே!
உங்கள் நினைவுத் திருநாள் தான்
ஈழவர் எமது
தீபாவளியென்று கொண்டாடுகின்றோம்
தீபங்கள் ஏற்றி மன்றாடுகின்றோம்
நரனுக்கெதிரான நரகாசுரப் போரென்றும்
அவனே அவர்களது ஆற்றொணா விரோதியென்றும்
ஆரியர்கள் நடத்தி விட்ட அட்டகாசமே
போரியற் துறையில் புதினமாய் வடிவெடுத்து
பார் – இயல் ரீதியில் பிரச்சாரமானது...
பதிவுகளும் பெற்றது... புரிந்து கொண்டீரோ..!?

கதையின் வேர் அதுவல்ல!
எமக்கேயான எல்லையைக் காக்க
தமக்கேயான வலுவுடன் போரிட்டு
தரையில் புதைந்த நம்மவர் தினத்தை
தீபமேற்றி நற் திருநாளென
தூய நினைவுடன் மலர்கள் தூவி
தூபியின் முன்னால் மண்டியிட்டு
ஆண்டாண்டான தமிழர் தினமாய்
வரித்துக் கொண்டோம் வணங்கி நிற்போம்.

வரலாறு என்றால் என்னப்பா? – வெறுமனே
வந்தவையும் போனவையும் கூறும்
புரையேறிப்போன வாசக வடிவங்களா?
இல்லையப்பா!

புதிதாக நாமமைக்கும் புனிதப் பாதையதன்
போக்கும் வீச்சும் நேர்த்தியும் உறுதியும்
வளைவும் நெளிவும் சுழிவும் மிதப்பும்
நீக்கமற நேர்மையாய்க் காட்டி விடும்
போற்றலுக்குரிய பெரும்பாதையல்லவோ!?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமமைக்கும் பாதையது – அதாவது,
நீர் சமைந்து உருவான விடுதலைப் பாதையது..
மாவீரர் நீரெல்லாம் மண்ணுள் மண்ணாகி–எம்
கண்ணுள் ஊற்றுடைத்து கட்டிய பாதையது..!
இது வெறும் கல்லாலும் மண்ணாலும் கரிய நிறத் தாராலும்
கனவேக வாகனங்கள் வந்து சறுக்கி நிற்கும்
பொல்லாத பரல் மணலும் ஊரியும் சிறு கல்லும்
உருவாக்கி வைக்குமொரு சடத்துவப் பாதையா!?

அல்லவே அல்ல ஐயா!
விடலைப் பருவமதில் வீரமுடன் களமிறங்கி
சுடலைப் பயமோ சுகபோக நினைவோ
சொட்டும் மனதிருத்தா சுடர் ஒளித் திருவுருவாய்
கடலையும் காட்டையும் களமாடிக் கரைந்துறையும்
குடலைக் கொழுந்துகள் நீர் கட்டி நின்ற பாதையன்றோ!

மறப்போமா நாமும்மை மாவீர நாயகரே!
கிடப்போமா கண்தூங்கி நினைவலைகள் மீட்டாமல்
இரப்பான்கள் சென்றாங்கே இரந்து கிடக்கட்டும்
பறப்பான்கள் ஊர்பறந்து பிரச்சாரம் செய்யட்டும்
கரப்பான்கள் அவர்களென கழித்தெறிந்து கடாசிவிட்டு
சுரப்பான்கள் எம்முளத்தில் சுதந்திர நெய் ஊறலிட
வரப்பால் வழிநடந்தும் உரைப்பால் உளங்கவர்ந்தும்
நெருப்பாய் நிலையுணர்த்தி நித்திலத்தின் புரவலராய்
பரப்புரையும் செய்வோம் படைநடப்பும் செய்வோம்
கரப்பால் மூடிய குஞ்சுகளாய் நாம் இருப்பதினி நடவாது –
வான் வரப்பிலும் பலவீரம் காட்டும் வகை வளர்ந்து விட்டோம்


நினைப்பால்...
உம் நினைப்பால்...
நீர் வளர்த்த பெரு நெருப்பால்...
நாம் மூண்டு விட்டோம்– இனி
ஒருக்காலும் ஓயோம், உம் கனா
நிஜத்தால் உயிர்வுறும் – ஆம்
உருப்பெறும், இது உறுதி!

8.12.97

ஒலிபரப்பு - புலிகளின்குரல் வானொலி
(29.12.97)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேசப்பற்று

மாவீரர்களே!
பாசத்தை மறந்து தேசத்தின் விடுதலைக்காய்
பாடையில் போனவரே!
நீசத்தனங்களை நிலை குலைய வைத்திட
நேசங்கள் துறந்தவரே!
மாசற்ற உங்கள் சந்தன மேனிகள்
மண்ணுள் புதைந்தனவோ!
பேசத் திறனற்று பேதைகளாய் நாம்
பாசத்தில் அல்லலுற்றோம்!

நாசத்தனங்களை மண்ணிலே போக்கிட
வேஷங்கள் கிழித்தவரே!
சூசிடும் புலிகளாய் சூர்க்கமாய் எழுந்து
முகாம்கள் தகர்த்தவரே!
ஆசையுடன் உமை அள்ளி அணைத்த
அன்னையைப் பிரிந்தவரே!
தேசமே பற்றென நெஞ்சில் வரித்து
போர்க்களம் புகுந்தவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசநோய் உற்ற களமாய் ஈழம்
வருந்திட்ட வேளையிலே
மோசமுணர்ந்து மாசு களைந்திட
மாண்டிட்ட வீரர்களே!
வேஷமிட்ட நரிகளாய்ச் சிலர்
எதிரிகளின் கால் வருட
கோஷமெதுவும் இல்லாமலே
கொள்கைக்காய் உயிரெறிந்தீர்!
நாம் கண்களில் நீர் கோர்த்து
உம் கல்லறைகளில் நிற்கின்றோம்!

எத்துணை காலமாய் எல்லைகள் காத்து
எம் தொல்லை தடுத்தீர்கள்!
பத்தரை மாற்றுத் தங்க உயிர்களின்
பாதம் பணிந்து நிற்போம்!

நித்திரையின்றி நீர் கண்களைத் தீட்டி
நின்றிட்ட வேளையில்தான்
நாம் பக்குவமாகப் பாயில் படுத்து
பம்பல் கதையளந்தோம்!
சத்தியமாக ஒப்பிடலென்பது
உங்களுக்(கு) ஒவ்வாது
சித்தர்கள் போன்று பக்தியுடனே
சாகசம் செய்தவரே!
பக்தர்களாக என்றும் உமை நாம்
பாடிப் பணிந்து நிற்போம்!

வித்தாக நீங்கள் குழிகளில் புதைந்தீர்
வையம் அறியாததா?
சொத்தாக எம் மண்ணினைக் காத்தீர்
தேசம் புரியாததா?
பத்தாது அதுவென்று வித்தைகள் செய்தீர்
எதிரி முகாம்களுக்குள்ளே!
வற்றாத வேக வீரத்துடனே
கொற்றவன் சொல் நடந்தீர்!
மத்தாகி நின்று ஈழம் பிறந்திட
சுற்றிச் சுழன்றடித்தீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்தோம் இனியென நாம் சத்தமிடுகையில்
எதிரியைச் சுத்தமாகத் துடைத்தெறிந்தீர்!

கற்றவர் பலரும் கருத்தொருமிக்காவிடத்தும்
உற்றவழி புகுந்தவரே!
மாற்றான் புறமுதுகிட்டிட தேசப் பற்றுடன்
எழுந்து விரைந்தவரே!
காற்றாகத் தமிழனை மேலுக்கனுப்புவோம் எனக்
கூறிட்ட சிங்களவரை
கூற்றுவன் காலடிக்குள் தொப்புத் தொப்பெனத்
தூக்கி யெறிந்தவரே!
வற்றாத வளம்மிகு ஈழத்து மண்ணை
மீட்டிடத் துடித்தவரே!
மொட்டாகி நீவிர் மலர்ந்திடுவீரெனப்
பெற்றவர் மனம் நினைக்க
தேசச் சொத்தாக ஆனீர் – அதன் மீது கொண்ட
முத்தான பற்றினாலே
தரையினில் நடந்தீர் கடலினில் நகர்ந்தீர்
இப்போ வானமும் எம் கையிலே
இத் தேனான செய்தியை உம் காதினிற் போட்டிட
காதலுடன் நிற்கின்றோம்.

எண்ணாத வளர்ச்சி!
எட்டுவோமென எண்ணாத உயர்ச்சி!
வானிலே காண்கின்றோம்
பாணுக்கும் பருப்புக்கும் மக்களை ஏய்த்தோர்
பல்லக்கில் பவனி வந்தோர் – இப்போ
சொல்லற்றுச் செயலற்று விழிகள் பிதுங்கிடும்
விந்தையைக் கூற வந்தோம்
எம் செல்வங்களே உம் சீரடி மலரிட்டு
விந்தையைக் கூற வந்தோம்
எம் வெற்றிகளுக்கெல்லாம் அடித்தளமாகிய
அத்திவாரத்து நாயகர் நீர்!

எமக்குப் பலம் சேர்த்தீர், எதிரிக்கு எமனானீர்!
உலக மக்கள் அனைவருக்குமே
ஒப்பிட முடியா உவமையானீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தேசப்பற்றின் தீவிரம் தன்னை
எம் தேசம் முழுதும் விதைத்து விட்டீர்!
புகைப்படமாகவும் புத்தகமாகவும் சித்திரமாகவும்
எம் கை தவழ்ந்தீர்!
தத்துவ நாயக தீபங்களாக
மக்கள் நெஞ்சினில் இடம் பிடித்தீர்!
வித்துவக் காய்ச்சற் பேர்வழிக்கெல்லாம்
மொத்தமாய் முகம் அறைந்தீர் – நீவிர்
வித்துடலாகவோ வேறு வடிவிலோ
தேசப் பற்றென உயிர் துறந்தீர்!

தேசத்தின் நாயகன் காட்டிடும் பாதையில்
கூசாமலே நடந்தீர்!
பாசத்தின் சங்கிலிப் பிணைப்புகளெல்லாம்
துச்சமென மதித்தீர்!
றேஷன்கள் இழந்திட்ட அகதிகள் கூட
உம் பாதம் தொழ வைத்தீர்!
பாசத்திற்கும் – ஏன் பற்றினுக்குமோர்
புதிய கதை படித்தீர் – இந்த
யாகத்திலே நீர் எத்தனை விதமாய்
அர்ப்பணிப்புகள் செய்தீர்!
சோகத்திலே இதைக் கூறவில்லை நான்
உம் வேகத்தைக் கண்டதாற்தான்
வாசமலர்களே! வையம் உமையென்றும்
வர – லாற்றினிலே பொதிக்கும்.

**ஒலிபரப்பு - புலிகளின்குரல் வானொலி (1998 - மாவீரர்தினம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சேனைப் புலவிற்குள் யானைகளென..!

வண்ணச் சிறார்களே!
வாழ்வை வளம் படுத்தும் வளர் கல்விச் சாலைகளில்
வேரூன்றிக் கிளைபரப்பி விழுதெறிய வேண்டிய
சின்னக் குருளைகளே!
சேனைப்புலவிற்குள் யானைகளெனப் புகுந்த
தானைத் தீரர்களே!
புண்ணைக் கிளறியொரு பூகம்பமாகி விட்ட
சின்னத் தனங்களினால் சீற்றமுற்று நீர்
மண்ணை நேசித்து மாணவ சுகம் துறந்து
விண்ணில் விரைந்தீர்களே – எம்
கண்ணில் நீரோட கருத்தில் நிழலாட
காற்றில் கலந்தீர்களே!

பற்றோடு பெற்றோர்கள் கொட்டிட்ட பாசமழை
முற்றாகவே உம்மை முழுக்க நனைத்திருந்தும்
சற்றேனும் தளர்வின்றி சுற்றம் விட்டகன்றீர்
வித்தாகிப் போகும் கதை விபரமாய் அறிந்திருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்தாரமான பேச்சேதுமின்றி
விநயமுடன் அணி சேர்ந்தீர் – இன்று
எம் சொத்தாகிப் போனீர்! சுடர் விளக்காய் எரிகின்றீர்!

மெத்தையிலே கண்ணுறங்கும் சிற்றெறும்பு வயதில் நீர்
வித்திருந்து முளைத்த சிறுநாற்றாய்ச் சிலிர்த்திடும் நீர்
போர்ப் பேய்கள் கூச்சலிடும் பெருங்களத்தில் குதித்தீர்!
புறங்காணாமல் எங்கள் போர்மண்ணை அணைத்தீர்
ஒப்பாவீரோ..! உமையொத்த வயதினர்கள்
குளத்து வளை நண்டுகளாய் கூட்டமாய் மதகமர்ந்து
வளவளப்பும் அரட்டையுமாய் வீண் வம்புகள் பேசி
சுயநலக் குட்டையிலே ஊறிய மட்டைகளாய்
சொட்டைகளும் நொட்டைகளும் தாராளமாய் வீசி
கச்சானும் உடைத்துண்டு காரியரைச் சீண்டி
காலநேரம் தப்பாமல் கடிவயிறு நிரப்பும்
சொத்தைகளாய் இங்கிருக்க.. நீவீர் ஒப்பாவீரோ..!

கண்ணுறக்கம் இல்லாது களம் நின்றீர்
மழை வெயில் பாராது மாற்றானை எதிர் பார்த்து
நினைவொடுக்கி நேரிய விழிப்புலன் சுழல விட்டீர்
படை வரும் வேளை எதுவாயிருக்கலாமென – கண்
மடல் திறந்து எதிரியை இரவிரவாய்க் காத்திருந்தீர்
ஊரெல்லாம் உறங்கையிலே
உடலால் உயிரால் உணர்வுகளால் ஒருமித்து
காடோ கடலோ எதுவென்றும் இல்லாமல்
நாடே பொருளென்று நகராது நிலையெடுத்தீர்

இருந்தீர் எழுந்தீர் கிளர்ந்தீர்
இரும்பனைய உறுதியுடன் களத்தினிலே புகுந்தீர்
கலன்களின் சுடுவாயைத் திறந்தீர்
கயவர் உயிர் கவர்ந்தீர் – உம்மால் யாம்
நிமிர்ந்தோம் நின்றோம் நிகர் மொழிந்தோம்
உலகனைத்தும் கவர்ந்தோம் நிலை பகர்ந்தோம்
நீதிக்குத் தூதாக வாருங்கள் என்றுலகை வலிந்தோம்
எது வரினும் எம் இளைஞர் உள்ளார்களென்ற
உள வலுவைப் பெற்றோம்
குட்டக் குனிந்து நின்ற இனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டக் குனியாமல் விழி நிமிர்த்தி
குட்டினால் குட்டுவோம் எனும் நிலை வளர்ந்து
குட்டுதற்கென்றே குறி தேடி நகர்ந்து
குருதியிலே கொடியவரைக் குப்புற வீழ்த்திய – எம்
குஞ்சுகள் உங்களது திறன் கண்டோம்


வாழ்ந்தீர்
வாழும் காலம் வரை வீரத்திலேயே வளர்ந்தீர்
தேசத்தின் விடிவிற்காய் தீ சுமந்தீர்
தீராத வேட்கையிலே தின வெடுத்தீர்
களங்களிலே கதை படித்தீர்
கடைசியிலே வீழ்ந்தீர் – ஆயினும்
வித்தாகவே புனிதப் புதைகுழியில்
புலிக்கொடி உடல் போர்த்திச் சாய்ந்தீர்

கண்ணீரால் உங்கள் கால்களை நாம் கழுவி
காதலுடன் உமையெங்கள் நினைவுகளில் மீட்டி
இதயத்தில் பூத்தமலர் அத்தனையும் அள்ளி
பாதங்களில் பாசமுடன் பணிந்து தொழுகின்றோம்

**21.5.1997**
**ஒலிபரப்பு - புலிகளின் குரல் வானொலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அணையாத தீபமென
## எமை அழைத்தால் போதாது

அணையாத தீபமென எமை அழைத்தால் போதாது
புதிதான தீபங்களால் சுதந்திரத் தீ மூட்டுங்கள்!

வசதிகள் வண்ணங்கள் அத்தனையும் துறந்தோம் – எமை அகதிகள்
ஆக்கிடாமல் ஆர்த்தெழுந்து போர் தொடுங்கள்!

கல்லறைக்குள் படுத்து விட்டோம் – எம்
கரங்களில் கிடக்கும் ஆயுதத்தை – நீங்கள்
உடன் வந்து பெறுவீர்களென்ற உறுதியோடு!

மாவீரர் எமக்கு மலர் தூவும் நீங்கள் – எமை
விதைகளாய் மதித்து விருட்சமாய் வளருங்கள்!


நாம் சிந்திய குருதி சேதமாய்ப் போவதா..!
திரண்டே எழுந்தெம் தேசத்தை மீளுங்கள்!

விண்ணிலிருந்து நாம் விழி சிரிக்கப் பார்க்கின்றோம்
மண்ணிலே எம் பாதை நீர் தொடர்ந்து செல்வதனை!

மண்ணுக்காய் உயிர் நீத்து – எம்
மண்ணிலே உடல் புதைந்தோம்
கண்ணொாத்த ஈழத்தை மீட்டிடுவீர் காத்திடுவீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இருளகற்ற வந்த
## அஸ்தமனத்துச் சூரியன்கள்

எம் வாழ்வின் இருளறிவோம்
தேடும் விடுதலை முனைப்புகளின்
கஷ்ட நிலைகள் அறிவோம்
மட்டுக்குள் மட்டாகித் திட்டுக்குள் திட்டாகிக்
குட்டிச் சுவர்களாயமையும் குப்பாடி வாழ்வறிவோம்!

ஏது விடிவென்று ஏங்கி நிற்பதே வாழ்வானோம்
போதும் இதுவென்று பொங்குதல் தளர்ந்து
நாதியற்றவராய்க் காலில் விழத் தயாரானோமா?
இல்லவே இல்லை!

இருளகற்ற அஸ்தமித்த இதயத்துச் சூரியன்கள் —எம்
பொருளற்ற சோர்வகற்றி போஷாக்கும் தெம்பும் தர
மிரள்வகன்று நாம் மார்புயர்த்தி முனைப்புடன்
மானஸ்தர்களாக நிற்கின்றோம்

உதயத்துச் சூரியனால் இருளகல்வதே
உலகில் நியதி என்றால்..! எம்
இருளகற்றுவதற்காய் அஸ்தமித்துப் போகும்
மண்ணின் மாவீரர்கள்..! எமது
இதயத்துச் சூரியன்கள் அல்லவோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாவீரனுக்கும் ஒரு தாயுள்ளாலல்லவா!
அவனுக்கென்று ஒரு உறவுக்கொடி உண்டல்லவா!
அவனுக்கென்றும் ஆசாபாச உணர்வுகள் உண்டல்லவா!
அத்தனையும் புறந்தள்ளி ஆத்மார்த்தமானதொரு
விடுதலையுணர்வுடன் வெங்களம் நின்று
உயிரை அர்ப்பணித்தார்களே!
இவர்கள் உதயத்துக்காக அஸ்தமித்துப் போன
இதயத்துச் சூரியன்கள் அல்லவோ!

நெஞ்சிலே நெருப்பேந்தி
வஞ்சகம் வீழ்ந்திட வென்றே கழுத்தினில் நஞ்சேந்தி
கூகையும் கோட்டானும் கூட குரலெழுப்ப அஞ்சும்
கானகம் எங்கணும் நடந்தும் தவழ்ந்தும்
நேரிய உணவின்றிக் கண் சாயப் பொழுதின்றி
காரிருளும் கடு வெயிலும் சமனே எமக்கென்று
போரிட்டு எங்கோ ஓர் புதைகுழியில் விதையாகும்
இந்த மறவீரர்கள் எம் இருளகற்ற அஸ்தமித்த
இதயத்துச் சூரியன்கள் அல்லவோ!

மாற்றான் தோட்டத்து மல்லிகைகள் எம் மண்ணில்
வீழ்ந்திட வேண்டுமென்று யார் கேட்டார்?
எல்லைகள் பிரித்திடுவோம் அப்போது
எம் தோட்டத்து வசந்தங்கள் உங்கள் முற்றங்களில்
வலம் வர வேண்டியிருக்கும்
எங்களை எங்களுடனேயே விட்டு விடுங்கள்
இதைத்தானே நாம் கேட்கின்றோம்
நாமும் நமது மண்ணும் நீங்கள் நாணும் வகையில்
வளர்ந்திடுவோம் என்றுதானே அஞ்சுகிறீர்கள்?

நாங்கள் வளமானவர்கள்
வளத்தை வரவழைக்கும் தரமானவர்கள்
ஓடு என்று எமைக் கலைத்த ஓடுகாலிகளே..!
எம் மண்ணுக்கு வேலி போடுவதில் உங்களுக்குள்
ஏனிந்தக் கூப்பாடு?

எமக்குத் தெரியும்..! இது
நீங்கள் தட்டில் தூக்கித்தரும் விடயமல்ல
நாங்கள் வெட்டி எடுக்க வேண்டிய விடயம்
இருளகற்ற அஸ்தமிக்கும் இதயத்துச் சூரியர்கள்
தெரு நெடுக நீள் கோடாய்க் களம் காண விரைகின்றனர்
ஏது பயம்?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலேறிக் காவியம் படைத்த மாவீரர்கள்
தரையோடு தரையாகத் தவழ்ந்தோடி
தந்திரம் காட்டிய மாவீரர்கள்
கானகத்து மரங்களுடன் கதைபேசிக் கதைபேசி
கதை முடித்த மாவீரர்கள்
புரையோடிப் போன அடிமைத் தளையினைப்
புரி நீக்கிப் புரி நீக்கி புதுமைகள் செய்த மாவீரர்கள்
உடலோடு விடமேற்றி உயிரோடு விளையாடி
உரிமைகள் பறித்தெடுத்த மாவீரர்கள்
நிதமும் கணமேதும் தூங்காது காவலில் நின்று
கடிதவம் புரிந்த மாவீரர்கள்

வேறு எதனோடும் ஒப்பிட முடியாத உயர்வோடு
களமே எம் நிலமென்றும் நிலமே எம் களமென்றும்
நினைவிலே உருக்கேற்றிக் கனலாகக் கனன்று
காற்றோடு போன மாவீரர்கள்...

இவர்களெல்லாம் எங்களது இருளகற்ற அஸ்தமித்த
இதயத்துச் சூரியன்கள் அல்லவோ!

**1997 மாவீரர் வாரச் சிறப்புக் கவியரங்கில் மறைந்த கவிஞர் நாவண்ணன் தலைமையில், கனிமொழியின் குரலில், புலிகளின்குரல் வானொலியில் ஒலிபரப்பானது.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கரும்புலிகள்

கண்ணிமைக்கும் நேரத்தில் காற்றாகிப் போகும்
காவிய நாயகர்கள்

தீப்பந்தாகக் கனன்றபடி விண்ணோக்கிச் செல்லும்
எங்கள் தேசத்தின் காப்பரண்கள்

மனித நேயங்கள் மதிக்கப் படாத போது
மனிதக் குண்டுகளாய் மாறிக் கொள்பவர்கள்

மாற்றானின் மடியருகில் சென்று
கூற்றுவனை முதுகில் தட்டி குசலம் விசாரிப்பவர்கள்

எங்கள் அடையாளங்களை நிலை நிறுத்துவதற்காக
தங்கள் அடையாளங்களை விலையாய்க் கொடுப்பவர்கள்


எங்கள் மண்ணில் வர்ணங்கள் பூப்பதற்காக
தங்கள் வாழ்வை மர்மங்களால் நிறைத்துக் கொள்பவர்கள்

முகம் தெரியாமலே மறைந்து போன இவர்கள்
சில சமயங்களில்
சுவரொட்டிகளிலும் கூடத் தலை காட்டுவதில்லை

ஊருலகம் அறிந்திடாத மண்ணின் மைந்தர்கள் – இவர்கள்
ஓரிரண்டு பேருக்குள்ளே உறங்கும் உண்மைகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உறங்கும் உண்மைகள்

கண் காணா இடத்தில் கதை முடிவதுமுண்டு – உடல்
கைகளிற்கே கிடைக்காமல் காற்றாவது முண்டு
தேசத்தின் விடுதலைக்காய் மாண்டிடும் எங்கள்
மரணத்தில் மர்மங்கள் உறைவது முண்டு

தெருவோரச் சுவரொட்டி எமைத் தாங்காது
பொதுவான அஞ்சலிகள் எமை நெருங்காது

ஓரிரண்டு பேருக்குள்ளே உறங்கும் உண்மைகள் – இவை
உலகறியும் காவியமாய் ஆகும் அண்மையில்

தலைவன் வழி நடந்து சென்று
இலக்கை அடைவோம் – அங்கே
இலட்சியத்தின் பெரு நெருப்பில் உயிரை எறிவோம்
பூரணமாய் மனம் நிறைந்து சாவை அணைப்போம்
ஈழ வழிப் பாதையில் நாம் இடர்கள் தகர்ப்போம்
வானமதில் காத்திருந்து வையகம் பார்ப்போம்
மானமுடன் ஈழம் வாழ விழிகள் பூப்போம்
வஞ்சகரின் வலையருகில் சென்று வருவோம் – அதைக்
கிழித்தெறியும் உத்திகளைச் சேர்ந்து வகுப்போம்
குண்டோடு வாகனத்தைக் கொண்டு நடப்போம் – வலை
துண்டு துண்டாய் அறுந்து பட நாமும் புகைவோம்

கண்டோர்கள் சாட்சியெல்லாம் அங்கிருக்காது – கயவர்
கூண்டோடு கைலாயம் செல்தல் தப்பாது

அனுப்பி வைத்த அண்ணனவன் மனதிலிருப்பான் – அவன்
திண்தோள்கள் துடித்தொருகால் துவண்டு நிமிர்வான்
மண் காக்க மடிந்தோமென மனம் நிறைவோம் – எம்
மக்கள் எமைப் புரிந்து கொள்ள மா வீரர்களாவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அத்திவாரக் கற்கள்

நாங்கள் அழகு மாணிக்கங்கள் அல்ல,
அத்திவாரக் கற்கள்
அழகான ஈழம் அமைவதற்காக
வெளியில் தெரியாமல் புதைந்து போனவர்கள்

எங்கள் சிலரின்
முகங்களையும் முகவரிகளையும்
சுவரொட்டிகளில் தேடாதீர்கள்
நாங்கள்
உங்கள் பாதங்கள்
உரிமையுடன் நடப்பதற்காக
எங்கள் உடல்களைப்
பஸ்பமாக்கிக் கொண்டவர்கள்.

மண்ணின் விடிவுக்காக
மாற்றானின் அருகிற் சென்று
கூற்றுவனை வலிந்தழைத்து
குசலம் விசாரிப்பவர்கள்

மின்னல் கீற்று வெடி முழக்கத்துடன்
கண்ணில் படாமல் கரைந்து போன
எங்கள் கல்லறைகள்
வெளியில் தெரிவதில்லை

அநேகமான சமயங்களில் – நாங்கள்
அஞ்சலிக்கு வைக்கப் படாத
அநாமதேய வித்துடல்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம்மை நினைத்து யாரும் கலங்கக் கூடாது

தொன்மை தொனிக்கும் தமிழ் வீர வரலாற்றில்
வர்ணம் பூசி வெறும் வாய் ஜாலம் காட்டுகின்ற
புல்லர் கூட்டங்கள் புதுக்கதிரை தேடி நிற்கும்
பொல்லாத பொழுதிலும் விடலைகள் நாம் திரண்டு
உடலை உயிரை உடன் பிறந்தோரையெலாம்
உற்றார் பெற்றார் உறவென வந்தோரையெலாம்
கல்லாய் மனமிறுக்கிப் புல்லாய் ஒதுக்கி விட்டு
வல்லான் வளர்த்தெடுத்த விறல்மிகு கரும்புலியாய்
மெய் மேல் குண்டு கட்டி
பொய்யோர் குகை தகர்க்கையிலே
எம்மை நினைத்து யாரும் கலங்கக் கூடாது.

புதுப்புதுப் பெயர்களுடன் அடுத்தடுத்துப் படை வரினும்
களத்தில் காளையரும் கன்னியரும் பொருதிடுவார்
வறுத்தெடுத்த கச்சானும் வளநற் தானியமும்
பசிக்குணவாகும் களத்து நிலை இருந்திடினும்
கடுகளவும் நாம் மனம் தளரோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்திருந்து நாம் பார்த்து புதினங்கள் பேச இது
பொருத்தமற்ற நேரமென பொதுவாக ஊரறியும்
மிகுந்து படை வரினும் நாம் புகுந்து விளையாடவென
ஜயசிக்குறு எம் பயிற்சிக் களமாக விரிகையிலே
தெளிந்து பயின்றிடுமோர் அரங்காய் அதை மாற்றும்
எம்மை நினைத்து யாரும் கலங்கக் கூடாது.

முகம் தெரியாமலே முழுக்கதையும் முடிக்கும்
கரும்புலிகளல்லவோ
இடம் புரியாமலே செயலிற்குத் தயாராகும்
தீரர்களல்லவோ
அண்ணாரின் கண்ணசைவில் அகமெலாம் ஒளிர்ந்து
தகர்ப்பவர் அல்லவோ
வலம் வந்து இங்கு ஒரு வர்ணவிழா கொண்டாட
பகையிங்கு வரவழைத்தால்
திடம் கொண்டு குண்டுப்பொதி சுமந்து நாங்கள்
மதம் கொண்டெழுந்து பாய்வோம்
அவன் நிற்கும் இடங்களில் அணுகுண்டு முழக்கமாய்
நிலம் பிளந்தெரிய வைப்போம்
தளமங்கு அதிர்ந்திடவும் தானையின் தனயர்கள்
தடதடவென்றோடி வருவார்
எதிரிப் பிணங்களின் குவியலைக் கணக்கிட முடியாமல்
திணறுண்டு திசையெங்கும் பார்ப்பார் – நாம்
நிறைந்திட்ட நினைவோடும் பகைவென்ற களிப்போடும்
மேகத்து மூட்டத்துள் சிரிப்போம்
எமமை நினைத்து யாரும் கலங்கக் கூடாது.

விறல் வேங்கைத் திறன் கண்டு வெலவெலத்தோடிடும்
சிங்களப் படைகளெங்கே!
களமேற அனுமதி வேண்டியே மன்றாடும்
வேங்கைகள் வீரமென்னே!
புறநானூறென்ன! புராணப் போர்களென்ன!
கலிங்கத்துப் பரணியென்ன!
வியூகங்கள் அமைத்து வித்தைகள் காட்டிய
இதிகாசம் இரண்டுமென்ன!
புதிதாக நாம் படைக்கும் வியூகங்கள் இங்கு
நிற்கின்ற நேர்த்தி காணீர்!
பன்நாட்டு உதவியுடன் பகைவன் சமைக்கின்ற
வியூகங்கள் வீழ்ச்சி பாரீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியோடு எம் மக்கள் மரத்தோடு சாய்ந்து
தூசியில் துயில் கொள்கையில்
நோய்க்கு மருந்தின்றி காய்ச்சலும் காசமும்
தமிழனின் உயிர் கொல்கையில்
விசையோடு நாம்சென்று விஷவேர்கள் அழிக்கவென
வெடிக்கின்ற போதிலெல்லாம்
எம்மை நினைத்து யாரும் கலங்கக் கூடாது

பதுங்கியே வாழ்ந்து பட்டென ஊர் நுழைந்து
சட்டெனத் தாக்கியதொரு காலம்
பின் கொட்டமற நிலைகளைக் குறிவைத்தே தாக்கி ஓடி
ஒதுங்கி வளர்ந்ததொரு காலம்
திட்டமிட்டு நெறிப்படுத்திச் சகதைகளை வெடிக்க வைத்து
நகர்வு தடுத்ததொரு காலம்
பட்ட மரமெனப் படையினரை வெளியில் துளிர்க்காமலே
முகாமுள் அடக்கி வைத்ததொரு காலம்
கெரில்லாப் போர்முறைகள் எம்மிடமே படிக்கவென
வெளிநாட்டார் விழி பிதுக்கி நிற்பதொரு காலம்

சட்டெனப் பல முனையால் படை நகரும் யுக்திகளை
பட்டென நாம் இப்போ மோப்பம் பிடிப்போம்
விட்டேனா பாரென தொடர்ந்து நகர்கையிலும்
மட்டையடி கொடுத்து மார் தட்டுவோம்
முற்றிலும் முழுமூச்சாய் முழுவேகம் காட்டி
முற்றத்தில் நாம் சென்று வெடிக்கையிலே
எம்மை நினைத்து யாரும் கலங்கக் கூடாது!

**ஒலிபரப்பு - புலிகளின்குரல்வானொலி (5.7.98 கரும்புலிகள்தினம்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜயசிக்குறு யாழுவா

ரிவிரச வுடன் நீ திமிர்கொண்டு நின்றாய் – புலியின்
முதுகெலும்பு முறிந்ததென்று முகடதிரக் குரைத்தாய்!
சத்ஜெய உனக்குச் சறுக்கிப் போய் விட்டாலும் – வேங்கை
வேகம் குறைந்ததென்று வீறாப்புப் பேசினாய்!
எடிபல வில் நாங்கள் எட்ட விலகிநிற்க – தமிழன்
கொட்டம் அடங்கிற்றென கும்மாளக் குதிபோட்டாய்

ஒன்றரை மாதத்தில் நாடெல்லாம் வேட்டொலிக்க
கண்டி வழிப் பாதையிலே கவசவாகனம் ஓட்டி
பரந்தன் சந்தியிலே படையோடு படைசேர்ந்து
கரங்கள் குலுக்கி படங்களுக்கும் போஸ் கொடுத்து
ஆனையிறவு ஊடாக அகலக்கால் வைத்து
யாழ்ப்பாதை திறப்பதாய் வாய்ப்பந்தல் போட்டு நின்றாய்
ஜயசிக்குறு என்று பெயரிட்டுப் படைகுவித்து – இப்போ
பயசிக்குறு ஆகி பாதியிலே நிற்கின்றாய்
ஓடிப்போன உங்கள் உசாரான தோழர்களைத்
தேடிப்பிடிப்பதே உனக்குப் பெரும்பாடாய் போச்சு
மாறிமாறி நீ தேதிகள் குறித்து விட்டு – இப்போ
வருடமொன்று முடிந்ததென்று வாடிப்போய் நிற்கின்றாய்
ரத்வத்தையும் ராட்சசியும் மெத்தைகளில் படுத்திருக்க – நீ
நுளம்போடும் நோயோடும் பற்றையிலே படுப்பது ஏன்?
தலைவர்களின் பந்தயத்தில் நீதானா பலிக்கடா?
முல்லைத்தீவு முகாம் முற்றாக அழிந்த பின்னும்
செத்தவர்கள் பட்டியலை நீ பார்க்க முடிந்ததா?
உன் கதியும் அதுதானென அறியாயோ மச்சான்!

யாழ்ப்பாதை திறக்க வந்த யாழுவா இப்போ நீ
இடைப்பாதை பலதிறந்து ஏங்கி முழிக்கின்றாய் – எமது
போர்ப்பாதை வேகத்தில் நின்தோழர் பலரிழந்தாய்!
தார்ப்பாதை காணாமலே டாங்கிகள் பலவிழந்தாய்!
புதுப்பாதை வழிவந்து பூசை நடத்த முதல்
நேர்ப்பாதை பிடித்து நீ ஊருக்கு மாறுமச்சான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜயசிக்குறுவுக்கு ஒரு கடிதம்

ஆர்ப்பாட்டம் என்ன!
அடிவயிற்றி லிருந்தொலித்த முழக்கம் என்ன?
பீடிகை என்ன!
பெருமெடுப்பில் படைகுவித்த வீரியம் என்ன?
வாய்ப்பேச்சு மட்டுமா!
வானொலிப் பீற்றலென்ன?
கனகடின ஆயுதமென்ன?
எல்லாமே வெறும் கூப்பாடாய்ப் போச்சே!
குதிக்கால் பிடரியிலே அடித்திடத் திசைமாறி
அடலேறுகள் எல்லாம்
வாய்க்கால் வரம்புகளால் வழிமாறிப் போயாச்சே!
ஜயசிக்குறு என்றொரு பெயரெடுத்து வைத்தது யார்?
ஓராண்டு முடிந்தபின்னும் ஓயாத போரிதனில் – இனி
எது சிக்குறு என்று எல்லோர்க்கும் புரிந்தாச்சு!

'சூரியக் கதிர்' உனக்கு சூரன் என்ற பிரமை தர
'சத்ஜெய' வின் முன்னேற்றம் சாக்காக அமைந்துவிட
'எடிபல' வில் எம் பெடியள் விநயமாய் விலகி நிற்க
புலிப்பலம் உடைந்ததென்று பேயனாய் நீ புரிந்து
எம்மிடம் அடிபடவென்றே ஒரு அழகான திட்டமிட்டாய்
அதுவோ ஜயசிக்குறு என்ற பெயரளவில் முழிக்கிறது!
கோடானு கோடியாய் குவித்திட்ட ஆயுதமும்
ஏராளமான சிங்களப் படைகளும் – எம்
வீராதி வீரப் புலிகளின் விரலசைவில்
ஊனமுற்றுப் போய் ஒருக்களித்து நிற்குது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரானபாதையில் நெடுஞ்சாலை திறக்க வந்தாய்—பின்னர்
வேரோடு மரம் சாய்த்து பாதைகளைப் பெருப்பித்தாய்
தாண்டிக் குளத்தில் பக்கவாட்டு எலும்பொடிந்து
தாறுமாறாக நீ கவிழ்ந்தாய்
மன்ன குளத்தில் மண் கவ்வி நெளிந்தாய்
போராயுதம் இழந்து திசைகள் பல பிரிந்தாய்
உட்பாதையால் வந்தால் ஊடுருவல் சுகமென்று
வனப்பாதையால் வந்து கரிப்பட்ட முறிப்பமர்ந்து
மாலைக்குள் பிடிப்போம் மாங்குளம் சந்தி என்றாய்
பருப்பா கடலையா நீ கைவைத்துக் கதைபேச!
நெருப்பாய்த் தகித்தெழுந்து உடைத்தார் புலிவீரர்

ஏராள மாயுந்தன் படைவீரர் தனையிழந்தாய்
போராட முன்னமே புதுரகப்போர்ப் பொறியிழந்தாய் – நாம்
வேரோடியமண்ணில் நீ தேரோடிப் பார்க்கவந்தாய் – முடிவில்
தார்ரோட்டைக் காணாமலே டாங்கிகள் பல இழந்தாய்

ஒன்றரை மாதமதில் கைகுலுக்க வந்தவனே
ஒரு வருடம் ஆன பின்னும்
உலைவதே உன் தலைவிதியா? – உன்
உடலைக் கூட உன்னவர்கள்
பொறுப்பேற்க மாட்டார்கள் – நீ
உயிர்துறந்த கதையையும் – உன்
உறவுக்கு உரைக்க மாட்டார்கள்
காணாமற் போனோரின் கனநீளப் பட்டியலில்
கண்காணா மூலையிலே உன்பெயரும் இடம் பெறலாம்
இப்போதே ஊருக்கு ஓடி விட்டால் உனக்கு நலம்
ஏதோ! யோசித்துச் செய் மச்சான்

**விடுதலைக்காய் வீரமுடன் வெகுண்டெழுந்து போராடும்**
**வீரப் புலிகள் அணி வெருண்டோடிப் போகாது**
**தானைப் பெருந்தலைவன் கண்ணசையும் இடமெல்லாம்**
**வானைப் பிளந்ததுபோல் பூகம்பம் வெடித்து எழும்.**

**ஜயசிக்குறு ஓராண்டு நிறைவு விழாக்கவிதை**
**ஒலிபரப்பு - புலிகளின்குரல் வானொலி (13.05.1998)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேருக்கு நீர் வேண்டும் [ஜயசிக்குறுவுக்கு... தொடர்ச்சி]

வீரர்களே!
எம்மீழமண்ணின் நிஜ வேந்தர்களே!
ஓராண்டு தீர்ந்ததய்யா
ஓயாமல் நீர் விழித்து
ஓர்மம் சளைக்காது ஓமந்தைக் காட்டினிலும்
வன்மம் சலிக்காது வன்னிக் கரைகளிலும்
போராயுதம் தரித்துப் புழுங்கிக் கிடந்தீரே! – நாம்
ஏராயுதம் எடுத்துக் களனி கிளறிடவும்
சோறாக்கி உயிர்ப்பூக்கள்
உதிராமல் பார்த்திடவும்
நீராற்றிய வீரம்
நினைக்க மனம் சிலிர்க்கிறது

எத்தனை களங்களில் இரத்தம் சிந்தினீர்!
எத்தனை தோழரைத் தோள்களில் ஏந்தினீர்!
எத்தனை இரவுகள் விழிமூட மறுத்தீர்!
எத்தனை கணங்களில் உறவுகளை நினைந்தீர்!
பத்தரை மாற்றுத் தங்கங்களே – நீர்
பாதம் பதித்த களத்துமுனை மண்ணெல்லாம் – நாம்
பக்தியுடன் நெற்றியிலே தொட்டணிந்து நினைவுருக்கி
சித்தமதில் வீரமதைச் செழிக்க வைக்கும் நீறன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திரனாய் புத்திரியாய்
சோதரனாய் சோதரியாய்
காதலனாய் காதலியாய்
கணவனாய் மனைவியாய்
தாயாய்த் தந்தையாய் - என
எத்தனை வடிவமதில்
உறவுப் பெருந்தளைகள் உக்கிரமாய் உமைவரிக்க
அத்தனையும் விலக்கி..!
சேயின் கரமதனைத் தாயெடுத்து விலக்குதல் போல்
பக்குவமாய் இழைபிரித்து
கச்சிதமாய்க் கைநழுவி
நெஞ்சின் கண்காணா ஆழத்தில்
நேசங்களையும் புதைத்து விட்டு..!
மண் பாசம்... ஆம்!
மண்பாசம் வரித்தெடுத்து மானமற வீரரென
கண் கூசும் களத்தில் நீர்
கருத்தூன்றி நிற்கின்றீர்

என் சொல்வோம்!
உம் செயலை ஏதென்று எடுத்துரைப்போம்!
புண் பட்டு நீர் களத்தில்
மண்சாயும் வேளையிலும்
ஊர்ந்து வந்து உம் தோழன்
உமைத் தாங்கும் வேளையிலும்
உம் உதிரத்தால் நிலம் நனைத்து
சேறாகிப் போகையிலும்
பாரத்திலும் பசியிலும் தோழன் நடை தளர்கையிலும்
நாம் என் செய்யத் தக்கோம்?
என்ன பங்கை இட்டோம்? - வெறும்
வாய்ப் பந்தல் இட்டு வடிவாகக் கதைபேசி
கூப்பாடு போட்டுப் பொதுமேடை அதிரவைக்கும் - அரை
வேக்காட்டுத் தனங்கள் இனிமேலும் வேண்டாம்

வாய்ப்பந்தல் பிய்த்தெறிந்து
போர்ப்பந்தல் போடுவோம் - எம்
நோய்க்கும் நோய் தொடரும் விதிக்கும்
வேரெங்கு எனத் தேடுவோம்
பாய்க்கும் பருப்புக்கும் பங்கீட்டு அட்டைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீட்டி நெடு வரிசை நிற்பதனை விடுத்து
மேய்க்கும் சிங்களனும்
நாய்க்கும் கீழான நமது இனத் துரோகிகளும்
ஏய்க்கும் காலம் தொடர்ந்திடா வண்ணம்
போருக்கு உரமேற்றுவோம்.
வாய்க்கும்..! எமக்கு வெற்றி வாய்க்கும்
ஜயசிக்குறு கண்ட ஓராண்டுப் பேரடிகள் – எம்
தேசத்து வீரர்களின் வரலாற்றுச் சாதனையே!

வாருங்கள்!
தேசத்தின் தேவையினைத்
தெளிவோடு கண்ணோக்கிப் பாருங்கள்
தோசம் எதுவென்று
தோளோடு தோள் தொட்டுப் பேசுங்கள்
வேசங்கள் கலைத்து
விதி வசத்தையுணர்ந்து விரையுங்கள்
யாருக்காய் இந்த யாக வேள்வியென
மாருக்குள் விரல் விட்டுக் கேளுங்கள்
ஊருக்கு உபதேசம் உனக்கல்ல கண்ணே என்ற
போலிப் பீற்றல்களை மறவுங்கள்


வேருக்கு நீர் வேண்டும்!
என உணர்ந்து ஒற்றுமையாய்
போருக்கு வாருங்கள்
நாருக்கு மலர் கோர்த்து மாவீரர் ஊர்திகட்டு
மாலைகள் தந்திட்டால் போதுமா?
பாருக்குள் ஈழம் உதித்து எழுந்திட
படையிலே வந்திங்கு சேருங்கள்!

பிறமண்ணும் விடமாட்டோம் எனக் காட்டுவோம்–நீ
புலியாகு பகைவென்று கொடியேற்றுவோம்!

**ஜயசிக்குறு ஓராண்டு நிறைவு விழாக்கவிதை**
**ஒலிபரப்பு - புலிகளின்குரல் வானொலி (13.05.1998)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழம் வென்று வரும்

முப்புறமும் கடல் சூழ்ந்த
பொற் சுரங்கமெங்கள் நாடு
வீரர்கள் விளையும் தமிழ்
ஈழமென்று பேரு!
பரந்த மணலாறு – எமைச்
சூழ்ந்திருக்கும் காடு!
பாய்ந்து வரும் பகைவனுக்கு
இதுவே சுடுகாடு!
வயல் வளங்கள் நிறைவதனால்
குறைவதில்லைச் சோறு!

யாழை இழந்து வந்தோம்
வீரம் குறையவில்லை
முல்லைத் தளமழித்து – மூர்க்கர்
மூக்கை உடைத்து நின்றோம்
போரைத் தொடர்ந்திழுக்க – பகைவன்
பரந்தன் தாண்டி வந்தான்
வாலை மடிக்கவில்லை–நாங்கள்
வகையாய் அடி கொடுத்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்தன் தளப் பரப்பில்
பாய்ந்து களம் சமைத்தோம்
ஆனையிறவில் பல கணைகள்
அள்ளிச் சுமந்து வந்தோம்
ஆட்டிலறித் தளங்கள்
அழித்து நொருக்கி வந்தோம்

குண்டு வீசித் திரியும் அந்தக்
கோரப் பெரும் பறவையெல்லாம்
அம்பு பட்ட புள்ளினம் போல்
ஆங்காங்கே வீழும்
வந்த வினை என்னவென்று கண்டறிய –
வைத்தியர்கள் வந்து வந்து தலை சொறிந்து
வந்த வழி போவார்
வானில் ஒன்றெரியும்
வட கடலில் ஒன்று விழும்
ஏனிதென்று அறியு முன்னரே
வயலில் ஒன்று விழும்
முற்றத்து வேலி பிய்த்தெறியும்
உலகில் உள்ளோர் உதட்டில் கை வைக்க
வானம் நின்றதிரும்
தமிழ்ச் சேனை பொங்கியெழும்
தலைவன் கண்கள் காட்டும்
திசைகள் தகர்ந்து வெந்தழியும்
தானை தொடர்ந்து முன்னேறும்

ஈழம் வென்று வரும்
புலிகள் தாகம் வென்று வரும்
வானிலிருந்து மலர்கள் சொரிய
வீரம் வென்று வரும்

ஈழமெங்கும் வேங்கைக் கொடி பறக்கும்
ஈனர்களின் சாவுமணி ஒலிக்கும்
சிதறிப் போன தமிழர் இனம் சேரும்
சிறப்புடனே எம் தலைவன் ஆட்சி வரும்

**20.3.1997**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திலீபா...! நீ சாந்தி பெறு!

வேட்டுக்கள் வேண்டாமென – உடற்
கூட்டுக்குள் நெருப்பையிட்டு
நாட்டிற்குள் தீ மூட்டிய திலீபா – நின்மனக்
கோட்டையின் பலம் கண்டு
சதிக் கூட்டங்கள் கலங்கியது நிஜம்தான்

பாட்டுக்கள் பாடியுனைப் படியேற்றி வைத்த – எம்
பாலகர் கூட்டமும் பாவையர் கோட்டமும்
நீ போட்ட கோட்டிலே நடந்திடத்
திரண்ட பெருஞ் சேனையாய்
காட்டுக்குள் வளர்வதும் நிஜம்தான்

எம் தோட்டத்து மலர்களெல்லாம்
நறுந்தேனைச் சொரியவில்லை
நாட்டிற்கோர் நலன் தேடிக்
குருதியாய்ச் சொரிந்து அவை – தமிழ்
ஈழத்து மண்ணையெல்லாம் சேறாக்கிச் – சிவப்பாக்கி
உன் கனவுதனை நனவாக்கும்
திலீபா நீ சாந்தி பெறு!

22.9.88



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் என்றும் நிலைத்தீர் மாமா!

திலீபன் மாமா! திலீபன் மாமா!
தண்ணியை மறந்து தவித்தது ஏனோ!
புண்ணிய ஈழம் மலர்வதற்காக
பொன்னுடல் தன்னை வெறுத்தீர்தானோ!

அந்நியப் படைகள் அலட்சியம் செய்ய
பன்னிரு நாளாய் தீ வளர்த்தீரோ!
மண்ணினை மீட்கும் புனிதப் போரில்
நின்னுடல் எரித்து நிலைத்து நின்றீரோ!

தேசங்காக்கும் வீரப்போரின்
பாதை ஒளிர விளக்கானீரோ!
பாச மக்கள் நெஞ்சந் தொட்டு
தேச வழியில் திருப்பி வைத்தீரோ!

வேசம் கலைந்த மாற்றான் படைகள்
தேசம் அகன்று செல்ல வைத்தீரோ!
வீசும் தென்றல் காற்றில் கூட
தியாக ஒளியை மிளிர வைத்தீரோ!

நினைவில் என்றும் நிலைத்தீர் மாமா!
ஈழப் படகின் கலங்கரை விளக்காய்
காலம் முழுதும் ஒளிர்ந்திடும் உம்மை
மானத் தமிழர் மனதில் நிறைத்தோம்.

**1992 ம் ஆண்டு-தியாகி திலீபன் ஞாபகார்த்த விழாவில்**
**ஜனா வால் வாசிக்கப்பட்டு முதல் பரிசு பெற்ற கவிதை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபா!

நல்லூரின் வீதியிலே வந்து சிரித்தாய்
மேடையிலே போயமர்ந்து வீரம் விதைத்தாய்
பாடையிலே நீயிறங்கிப் போன கணத்திலே
வேடமிட்ட இந்தியரின் துகிலை உரிந்தாய்!

ஈழமக்கள் எங்களுக்காய் சிலுவை சுமந்தாய்
அடிவயிற்றில் தீ மூட்டி உடலம் எரித்தாய்
புதியதொரு போர் முனையில் நின்று எதிர்த்தாய்
நாவறண்டு உடல் சுருண்டு வேள்வி வளர்த்தாய்!

நீ செயலிழந்து வருடங்கள் ஏழானதோ!
எம் நெஞ்சுகளில் உன்நினைவு வேரானதோ!
மரணம்தான் வாழ்க்கையின் முடிவு என்றாலும்—உன்
மரணத்திலே வரலாறு ஜனனம் பெற்றதே!

உன் மூச்சு அன்று ஒரு புயலானது
உன் விழிகள் தீ மூட்டும் கனலானது
உலகமெல்லாம் மூக்கின் மேல் விரலை வைத்தது—எம்
உள்ளங்களில் பூகம்பம் வாய் பிளந்தது!

நெஞ்சத்தில் குடியிருக்கும் தியாக நெருப்பே!
திலீபா!— வஞ்சத்தை வெற்றி கொண்ட வானக மலரே!
உன் பாதை வழித்தடத்தில் செல்லுகிறோம் நாம்
வேங்கைக் கொடிநாட்டி வீரநடை போடுகிறோம் நாம்!

15.4.94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் எம் நாடெனும் போதினிலே [பாடல்]

ஈழம் எம் நாடெனும் போதினிலே
ஒரு ஈகம் பிறக்குது வாழ்வினிலே
திலீபன் தந்த இவ் உணர்வினிலே
தாகம் வளருது நாட்டினிலே

வேகம் கொண்டதோர் பிள்ளையவன்
வேதனை வேள்வியில் உயிர் எறிந்தான்
தாகம் தமிழீழம் ஒன்றே என்று
மோகம் கொண்டு தன் உடல் தகித்தான்

அந்நியர் காலடி எம் மண்ணில்
ஆக்கமாய் என்றுமே ஆகாது—எனப்
புண்ணியவான் இவன் கூறிவிட்டு
புதுமைப் புரட்சியில் விழிசாய்த்தான்

தொட்டு நாம் மேடையில் ஏற்றி விட்டோம்
உடல் கெட்டவன் பாடையில் இறங்கிவந்தான்
பட்டறிவு இதுவும் போதாதா
நம் மக்களும் முழுதாய் இணைவதற்கு

கட்டையிலே அவன் போனாலும்
வெட்டையிலே உண்மை எடுத்துரைத்தான்
பட்டை யடித்த பாரதப் படையினரின்
கொட்டமடக்கிட வழி சமைத்தான்

நெட்ட நெடுந்தூரம் இல்லை ஐயா— வெகு
கிட்டடியில் எம் வெற்றி வரும்
கொட்டமடித்தவர் எல்லோரும்—எம்
காலடி தொட்டிடும் வேளை வரும்.

15.9.94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திலீபன் மாமா!

ஆதரவென்று கூறியவாறே
அந்நியன் எங்கள் மண்ணில் நுழைந்தான்.
போரிடும் வீரப் புலிகளின் வேட்கை
புரிந்திட மறுத்து வருந்திட வைத்தான்.

அகிம்சையின் மொழியில் பேசிட எண்ணி
திலீபன் மாமா தீவிரமானார்.
நல்லூர்க் கந்தன் வீதியில் மாமா
மேடையமைத்துப் பசியை எதிர்த்தார்.

தேசம் காக்கும் தீரப் போரில்
திலீபன்மாமா தன்னை எரித்தார்.
பசியின் நெருப்பு உடலைத் தகிக்க
நீரைக் கூட நெருங்க மறுத்தார்.

பன்னிரு தினங்கள் அணு அணுவாக
தன்னுயிர் இழந்தார் திலீபன் மாமா.
மேடையில் அமர்ந்த திலீபன் மாமா
பாடையில் போனார் எங்களுக்காக.

வாழும் வயதில் திலீபன் மாமா
சாவை அழைத்தார் எங்களுக்காக.
வளரும் பிள்ளைகள் வாழ்வதற்காக
தன்னை அழித்தவர் எங்கள் மாமா.

பள்ளிப் பிள்ளைகள் எங்கள் மனதில்
விடுதலை உணர்வு வளர்ந்திடவேண்டும்.
விடுதலை வேள்வியில் தம்மை அழித்த
வீரரை நாங்கள் வணங்கிட வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபன் சிறப்புக்கவிதாஞ்சலி

விடுதலை வேட்கை சுடராய் விழிகளில் நடனமாட
பறந்திடும் கேசத்தோடும் புன்னகை வதனத்தோடும்
நடந்தவன் நல்லூர் வீதி மேடையை நாடிச்செல்ல
திரண்ட எம் மக்கள் கூட்டம் 'தெய்வமே..' என்றழைக்க
பஞ்செனெ வெண்மைக் கேசம் கொண்டதோர் பக்தி மாது
பையவே திலீபன் முன்னால் பாதையை மறித்து வந்து
கையிலே தாங்கி வந்த அர்ச்சனைத் தட்டைத் தொட்டு
விரலிலே விபூதி அள்ளி எம் வீரனின் நுதலில் பூச
பௌர்ணமித் திங்களாய் எம் திலீபனோ முகம் ஜொலித்தான்.

எங்களின் பிரச்சனைக்கு... எங்களின் விடுதலைக்கு...
எங்களின் பங்குமின்றி எங்களின் விருப்புமின்றி
சிங்களம் பெற்றெடுத்த கிழநரி ஜெயவர்த்தனாவும்,
தன்னலம் மட்டுமேயோர் இலட்சியக் குறியாய்க் கொண்ட
அன்றைய பாரதத்தின் அரசியல் ஓச்சுவோனும்
தங்களுக்குள்ளே கூடித் தந்திரக் கூத்தடித்து
செய்தவோர் ஒப்பந்தத்தின் அம்சங்கள் ஐந்தினையே
செயற்படவைக்கத் திலீபன் வயிற்றுடன் போர் தொடுத்தான்.

பண்டமும் பருப்பும் வானில் நாம் உண்டிடவென்றே போட்டு
கண்டறியாதவொரு கரிசனைச் சாலம் காட்டி
தந்திரமாக எங்கள் தலைவனைக் கூட்டிச் சென்று
ஒன்றுமே இல்லா அந்த ஒப்பந்த ஓலைதன்னை
நிர்ப்பந்தமாகவே அவர் ஏற்றிட மிரட்டியங்கு
அறையிலே பூட்டி அவமானப் படுத்தி–ஐயோ
எத்தனை சாகசங்கள்! எத்துணை கேவலங்கள்!

அந்த ஒப்பந்தப் பட்டோலையின்
உள்ளமைந்த வரிகளைத்தான்
உண்மையுடன் நிறைவேற்ற உத்தமன் எம் திலீபன்
உள்ளார்ந்த வேட்கையுடன் உண்ணா நோன்பு புக்கான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களும் மாணவரும் மேடையைச் சூழ்ந்திருக்க
பக்கலில் மேடையிட்டு கவிதைகள் சொற்பொழிவு
உணர்வுகள் கொப்பளிக்கும் உயர்மிகு வேளையதனில்
திலீபனும் தன்னுணர்வில் மக்களோடிணைந்து கொண்டான்
ஒப்பிலா அந்த வீரன் உறுவினை கண்டு மக்கள்
வெப்பினார், வீரமுற்றார் – சங்கது
சுட்டதைப்போல் மென்மேலும் தெளிவு பெற்றார்.

பற்றது–சுய பற்றது விட்டுத் திலீபன்
பாடையை நோக்கிப் பயணம்
சொட்டதும் தளரா முனைப்பில்
வெப்புடன் தொடர்ந்த போதும்
புத்தனின் பாரதமோ பகர்ந்தது ஏதுமில்லை.

காந்தியைப் போற்றும் அந்த இந்திய தேசம் அன்று
ஏந்திய ஒப்பந்தத்தைச் சரிவரச் செய்யவில்லை.
காந்தியின் தேசமென்று புகழுரைத்தாரேயன்றி
அன்னவர் அகிம்சா வழியைப் புரிந்திட மறுத்தார்–ஐயோ
அந்தக் காந்தியும் கூட முன்னர்
நீருணவு அருந்தித்தானே விரதமும் அனுசரித்தார்!
நீரதும் ஏலாத் திலீபன், இளமையின்
ஆசாபாசா உணர்வெலாம் ஒடுக்கிப் போரில்
ஆயுதம் ஏந்திக் காயம் பட்டவன் பட்டும் மீண்டும்
உடலதை எரிக்கும் போரை உவப்புடன் ஏற்ற வேளை
பதரெனப் பாரதத்தால் புறமென ஒதுக்கப் பட்டான்.

கணம் கணமாக அந்த இந்தியப் பதிலைக் காத்து
பிணமெனும் நிலை வராமல் திலீபன்
வாழ்ந்திட வேண்டுமென்று துடித்தனர் மக்கள் ஆங்கே
துவண்டனர் தாய்க்குலத்தோர்
ஏதுமே எட்டவில்லை!?

ஐரிஸ் போராட்டவீரன் பொபி சான்டஸ் என்ன செய்தான்?
சிறையிலே வதங்கி வாடி வீரமாய் சாவணைத்தான்
ஆயினும் அவனும் நீராகாரம் நிதமும் உண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரையே நினைத்திடாதவோர்
போரிலே குதித்த உலகின்—முதல்
மாபெரும் வீரனென்றால்
தலைவர் பிரபாகரன்தான் ஐயா
எண்பத்தாறிலே—தலைவர் நவம்பரில் போர் தொடுத்தார்
தகவற் தொடர்பினை வென்றெடுத்தார்
அன்னவர் பாசறையில் வளர்ந்தொரு வீரனாக
வந்த எம் வண்ணத் திலீபன்
கண்ணது போல அந்த விடுதலை வேதம் காத்து
பொன்னதை யொத்த வேள்விப்
போரினைத் தொடர்ந்து நின்றான்.

மகத்தான அந்த மன உறுதி பாரீர்!
எக்கட்டத்திலேனும் தன் விருப்புக்கு மாறாக
மருந்தோ சிகிச்சையோ உணவோ நீரோ
தந்திடக் கூடாதென்று சத்தியம் வேண்டிக் கொண்டே
மேடையில் போயமர்ந்தான்—சந்தன மேனியாளன்
இறப்பின் பின்னரும் தன் ஈகத்தின் தொடர்ச்சியாக
உடலின் கூறுகள் உயர் கல்விக்கு உதவவென
மருத்துவ பீடத்திற்கு அனுப்பிடல் வேண்டுமென்றான்.

நிமிடங்கள் மணிகளாக
மணித்துளிகள் தினங்களாகி
ஒன்றாக இரண்டாக மூன்றாக நாட்கழிய
உடலால் சோர்வுற்றான்—மக்கள்
உள்ளங்களில் தீயிட்டான்
எங்கும் எரியும் உணர்ச்சிப் பிரவாகம்
முண்டியடித்துத் திரளும் சனக்கூட்டம்
சீருடைச் சிறார்களின் தளர் நடைச் சோகம்
ஊரூராக உருக்கொண்டு மக்கள்
பேரணியாக நல்லூர் நகர்ந்தனர்
திலீபனுக்குத் துணையாகத்
தம் வயிற்றில் தீ மூட்ட
அணியணியாக ஆட்கள் திரண்டனர்
ஆங்காங்கு மேடைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திர உணர்வு மக்களுள் கிளர்ந்தது.
கோத்திரம் குலம் சாத்திரம் யாவும்
கூடையில் போயின – சோற்றுப்
பாத்திரம் தொட மக்கள் கூசினர்
தேற்றவோர் வார்த்தையின்றி
தேசம் சிவந்தது
நல்லூரிலேயே அருகிலொருமேடை
வல்லையில் ஐவர்
முல்லையில் திருச்செல்வம்
திருமலையில் வேறொருவர்
மட்டுநகர் மேடையில் மற்றொருவர்
எங்கும் வியாபித்த இலட்சியப் போர்த்தீ!

ஆயினும்
பாரதபூமி பார்த்தே கிடந்தது
தேரோடிய எம்மண்ணில்–கண்ணீர் ஆறோடியது
வசந்தம் வீசிய வாழ்நிலத்தில்
அக்கினிப் புயல் அனல் வீசியது.

நாட்கள் கடந்தன
காந்தீயப் போர்வைகள் கிழிந்தன
மகாத்மா என்ற மாபெரும் வார்த்தையை
தனக்கே உரித்தான தனியான அணிகலனாக
தானே தனக்குச் சூடிக்கொண்ட பாரதம்
வேஷம் கலைந்து விவஸ்தை கெட்டு–வெறும்
கோஷதாரியாகக் குறிகெட்டு நின்றது
காந்தீயமென்று போற்றிப் பூஜிக்கும்
குவலயத்து மக்களெல்லாம்
குருடர்களாய்ப் போயினரோ!

அந்தக் காருண்யப் பாதையிலே
அணுஅணுவாய் எரிந்தழியும்
திலீபமெனும் மெழுகுச் சுடர்–இந்தத்
தீன விழிகளில் ஈரமதைத் தரவில்லையோ?!
மனித தர்மமென்ன மாண்டே போனதோ?!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தன் பிறந்த தேசமென்றார்களே
சித்தமே கல்லான எத்தர்களோ இவர்கள்?!
சத்தமின்றி அமர்ந்திருந்து
சித்திரவதை தன்னை
மெத்தனமாய்க் கண்கொள்ளும்
வித்தையிலே விற்பன்னரோ?!

பத்திரமாய் நாம் வாழ
சித்திரமாம் எம் திலீபன்
கத்தியில்லா யுத்தமொன்றை
கணம்கணமாய் முன்னெடுக்க
புத்தியிலே பொறிவெடித்து—எம்
புத்திரர்கள் எல்லோரும்
சத்திய வேள்வியிலே
சேர்ந்து குதித்தார்கள்
சொத்தான எம் ஈழம்
பெற்றிடலே வேதமென்று
வற்றாத பேராறாய்
வரிசையிலே வந்தார்கள்.

உடல் வற்றி உயிர் வற்றிப் போன
எம் இளவல்
கடல் வற்றிக் காய்ந்திட்ட
சவர் படிந்த நிலமாக—விழி
மடல் ஒட்டி வேதனையின்
விளிம்புகளைத் தொட்டு நின்ற
அப் பதினோராம் நாளோர்
பாவப்பட்ட நாளென்றால்
பன்னிரண்டாம் நாளை நான்
எப்படித்தான் பகர்ந்துரைப்பேன்!

நல்லூரின் வீதிதனில் நாடறியாச் சனவெள்ளம்
லட்சோப லட்சமாய் பட்சமிகு மக்கள்
கண்ணீரும் கதறல்களும் காற்றோடு பேச—திலீபன்
கண்ணோடு கண்மூடினான்—ஈழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணோடு சாய்ந்திட்ட மாவீரர் எல்லோரும்
பண்ணோடு இசை பாடி
விண்ணோடு வரவேற்றனர் –அவனைக்
கண்ணோடு ஒற்றி
காதோடு கதை பேசி
தம்மோடு அணி சேர்த்தனர்.

நாம்
கண்ணீருக்கு அணை தேடினோம்
நிலை புரியாது தடுமாறினோம்
களம் புதிதாக வெளித்திடக்
களமாடச் சுயமாக
கனலோடு அணிதேடினோம்–இனிச்
சமர்தானே சகமென்று திடமாகினோம்
புதுத் தெளிவோடு–பாசறை புக ஓடினோம்!

ஒலிபரப்பு - புலிகளின்குரல் வானொலி,
(திலீபன் நினைவு வாரம் 1997)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்த நூற்றாண்டில்
## இவன் போலும் யாருளரோ!?

ஊரெழுவில் வந்துதித்த உத்தமனே திலீபா! – வேரோடி
விழுதெறிந்து ஊரையெல்லாம் வழிக் கொணர்ந்தாய்
பாமரர் மனங்களிலே ஏரோடி இளக வைத்தாய்
போராடும் எழுச்சியினை நீரோட்டி விதைத்து விட்டாய்!

யாரோடு போரென்று யாம் மலைத்த வேளையிலே – நின்
வயிற்றோடு போர்தொடுத்து வையத்தைசிலிர்க்கவைத்தாய்
தேசம் விடியவென தேகத்துள் தீ வளர்த்தாய்
வெள்ளமென மக்களை வேள்வியிலே இறக்கி விட்டாய்!

நல்லூரின் வீதியிலே நன்கமர்ந்து கொண்டாய்
ஐந்தம்சக் கோரிக்கையை அடக்கமுடன் வைத்தாய்
நேருவின் பேரனது அலட்சியத்தில் தவித்தாய்
தீக்ஷித்தின் திமிரதனால் திருவுடலை எரித்தாய்!

காந்திமகான் அகிம்சையெலாம் காற்றிலேறிப் போச்சு
புத்தமகான் புன்னகையில் புழு உதிரலாச்சு
சத்தியத்தின் முகத்திரையோ கிழிந்தழியலாச்சு
உத்தமனே உன் குடலில் ஊன் வடியலாச்சு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையுந்தன் பாசவுடல் பாழாதல் கண்டு
பதைபதைத்துப் புரவலர்கள் பாய்ந்தேறி வந்து
பஞ்சுமனப் பாலகனே நீ பசிப் போரை விடடா! – எனக்
கெஞ்சி உனைக் கேட்கையிலே கோபமுடன் எழுந்தாய்!

போரைவிடு..! என்றெவரும் பேச இனி முனைந்தால்
தாரையென நீர் மல்கித் தாழ்வுணர்வில் மாள்வேன்
சோடைபோகும் முடிவுடன் நான் மேடை வரவில்லை
கரிகாலன் பாசறையில் வளர்ந்தவன் நான் – என்றாய்!

அண்ணனவன் வந்தான், உன் தலைவருடி நின்றான்
பெற்றவனும் பிள்ளையும் போல் உற்றுணர்ந்து நின்றீர்
கொற்றவனின் விழிகளவை வேங்கையென மின்ன
மற்றவர்கள் நாமெல்லாம் விழி நனைந்து நின்றோம்!

நித்தமும் உன்நிலைப் படங்கள் தினசரிகள் சுமந்து வர
சத்தமும் ஆர்ப்பரிப்பும் ஈழமெங்கும் தொனித்தது
அத்தனை பேர் நெஞ்சுகளும் காய்ந்துலர்ந்து துடித்தன
புத்தனது தேசம் மட்டும் பொய்த் தூக்கம் கொண்டது!

ஊர்களெலாம் உணர்வெறிந்து உக்கிரமாய் நின்றன
மிதிவண்டி மாட்டுவண்டி அணிகளெல்லாம் வந்தன
நல்லூரின் வீதியெலாம் விம்மல் ஒலிச் சாகரம்
வல்லான் உன் திறன்பாடி வானமெல்லாம் ஒலிமயம்!

இந்திரா பிரியதர்சினியின் சுந்தர புருஷனும்
இலங்கைத் தீவகத்தின் குள்ளநரி ஜே.ஆர் உம்
இணைந்து தமக்குள்ளே ஆக்கி விட்ட உடன் படிக்கை
ஷரத்துக்கள் ஐந்தினைத்தான் நிறைவேற்ற கோரிநின்றாய்!

முற்றும் முடி நரைத்த மூதாட்டி பொட்டிடவே
முத்துச் சிரிப்போடு மேடை சென்றமர்ந்தவனே!
நல்லூர்க் கந்தனின் முன்றலிலே தளமிட்டு
வெந்தே மடியவென வீரமுடன் அமர்ந்தவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ப்பந்தம் வேறேதும் நிபந்தனைகள் போட்டாயா?
நெற்றியில் தவழும் முடி நிலையுலர்ந்து சோர
வட்ட நிலா வண்ண முகம் நீரிழந்து நோக
மட்டரகப் பேய்களுடன் மல்லாடி நின்றாய்!

உடலைக் கருக்கியுன் குடலைக் கருக்கி நீ
கடலைப் பிளந்திடும் தியாகப் போர் தொடுத்தாய்
விடலைப் பருவத்து விருப்புகளைத் துறந்தாய்
குடலைப் பருவத்தில் குலத்துக்காய் மடிந்தாய்!

மேடையிலே நீயேறக் கைதட்டி மகிழ்ந்தோம்
பாடம் படித்திடும் பாரதமென் றிருந்தோம்
பாடையிலே நீயிறங்கப் பதராகிப் போனோம்
காடையராய் மாறும் காழ்ப்பு நிலை அடைந்தோம்!

மண்ணோடு சாய்ந்திட்ட மாவீரர் எல்லோரும்
பண்ணோடு இசைபாடி விண்ணோடு வரவேற்றனர் –
உனை
கண்ணோடு ஒற்றிக் காதோடு கதை பேசி
தம்மோடு அணி சேர்த்தனர்!

நாம் கண்ணீருக்கு **அணை** தேடினோம்
நிலை புரியாது தடுமாறினோம்
இனிச் சமர்தானே சகமென்று திடமாகினோம்
புதுத்தெளிவோடு பாசறை புக ஓடினோம்!

இந்த நூற்றாண்டில் இவன் போல யாருளரோ...?
மனதுக்குள் விடை தேடினோம்!

ஈழத்து இதயங்கள் யாவிலும் உனக்கென
மானத்தின் கற்களும் மலர்ச்செண்டும் சேர்த்து
ஞாலத்தில் கிடையாத திருக்கோயில் நாம் கட்டினோம்
உறுதியின் குன்றென உள்ளத்தால் பணிந்து
பாதத்தில் மலர் கொட்டினோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கப்டன் மொறிஸ் (பரதராஜன் தியாகராஜா)**
பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப்பாளர்
இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணம் 1.5.1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தம்பியல்லவோடா நீ

ஆர்வமுடன் கலை பயின்றாய்
ஆசையுடன் நிதம் படித்தாய்
கோர மனச் சிங்களவன்
குழி பறிக்க முனைகையிலே
ஆர்ப்பரித்தாய் அலையானாய்
நாளிதல்ல நாம் படிக்க
நம் மண்ணைக் காத்திடவே
போரிடுவோம் என உரைத்து
புறப்பட்டாய் புலியானாய்
வீரமுடன் நீ படித்த
போர்க்களத்துப் புதுமைகளை
நாடெல்லாம் நிதம் சொல்ல
நான் திகைத்தேன்!

இருட்டினிலே நிழலாடப்
புரட்டுகின்ற விழிகளுடன்
தாய்மடியில் புரண்டிருந்த
பரதனா இவன்?!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரித் தந்திரங்களுடன்
நய வஞ்சகங்களுடன்
நம் மண்ணை அள்ள வந்து
கோட்டைகளில் கால் பதித்த
மாற்றானின் மார்புகளை
மானமுடன் துளைத்தெறிந்தாய்
போர்க்காலக் கதைகளிலே
புகுந்து நின்றாய்!

களம் கண்டாய்
களம் கண்டாய்
நிதம் கொண்டாய்
தொண்டைமானாற்றிலே
தூயகாவியம் படைத்தாய்
பூநகரியிலே பசீலனுடன்
படை கொண்டாய்
பருத்தித்துறையினிலே
பாசறைகள் ஆடவைத்தாய்
பாசமுடன் எம் மக்கள்
பாதையிலே செல்ல வைத்தாய்
திசை தெரியா இளைஞர்களை
தேச வழி திருப்பி வைத்தாய்
எதையெல்லாம் நான் நினைக்க
எப்படி நான் எடுத்துரைக்க
நேசமுடன் நான் வளர்த்த
தம்பியல்லவோடா நீ!

அமைதிப்படை என வந்த
ஆக்கிரமிப்பதனை
வசை கொண்டாய் – தலைவரது
வழி நிற்போம் நாமென்றாய்
புரியவில்லை எனக்கு முதல்!
புரிய வைத்தாய்
ராஜரீகங்கள் உரைத்தாய்
போர் முனையின் பயனுரைத்தாய்
நேசமுடன் நான் வளர்த்த
தம்பியல்லவோடா நீ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் முனையில் வரிப்புலியாய்
வலிந்து நின்றாய்
ஹிந்தியரும் சீக்கியரும்
தம் குரலில் சீறவைத்தாய் – பின்
அவர் வாயடைத்தாய்!

முக்கோணத்தாக்குதலில்
முன்நின்று முரசொலித்தாய்
ஈழக்
கறை களைந்தாய்
நம்மவர்கள் நாயாக
நீ மடிந்தாய்!

நாட்டில் புகழ் நிறைத்தாய்
என்ன இந்த நாளென்று
எம்மவரை ஏங்க வைத்தாய்
கங்கைகளை யமுனைகளை
எம் மண்ணில் ஓடவைத்தாய்
முந்நூறு ஆண்டென்ன
முக்கோடி ஆண்டினிலும்
நான் மறவேன்
நம்மவர் மறவர்
பொன் நூறு கொட்டியென்ன
புதினமடா
இவ்வீர இளம் தம்பி
எம்மண்ணிற் காற்றியதோர்
புலி வீரப் பணியதுவே!

புது அலையாய் வளருதடா
தம்பி நீ நிதமெங்கள்
ஈழத்து வீரர்களைக்
கல்லறையுள்ளிருந்து
களத்துக்கு அனுப்பி வைப்பாய்!

**1.5.1989 இல் நடைபெற்ற இந்திய இராணுவத்தினுடனான
நேரடி மோதலில் வீரமரணமடைந்த
பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப்பாளர்
கப்டன் மொறிஸின் நினைவாக**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கப்டன் மயூரன் (பாலசபாபதி தியாகராஜா)
பூநகரி தவளைப்பாய்ச்சல் நடவடிக்கையில் வீரமரணம்
11.11.1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கப்டன் மயூரன்

அண்ணன் 'மொறிஸ்' வழியில்
அப்போதே அடி தொடர்ந்தாய்
'ஹாட்லி' யின் கல்வியையும்
காட்டமின்றிக் கைவிட்டாய்
நாட்டுநிலை இதுவென்றால்
களத்திலே பதில் காண்போம்—என
வேட்டுகள் தீர்க்க வேங்கையாய் புறப்பட்டாய்
தலைவரின் அருகிருந்தாய்!

இந்திய ஆக்கிரமிப்பு
எகத்தாளமாய் நடக்க
ஈழத்து உயிர் மூச்சை
இதயத்தில் சுமந்து கொண்டு
காட்டிலே உயிர் வாழ்ந்தாய்
'கப்டன் மொறிஸ்' ஆகி அண்ணன்
விதையாக வீழ்ந்த போதும் – தலைவன்
காலடி நின்று கொண்டாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஈழப்போர் இரண்டு' எனும்
சகாப்தம் வெடிக்கையிலே
ஆளப் பிறந்தவனாய் அனல் கக்கும் கண்ணோடு
நாட்டிலே கால் மிதித்தாய்
எதிரிக் கூட்டினைச் சிதறடித்தாய்
வேங்கையாய்க் களம் பாய்ந்தாய்
வீரமிகு தலைவனின் விழிகளால் ஆகி பெற்றாய்
தோளிலே அவர் கரம் படிய வைத்தாய்!

மன்னார் மண்கிண்டி என
வீரக் கதை படித்தாய்
'இதயபூமி'யிலே இறுக்கமாய்
கால் பதித்தாய்
'யாழ்தேவி' நடவடிக்கை
சாம்பராய்ப் போவதற்கு
போராளிக் குழுவோடு பொருத்தமாய்ப்
போர் தொடுத்தாய்!

கடைசிக் கணத்தில் உன்
களத்துப் புலிகளுடன்
ஒருக்கால் வந்தாய் – நாம்
கண்மூடி விழிக்க முன்
கனவாய்ச் சென்றாய்
தடியோடு நான் நடந்து
கதவோரம் வந்து நிற்க
கையில் 'பெடி'யோடு உனது அண்ணி
கண்கலங்கப் பார்த்திருக்க
பார்த்தாயா... ...யா?
புரியவில்லை, நினைவில் தெரியவில்லை
தெருவோடு நீ ஓடி
துள்ளி அந்த வாகனத்தின்
கூரையிலே பாய்ந்தேறிக்
குழுவோடு அமர்ந்ததைத்தான்
நாம் பார்த்தோம்
கனவாக மறைந்து போனாய்
"சும்மா பார்த்து விட்டுப் போகவந்தேன்"
என்றாய்
எம் கண்ணிலெல்லாம் காயாத
நீர்கோர்த்து விட்டுத் தானய்யா
சென்றாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ போனபின்னர் தானே நாம்
வானவில்லைப் பார்த்தோம்....
அந்த மழையில்த்தானே நீ விதையாய் போனாய்!

விடுதலையே மூச்சாகி வீரமே விளக்காகி
பொருது நின்ற படையினருள் புயலாகிப் போனாயென
விபரம் தெரிந்தவர்கள் விளக்கம் சொல்கையிலே
பூநகரிக் காட்சி எங்கள் கண்ணில் நிழலாடுதையா!

தலைவன் வளர்த்தமணி விளக்காய் நீயங்கு
தலைகள் சிதறடித்து தானை துடைத்தெறிந்த
கதைகள் பல இங்கு காதில் அடிபடுது
ஆனாலும் மயூரா உன்
உடலைக் காணவில்லையடா
விழுப்புண்கள் பெற்ற உந்தன் வித்துடலைக் காண்பதற்கு
விதி எமக்கு இல்லையடா – அதனால்தான்
உதிரம் கொதிக்கிறது உடலம் பதைக்கிறது!


'சடலம்' என்ற பெயர் உனக்கு இல்லையடா
'பொன்னுடல்' மின்னிடும் படம் வந்த ஊர்தியில்
கண்ணிலே ஒற்றிநாம் மாலை போட்டோம்
நிறை குடத்தோடு நின்றுநாம் நினைவை மீட்டோம்
'மொறிஸ்' சோடு நீ சென்ற பாதையின் வழியில் நாம்
உடலோடு உதிரமாய் ஒன்றி வாழ்வோம்
உயிரையே உருக்கிநாம் வேள்வி காப்போம்!

**11.11.1993இல் நடைபெற்ற பூநகரி தவளைப்பாய்ச்சல் நடவடிக்கையில்
வீரமரணமடைந்த கப்டன் மயூரன் நினைவாக**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கப்டன் மயூரன்
பரதன் பிறேமராஜன் (தீட்சண்யனின் மகன்)
வீரமரணம் - 5.02.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம் இனிய பரதா!

நீ தவழ்ந்தாய்
அன்னையின் மடியில் குயிலின் மழலை
தமிழில் கேட்டது!

நீ வளர்ந்தாய்
உன்னை வளர்த்த பாடசாலைகளும்
புகழ் பாடத் தொடங்கின!

நீ பேசினாய்
வரண்டு கிடந்த மனித இதயங்களும்
குளிர் பெறத் தொடங்கின!

நீ சிரித்தாய்
இருண்டு கிடந்த நமது மண்ணில்
ஒளிச்சுடர் தலை காட்டியது!

நீ நடந்தாய்
விடுதலை வேட்கையின் நம்பிக்கை மரம்
வேர் விடத் தொடங்கியது!

நீ பாய்ந்தாய்
களத்திலும் வேங்கை சளைத்ததில்லையென்று
காற்றுப் பாடியது!

நீ மறைந்தாய்
பிஞ்சுக் குழந்தையும் உன்முகம் தேடி
விம்மியழுகிறது!

**15.6.1989**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகன் பரதனுடன் தீட்சண்யன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனி என்ன செய்ய?

விடுதலைப் போராட்ட நதியின்
விளிம்புகளில்
நாற்காலி போட்டமர்ந்து
கால்மேல் கால்போட்டு
நான் கவனிக்கவில்லை.

என் காலோடு கையாக
ஒவ்வொரு அங்கமாக
அந்நதியின் ஓட்டத்தில்
வீசிக் கொண்டுதானிருந்தேன்
– ஓட்டத்தோடு கலந்து போய்
உயிர் கொடுத்துப் போராடு – என்று

ஒவ்வொன்றும் தொலைந்த போதும்
நான் ஒதுங்கி விடவில்லை
எனக்குச் சோகத்தையும் விட
வேகம்தான் வந்தது

பூநகரியில் என் கடைசித் தம்பியும்
பூகம்பமாய் வெடித்து
பிரளய வேள்வியில் ஆகுதியாய் ஆனபோது..!
'போராட்ட நதியில் பொங்கிப் பாய்வதற்கு
இன்னமும் எனக்கு அங்கம் உள்ளதா?'
ஏறிட்டுப் பார்க்கிறேன் என்னையே நான்!

1.12.1993

**சிங்கள இராணுவ கவசவாகனப் பீரங்கி வீச்சால் காலிழந்த நிலையில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெப். கேணல் தனம் அண்ணா!

தனம் அண்ணா!
தானைகள் நடத்திய தனம் அண்ணா!
மறப்போமா நின் மறவீரத் தோற்றத்தை!
அறப்போரில் ஆகுதியாகினாய் அண்ணா!
இறப்பிலும் எம் நெஞ்சை நிறைத்தாய் அண்ணா!

நீ கண்ட களங்கள் எண்ணிட ஆகுமோ!
ஓயாத அலையிலே பிளம்பாக நின்றாய் – நீ
பாயாத படைமுகாம் ஏதேனும் உண்டோ!
சேயாக ஈழத்தாய் மடியினில் வளர்ந்து நீ!
வாயாரப் புகழ் பெறும் வீரத்தில் கொழித்தாய்!

தரநிலை பாராமல் எல்லோருடனும்
தாழ்மையாய் பழகுவாய்
இடமெதெனப் பாராமல்
இன்முகமாய் கதைப்பாய்
பாசமாய் எம்முடன் பரிந்து நெகிழ்வாய்
ஆனால்... தேசத்தின் வாழ்விற்காய்
தீ யெனக் கொதிப்பாய்

கம்பீரமாய் நீ யுந்தன் வாகனத்தால் இறங்கி
எம் வீட்டு முற்றத்தில் நின்று கதைப்பாயே!
இன்று ஈழமண் மீட்பிற்காய் உன்னையே ஈந்தாய்
பேரெழுச்சி கொண்டு நாம் புறப்பட்டு விட்டோம்

தனம் அண்ணா!
உந்தன் வழி அடியெடுத்து வருகின்றோம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரன் கலையரசன் [கிங்ஸ்லி உதயன்]

### [நாட்டுப்பற்றாளர் கவிஞர் நாவண்ணனின் மைந்தன்]

கலைகளில் வல்லவன்
கல்வியில் சளைத்து நில்லான்
பகைவன் புலம் வந்ததால்
இல்லிடம் நில்லான்
"பொறுத்திடு" என்றுயார் சொல்லிடினும்
செவி கொள்ளான்.

அணி இணைந்தான்
சுடுகலன் பயிற்சிகள்
பெற்றிட்ட போதிலும்
நுண்கலைகளில் திகழ்ந்தான்
இசைக்கருவிகளில் விரல் வைத்து
நர்த்தனமாடினான்.

போர்க்குணப் புலிகளின்
கனல் நெஞ்சம் குளிர
இசைமழை பொழிந்தான்
பாசறையின் பாசமிகு சகாக்களிற்கு
பண்ணிசையைப் பயிற்றுவித்தான்.

ஆயினும்...
களத்தை மறந்தானில்லை.
எல்லையிலே படை நகர
எம்பிக் குதித்தோடி
சுடுபொறி தோள் சுமந்தான்
களமாடிவிட்டு கலையகத்துள்
நுழைவோமென்று
மனதோடிய நினைவுகளுடன்
அணி நகர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டிக் குளத்திலே அந்தத்
தண்மதி முகத்தோன் – உடலில்
செம்பொறி ஏந்தினான்.

மறக்குணத்திற்கேயேற்றாற்போல் புலிவீரனாயும்
பெயருக்கேயேற்றாற்போல் கலையரசனாயும்
குடும்பத்தின் ஒரேயொரு குலவிளக்காயும்
வாழ்ந்த அம் மறவன்
இனத்திற்கேயுரிய விடுதலை வேண்டி
வீரவித்தாகவே தன் உடல் சரிந்தான்.

அந்த மாவீரன் கலையரசனிற்கு
என் இதய அஞ்சலிகள்!

30.6.96





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவண்ணா..!
## ஈரத்தால் என் மடலும் சரிகிறதே!
### [நண்பர் நாவண்ணன் அவர்கட்கு]

அன்புடையீர்!
என்பும் உருகிடும் இச்சோகம் நின்தனுக்கு
வந்திடும் என்று நான் நினைத்ததில்லை.

மகளிற்காய் நீ வரைந்த பொழிவு மலர் தந்த போது
மனம் நெகிழ உந்தன் மைந்தனை நினைவு கூர்ந்தாய்
"எல்லா இழப்பும் உழன்று களைத்து விட்டேன்
களத்தினிலே நிற்கும் என் இளங்குஞ்சுக் கேதொன்றும்
நிகழந்திடக் கூடாது என்பதுவே வேட்கை" என்றாய்.
"அவ்வாறானதொரு பேரிடி தாங்கிட
என்னிலோ என் அகத்தாளிலோ
திடவலு இல்லை" யென்று தீனமாய்த் தேம்பி நின்றாய்!

மலர் தந்து நீயெந்தன் கண்பார்வை மறைந்து செல்ல
என் மனையாளை நானழைத்து
முழுவதையும் எடுத்தியம்பி
மனத்தால் உன் துயருணர்ந்து
உளத்தின் சலிப் புணர்வுணர்ந்து
நினைப்பால் இருவருமே வெம்பித்தான் போனோம்

ஐயா!
எது நடக்கக் கூடாதோ அது நடந்துவிட்ட சேதி
இன்றெமது வானொலியில் இடியெனவே வந்த வேளை
பொடிப் பொடியாகித்தான் போய்விட்டோம் நாங்கள்
அதுவும்
இனிமைத் தமிழ் பற்றிய உன் இலக்கியச் சிதறலின்
நெடி மறையு முன்னரே
நேராக வந்ததந்தக் கூரிய அம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தன் களம் மாண்ட வீரச் சேதி கொண்டு
ஆற்றவோர் வார்த்தையில்லை – அறிவேன்

ஆயினும்
கூற்றுவன் வந்திழுத்துப் போன கதை அல்லவே – இது
கூற்றுவனை கழுத்தில் நூலோடு தொங்கவிட்டு
மாற்றானை பொருதழித்த மாவீரர் கதையன்றோ
ஆற்றொழுக்குப் போல ஓயாமல் நீர் சிந்தி
அழுதாற்றும் கண்களை நீர் துடைப்பீர்
சீற்றமுடன் நின் உணர்வை கவிதைகளில் வடிப்பீர்
வேறென்ன சொல்ல
நாவண்ணா...!
ஈரத்தால் என் மடலும் சரிகிறதே
உன்னை ஆற்றும் திறனில்லை எனக்கு...!

**17.5.1997**

**(கவிஞர் நாவண்ணன் அவர்களின் மகன் கிங்ஸ்லி உதயனின் வீரமரணச் செய்தி கேட்டு வரைந்த மடல்.)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரும்புலி மில்லர் – பாடல்

[பன்னிரு கை வேலவனே மெட்டு]

நெஞ்சோடும் நினைவதில் எல்லாம்
மண் காக்கும் சிந்தனை கொண்டாய்
என்றுமே மறவோமையா!
கரும்புலி..... அண்ணா!
என்றுமே மறவோமையா!

போர் முழங்கும் எல்லைகள் சூழ்
பொன் தமிழீழந்தன்னில்
தான் முழங்கும் உறுதியுடன்
வாகனம் கொண்டு
குண்டோடு வாகனம் கொண்டு
ஈழ மலர்த் தோட்டமதில் விதைவிதைத்தாய் ஏந்தலே!
எதிரணியைச் சிதறடித்தாய் எங்கள்குலச் செம்மலே!

வீரம் நிறை கரும்புலி வீரனே!
உன் சீரடியை என்றும் தொழுவோமையா!
உன் வழி நாம் தொடர்ந்து – போர்க்களமே
உடன் வாறோமையா! ஐயா வாறோமையா!
நாமும் வாறோமையா! களம் வாறோமையா!

நெல்லியடி நிலத்தினிலே மில்லர் வெடித்தான்– அவன்
முதன் முதலாய் கரும்புலியின் வல்லமை சொன்னான்!
தரையினிலும் கடலினிலும் சிங்களம் வென்றார்– இவர்கள்
தரணியிலே தமிழீழம் மலர்ந்திட மாண்டார்!

கரும்புலிகள் எங்கள் காவியங்கள்!
ஈழமண்ணிலே வரைந்த ஓவியங்கள்!
புலி ஓவியங்கள் – சுடர் காவியங்கள்!
ஓவியங்கள் – காவியங்கள்!

**27.6.1994**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டேல் அண்ணா

பட்டேல் அண்ணா!
சிராட்டிக் குளத்தில் சிந்திய உதிரம்
உலர்ந்து போனாலும்..!
சூரியகுமாரின் சீரிய உடல்
சாய்ந்து போனாலும்..!
வீரவேங்கை கவியரசன்
வித்தாகிப் போனாலும்..!
மத்தாக எங்கள் மனங்களைக்
கடைந்து கொண்டேயிருக்கிறீர்கள்
சொத்தாக ஆனீர்கள்
ஈழ மண் விடுதலைக்கு
கத்தும் கடலலையாய் உங்கள் நினைவுகள்
தேசமெங்கும் ஒலிக்குதையா!

20.8.99





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வற்றாப்பளையிலிருந்து களமுனைக்கு ஒரு சேதி

பிரியமுள்ள களமுனைப் புலி வீரர்களே!
வறுமையின் கோட்டிற்குக் கீழே நாம் வாழ்ந்தாலும்
பெருமையுடன் போர்ப்பயிற்சிகளில் இறங்கியுள்ளோம்
பொழிலன் அண்ணை இங்கு எமைப் பட்டை தீட்டுகிறார்
வெகுவிரைவில் நாங்கள்உங்கள் நிலைப்பொறுப்பை எடுப்போம்
அது வரைக்கும் நாம் சேர்த்த உலருணவு உமைச் சேரும்

இனியென்ன..! நாங்கள் எல்லைகளைக் காவலிட
புலியான நீங்கள் புதுக் களங்கள் திறந்திடலாம்
வலிதான எம் கரங்கள் வரிப்புலிகளுடன் சேர
பெரிதான எம் வன்னி நிலப்பரப்பு வெளியாகும்
புளி கரைத்து எதிரிகளின் அடி வயிற்றில் ஊற்றி விட்டு
புகுவோம் படை திரண்டு யாழ்ப்பாணக் குடாவிற்குள்

இனியேது பேதம் இங்கு யாழ் என்றும் வன்னியென்றும்
புலியோடு பொது மக்கள் போரினிலே இறங்கி விட்டோம்
பிரிவேது எம்முள்ளே பிணைந்து போர்க்கணை தொடுப்போம்
வடக்கென்றும் கிழக்கென்றும் வார்த்தைகளே வேண்டாம்
பொறுப்புடனே எமக்கென்று ஈழத்தை வரித்தெடுப்போம்
விழித்திட்டோம் இனியேது வீறாப்பில் இடர்பாடு..?

களமாடு! களமாடு! கரம் கோர்த்து நாம் நடப்போம்
சுவையோடு எம்மக்கள் சமைத்திங்கு அனுப்பியுள்ள
உலர் உணவின் தெம்போடும் அரவணைப்பின் இன்போடும்
கரம் உயர விடாமல் எம் சிரம் நிமிர்த்தி நகர்வோம்
எல்லைகளில் இனியெங்கள் சுடுபொறிகள் சிரிக்கும்
தொல்லைகள் இல்லாத தமிழீழம் மலரும்.

யூன் 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எங்களின் நாடும்....

எங்களின் நாடும் எங்களின் மண்ணும்
என்றுமே எங்கள் உயிரின் உறவே!
சிங்களம் தந்திடும் சீரழிவினை
என்றுமே நாங்கள் ஏற்க மாட்டோம்!
வீரர் வளர்த்த வேள்வியை... நாம்
போரினில் புகுந்து நிறைவு செய்வோம்!

கந்தா சிங்கா விக்டர் மொறிஸ்
திலீபனே எம் தியாக வேந்தே!
நின்றாடும் பிரபாகரா பெரும்புகழ் உந்தனுக்கே!
கும்பிடு போடுவோம் அன்புடன் நாடுவோம்
தெம்புடன் பாடுவோம் களத்தினைத் தேடுவோம்.

அன்றாடம் பார் வீராபிஷேகம்
தலைவனே எம் நாயகனே!
கோட்டை வாசல் ஓசையும்
கண்டேன் மண்கிண்டி மோதலும்
வீரனே உன்னைக் கண்டிட வேண்டியே!
நாடிப் புகுவேன் களம் நெடுநாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாங்குளத்தில் மாவீரர் விழாக்கவி

அரங்குகள் பல கண்ட
ஆசான் முருகேசனுக்கும்
அடுத்தடுத்துக் கவி படித்த
நல்ல தமிழ் கவிஞர்கட்கும்
அமர்ந்திருந்தும் ஆர்ப்பரித்தும்
கவி கேட்கும் மக்களுக்கும்
சிரம் தாழ்ந்த வணக்கம்!

வாருங்கள்!
மண்ணுக்காய் மரணித்த மாவீரர் தினம் சிறக்க
மடை திறந்த வெள்ளமென வாருங்கள்!
வந்து பாருங்கள்!
சனத்தோடு சனமாகக் கைகளைத் தட்டுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிரண்டு விரலெடுத்து மூச்சிழுத்து
பன்னிரண்டு மைல் கேட்க விசிலடியுங்கள்
போதும்! அது போதும்!
பின் இரண்டு மணியளவில் வீடடைந்து
விழா மறந்து
மாவீரர் செயல் மறந்து
மாற்றான் ஷெல் மடியிலே வீழும் வரை
உறங்குங்கள்!

விடிந்தெழுந்து வேறேதும் சேதியுண்டா..?
என்று கேளுங்கள்..! வேறென்ன..!
ஈழ மண் மீட்டெடுக்க எவனோ ஈன்ற
இளைஞர்கள் இல்லையா எங்களிடம்!
நாமென்ன முட்டாள்களா!
நம் மகனை அனுப்புதற்கு!
என மெல்ல ஒதுங்குங்கள்!

மண் காக்க வென்றே
மாவீரரைத் தந்து விட்ட மானமிகு பெற்றோர்கள்
தினந்தோறும் எதிர் பார்க்கும்
தம் வீர மகவினது
சாவு வரும்
அது சொல்லும் ஒரு சேதி வரும்
பின்னொருகால் பிச்சைக் கூட்டம் வரும்
அகம் புகுந்து அன்னையரை இழுத்து வரும்
அண்ணனெங்கே..? தம்பியெங்கே..? என்று
ஆணவமாய்க் கூச்சலிடும்
மாற்றானின் பாசறைக்கு வரச்சொல்லி
ஆணையிடும்!

பட்டுணர்ந்த போதினிலும்
அவர் மனதில்
மாவீரர் தவழ்ந்த மடித் தாய் மனதில்
தீரம் வரும்
கொன்றொழித்தால் ஒழிக்கட்டும்
கொடியோனின் கரம் பட்டுக்
கூசுவதை விட – நாங்கள்
மார்பினிலே குண்டேற்றி மடிவோமே
என்றொரு ரோசம் வரும்
மண்ணுக்காய் வாழ ஒரு பாசம் வரும்
புலி வீரர் தமைக் காண நேசம் வரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம் பெரிதென
ஈழமண் எம் வாழும் மண் என
கொடியோர் குடலறுக்கும்
கொள்கைப் போரதனில்
குருதியில் புரண்டவர் எம் மாவீரர்!

ஈனர் எம் அகத்தில்
இருந்து குழி பறிப்பதனைக்
காணப் பொறுக்காமல்
களத்தினில் குதித்தெழுந்து
மானம் பெரிதென
மாண்டவரெம் மாவீரர்!

சேனையாய்ச் சிலிர்த்தெழுந்து
சிங்களப் படை சிதறடித்தவர்
தானாய்த் தனக்காக வந்தெதிர்த்த வானரரை
வானுக்கும் வானர மண்ணுக்கும்
ஓட விரட்டியவர் எங்களது மாவீரர்!

வேட்டுக்கள் வேண்டாமென உடற்
கூட்டுக்குள் நெருப்பையிட்டு
நாட்டிற்குள் தீ மூட்டிய
திலீபன் எம் மாவீரன்!

காந்தீயப் பாதையைப் புரியாத கபடரை
கணத்தினில் சாய்த்திடத் திடம் கொண்டு
நிந்தனைக் காட்டினில் வளர்ந்தவர் மாவீரர்!

விடுதலைப் போராளி வீணாகச் சாவதில்லை
உயர் இலட்சிய நெருப்பை
விதையாக்கிப் போகிறான்
அவன் கல்லறையில் முளைப்பது
அறுகம் புல் அல்ல
அசல் வித்தாக அவன் மாறி
(விடுதலை) விருட்சம் வளர்க்கிறான்
அவன் பெற்றோர்கள் காண்பது
அவன் சாவினை அல்ல
சரித்திரமாய் அவன் மாறும்
வரலாற்று வாழ்வினைத்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்புறுதல் உயிர் வெறுத்துக் களம் புகுதல்
மாற்றான் மார்புடைத்தெறிந்து மனங் குளிரல்
மண்ணுக்காய் பசி பொறுத்து
புண்ணுக்கு மருந்தின்றிப் புழுத்து வாழல்
எண்ணற்ற தோழர்களைக்
கண் முன்னால் இழந்து விட்டு
கருத்தினைக் கல்லாக்கும் களப்புலிகள்
இவர்கள்தான் எங்கள் புலிவீரர்
ஈழமண் காத்திடும் மாவீரர்!

**கப்டன் மொறிஸ்**

கூட வந்த தோழர்களிற்கு
ஓட வழி செய்து விட்டு
முற்றுகையை முறியடித்து
வருவேன் நான் என்றுரைத்து
தனித்திரண்டு புலிகளுடன்
களத்தினிலே நின்றெதிர்த்து
பாரதத்துப் பேய்களது
பாவரத்தம் களம் சிதற
கோரமுடன் படைசரித்து
வீரமுடன் மண் சாய்ந்த
பருத்தித்துறை பெற்றெடுத்த
தீர மகன் மொறிஸ் எங்கள்
தேசத்து மாவீரன்...!

**மேஜர் சிங்கன்**

முன்னேறி வாருங்கள்
முன்னே நான் செல்கின்றேன் – என்று
மாங்குளத்து முகாமிற்குள்
மதங் கொண்டு பாய்ந்தவன்
மார்பினிலே குண்டேற்றி
மண்ணுக்காய் மரணித்த
சிங்கன் எங்கள் மாவீரன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மேஜர் பசீலன்

பாரதத்துப் படையினரை
பாய்ந்தோடச் செய்தவன்
முழு ஈழ மண்ணையுமே விழித்திருந்து காத்தவன்
இழப்புக்கள் ஏராளம் கண்டு விட்ட களங்களிலும்
இனித் தாங்காது பின்னடைவோம் என்றிருந்த நிலைகளிலும்
மனம் தூங்காது மார்புயர்த்தி புலியாகப் பாய்ந்தவன்
பசீலன் எங்கள் மாவீரன்!

### தினேஷ்

என்ன நடந்தது எங்கள் தினேஷ் இற்கு
பழம் பாசி சறுக்கியதோ புலி பாடையில் சாய்ந்ததுவோ
குண்டு பொறுக்காமல் கனல் நெஞ்சினில் வெந்ததனால்
வண்ணனும் வந்தனனோ – வன்னி மண்ணது நொந்ததையா!

### மேகன்

குமுளமுனை நிலத்தின் கற்பூரப் புல் வெளியில்
குமுறிப் பாய்ந்ததடா அன்பு மேகனின் செவ்விரத்தம்
சூரனும் சுதனுமென இரு சோதர வீர மைந்தர்
செத்து மடிந்தனரே ஈழம் பெற்றிட வேண்டி நின்றே!

### காடிபாலா

காயம் பல கண்டவன் சொல்லி மாளா
எம் மனங்களில் நிறைந்தவன் காடிபாலா
ஆனந்த புர மகனாம் நெஞ்சில் ஆத்திரம் கொண்டவனாம்
வீர மரணத்தையே கட்டிக் கழுத்தில் தொங்க விட்டான்
வீரமறத்தமிழன் – விசுவாசம் – வேங்கையடா!

### வேதா

புதுக்குடியிருப்பின் புலிவீர வேதா தான்
தமிழ் ஈழ மொன்றேதான் உயிர் மூச்சின் வேதமென்றான்
கர்ணன் செல்லத் தம்பி வழி தங்கை துர்க்காவும்
மண்ணில் உரமாக எங்கும் வீரமணமாக
ஈழம் படைக்கவென்றே தம் தீரம் காட்டி நின்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லெப்டினன்ட் கேணல் போர்க்

கரும்புலி என மாறி நேற்றுக் களத்திலே மாண்ட
லெப்டினன்ட் கேணல் போர்க் எங்கள் மாவீரன்!

முழு மாவீரர் வரிசையையும் நான் கூற முடியுமா!
அவர் படைத்த சாதனைகள் கவி கொள்ள முடியுமா!
தியாகமும் திட மனதும் வார்த்தைகளில் அடங்குமா!

மாவீரர் வாரமதில்
மாங்குளத்து மண்ணதனில்
வீரமுடன் போராடி விதையான எம் மாவீரர்க்கு
வீர அஞ்சலிகள் நாம் செய்து பணிகின்றோம்!
மண்காத்த மறவர்களை மனமிருத்திக் கொள்ளுகின்றோம்!
மாங்குளத்தில் கொடியேற்றி மலர் அஞ்சலிகள் செய்கின்றோம்!

உதட்டினில் நகை எடுத்தெறிந்து – நம்
களத்தினில் புலி எதிர்க்கும்
புஜத்தினில் பொறி தெறிக்கும் – உயர்
சுடுகலன் படை சிரிக்கும்
கழுத்தினில் கருநூலிடை – எம்
உறுதியின் பலம் கிடைக்கும்
எதிர்த்து நிற்பவர் மார்பெலாம்– அவர்
செங்குருதியால் சிவக்கும்
புலிக்கொடியின் கீழ் ஈழ மண்ணிலே
வீரர்கள் படை பெருகும்
உலகிலே முதல் தமிழன் நாடென
தமிழ் ஈழமொன்றுதான் சிறக்கும்!

**1990 இல் மாங்குளத்தில் இடம் பெற்ற மாவீரர் விழாவின்**
**கவியரங்கில் இருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுமை கண்டு பொங்குவோம்

## (பண்டாரவன்னியன் நினைவுக் கவியரங்கம்)

முத்தமிழுக்குக் கடவுள் முருகன்
முழு உலகுக்கும் கடவுள் ஈசன்
அந்த முருகனுக்கு ஈசனாம்
எங்கள் முருகேசன்
அவர் தலைமைக்குச் சிறியேனின்
சிரம் தாழ்ந்த வணக்கம்!
அழகு தமிழ்க் கவிதைகளை
அடுக்கடுக்காய் வடித்திட்ட
அறிவு மிகு கவிஞர்கள்
அனைவர்க்கும் வணக்கம்!
சான்றோர்க்கும் கவி கேட்கும்
சபையோர்க்கும் வணக்கம்!

புயல் எழுந்ததோ கடல் எழுந்ததோ எனப் புலி எழுந்தது
மண்டை தீவிலே வந்த படகுகள் சிதைந்து போனது
எஞ்சியோடிய இலங்கை இராணுவம் காலிழந்தது – கையிழந்தது
கடற்புலிகளின் கடுமை கண்டு அது வெருண்டு பாய்ந்தது
மும்முனைகளில் தாக்கியும் புலி எழுந்து நின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை மதிலிலே வீரமரணங்கள் விளைந்த போதிலும்
முற்ற வெளியிலே வீர விருட்சங்கள் சாய்ந்த போதிலும்
ரகு, சிசிலியா இன்னும் பற்பலர்
களத்து மேட்டிலே புதைந்த போதிலும்
விடுதலைத் தீ விழியில் மூட்டியே போர் தொடர்ந்தது!

வானூர்திகள் வட்டமிட்டுக் குண்டுமழை பொழிய
பொம்பர்கள் தலைகுத்திக் கணைகள் பாய்ச்ச
சீனத்து விமானங்கள் பீப்பாய்களை உருட்டி விட
வானத்தில் தொடருமோர் தீ மழை
கானத்து நெருப்பாய்க் கடும்புயல்!

புலிவீரர் அரண்கள் சில புற்தரையில் வீழ்ந்தனதான் – ஆயினும்
விடிவதற்குள் மீண்டும் வீரத்துடன் முளைத்தன!
இளம்புலிகள் காயத்தால் இரத்தம் பாய்ந்ததுதான் – இருப்பினும்
புதுவீரர் போர்முனையில் இடம் மாற்றப் பட்டனர்!

சுதந்திரம் கோரும் சுவாலைகள் தொடர்ந்து
மாற்றான் சேனையை மண்ணில் சாய்த்தன!
கலங்கிய இராணுவம் கதறித் துடித்து
களத்தினில் புலிகளின் கணையில் துவண்டது!

அன்றொரு பின்னிரவில் அது நடந்தது
பின்வேலி பிரித்துப் புற முதுகிட்டான் எதிரி
ஓடினான் நடந்தான் ஏரியில் புதைந்தான்
முன்னூற்று எழுபது ஆண்டுகளின் அடக்குமுறைச்
சின்னம் உடைந்தது..! கோட்டை வெறித்தது..!
மூச்சுக் காற்றில்லாமல் மௌனத்தில் உறைந்தது!

தியாகி திலீபனின் உயர் இலட்சியம்
அவன் நினைவு நாளிலே நிஜமெடுத்தது!
கோட்டை மதிலிலே கொடி பறந்தது!
தமிழ் வீரப்புலிப்படை ஆர்ப்பரித்தது!
ஈழமெங்குமே வெடி ஒலித்தது!
மானத்தமிழினம் மகிழ்ந்தெழுந்தது!

இத்தனையும் நடந்தாலும்
வடக்கின் எல்லையில் வவுனியாவிலே
தடுத்து வைக்கிறான்..! தடை விதிக்கிறான்..!
பொருட்கள் யாவுமே புலிகளுக்கென
எடுத்துச் செல்வதாய் தடுத்துக் கொள்கிறான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவன் சீருடையில் எட்ட நின்று பார்த்திருக்க
எங்களது சிறுநரிகள் அவன் நிழலில் காத்திருந்து
பற்றி கொணர்ந்தாயா?
பெற்றோல் கொணர்ந்தாயா?
கொட்டைப் பாக்கேதும் கட்டிக் கொணர்ந்தாயா?

மெழுகுதிரி தீப்பெட்டி மறைத்துக் கொணர்ந்தாயா?
கொட்டிப் பார்க்கிறான்
கூரிய கம்பியால் குத்திப் பார்க்கிறான்!
தட்டிக் கேட்கிறான்
தமிழனை அவன் பட்டி மாடாக்குகிறான்!

சுதந்திரச் சுவடுகளில் நடக்கப் பிடிக்காத
மண்ணின் மீட்பிலே மனது படியாத
புரட்சிப் பயணத்தில் பங்கேற்க முடியாத
சொந்த மண்ணினைத் தங்கள் மக்களைச் சூறையாடி
அண்டிப் பிழைக்கும் அந்தக் கும்பலின்
வெறுமை கண்டு நீ வெம்புவாய் – அவர்
சிறுமை கண்டு நீ பொங்குவாய்!

தெற்கிலே அவன் கொட்டிக் கொடுக்கிறான்
உணவு உடையென நஷ்ட ஈடென
உதவி ஸ்தாபன நிதியினை எல்லாம்
அள்ளிக் கொடுக்கிறான்! ஆதரிக்கிறான்!
எங்கள் பேரிலே வந்த வளமெல்லாம்
சிங்களவனின் மடியில் போகுது – இங்கு
வன்னி மண்ணிலே முல்லைத் தீவிலே
செய்த வேலைக்கு ஊதியம் இல்லை
உள்ள நிதியினைப் பகிர்ந்து தந்திட
உணர்ச்சியுள்ளவன் எவனுமேயில்லை!
வருந்தும் ஊழியர் நிலையுணர்ந்திடத்
திணைக்களத்திலே பெரியவர் இல்லை!

இருந்தும் எம்மவர்கள் மத்தியிலே
சித்தமதில் விடுதலையின் நிழலும் படியாத எத்தர்களாய்
புதுக்காற்றை உணராத புல்லர்களாய்
உணர்வற்ற ஜடங்களாய்
பலபேர்கள் உள்ளார்கள் – அந்த
வெறுமை கண்டு நீ வெம்புவாய்! – அவர்
சிறுமை கண்டு நீ பொங்குவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிக் கடலிலே குருத்தோலைகள்

அறிவுக் களஞ்சியங்களில் ஆக்கிரமிப்புகள்!
குருதிக் கடலிலே குருத்தோலைகள்!
மாணவத் தோழன் ஜெகநாதன் மற்றும்
சத்யேந்திரனின் உயிர்ச் சீரழிப்புகள்
உள்ளத்தில் மூட்டும் உணர்ச்சி நெருப்பில்
மாணவர் எங்கள் மௌன அஞ்சலி!

அறிவுச் சுருதி மீட்டி ஈழமெங்கும்
நாதம் பரப்ப வளாகம் சென்ற
தோழர் கூட்டம் குருதியிலென்றால்...
படிப்படியான அடக்கு முறையில்
அறிவுப் பயிரும் அறு படுமென்றால்...
தொடரும் எங்கள் கல்விச் சங்கிலி
இடையில் அறுத்து எறிபடுமென்றால்...
வீதியில் பாய்ந்த இரத்தக் கால்வாய்
கல்விச் சாலையினுள்ளும் பாய்ந்திடுமென்றால்...
புத்தகம் சுமந்த எங்கள் கரங்கள்
புதிதாய் ஏதும் சுமந்திட நேரும்!

எங்கள் நிலங்களில் பதிந்த அந்நியக் கால்கள்
கல்விக் களங்களில் படர்வது தொடர்ந்திடுமானால்...
எங்கள் மனங்களிலுள்ள வேதனை ரணங்கள்
மீண்டும் மீண்டும் கிழிபடுமானால்....
எம் கடல்கள் நிலங்கள் களங்கள் எல்லாம்
படியும் இராணுவக் காலடித் தடங்கள்
பல்கலை வளரும் இடங்களில் கூட
படியத் துணிந்து வந்திடுமானால்...
மாணவர் எங்கள் மனங்கள் எல்லாம்
திசைகள் மாறிச் சென்றிட நேரும்!

**1989இல் பல்கலைக் கழக மாணவர்களான ஜெகநாதன் சத்யேந்திரன் ஆகியோரின் மேல் IPKF இனால் நடாத்தப்பட்ட கொடூரமான கொலையைக் கண்டித்து.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டும்! வேண்டும்!

கற்றிட நூல்கள் வேண்டும்!
மற்றவர் போற்றும் வண்ணம் மாண்புறு வாழ்வமைய
நித்திலம் தன்னில் நல்ல நிலைத்தடம் பதிக்க வல்ல
கலைக் கூடங்கள் வேண்டும்!

எற்றவம் செய்து நாங்கள் இப்புவி பிறந்தோமென்று
முற்றிலும் இன்பமாக முதுகலை வளர்க்க வேண்டும்
சற்றெனும் தளரா வீரம் சா வரை தொடர வேண்டும்!

சுற்றிலும் பகையே நின்று முற்றுகை செய்த போதும்
கற்றிடல் தன்னை என்றும் கைவிடா உறுதி வேண்டும்
பற்றுடன் பிறந்த மண்ணைக் காத்திடும் மானம் வேண்டும்!

கல்வியின் ஞானம் தன்னைக் கருத்துடன் போராட்டத்தில்
இணைத்திடும் செயலறிவும் சிந்தனா வேகமும் – நம்
நினைப்பினில் என்றும் நீங்கா நிர்மல நோக்கு வேண்டும்!

விடுதலை வேள்வித் தீயில் தினம் தினம் வெந்து போகும்
மண்ணதன் மைந்தர் தம்மை மதித்திடும் பண்பு வேண்டும்
தியாகத்தின் தாத்பர்யத்தை சிந்தையில் பதிக்க வேண்டும்!

மண்ணினை விற்று மாற்றான் அடி தொழும் அசிங்கம்
இங்கு அடியற அழிய வேண்டும்! – என்றும்
திண்ணிய திடந்தோள்வீரர் கண்ணிலே வேட்கை தாங்கி
எல்லைகள் காக்க வேண்டும்!

பண்ணிசை பாடும் எங்கள் பாவையர் குரல்களெல்லாம்
விடுதலை முழக்கமாக விண்ணதை நிறைக்க வேண்டும்
வீசிடும் காற்றில் வீரம் செறிந்(து) உரம் பெருக்க வேண்டும்!

எதிரியைத் துச்சமாக்கி ஆடிடும் களமதிலே
வீரமும் திறனும் கொண்ட எம் வீரர்கள் வெல்ல வேண்டும்
ஈழத் தலைவனின் வழியில் எங்கள்
தானைகள் நகர வேண்டும் சுதந்திரம் மலர வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்கள்

ஆசிரியர்கள்..!
சிறார்களைச் செப்பனிடும் சிற்பிகள்!
புறாக்களாய் மனங்களில்
சாந்தம் விதைப்பவர்கள்!
அதே வேளை
மறக்குலப் பண்புகளையும்
மறக்காது ஒலிப்பவர்கள்!

மாணவ சமூகத்தின்
கலங்கரை விளக்குகள்!
தானொரு மனிதனென மாணவரைத்
தலை நிமிர வைப்பவர்கள்!

பாராளு மன்னரையும்
பணிய வைக்கும் புரவலர்கள்!
மழலைகளின் நேயத்தில்
மனம் நிறைந்து மகிழ்பவர்கள்!

சீராட்டுவோம்!
இச் சீரிய தெய்வங்களை
பார் போற்ற மாணவர் தாம் வளர
பகலிரவாய் உழைத்த இவர்
மனம் குளிர
வாழ்த்துவோம் மனதார!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்கள்

மாணவர்கள்!
மாநிலத்தின் மாசற்ற மாணிக்கங்கள்!
தேசத்தை ஆளப் போகும் தீரமிகு தூண்கள்!
கேள்விகளையே நெஞ்சில் கோடிகளாய்க் குவித்து வைத்து
கல்வியெனும் சாகரத்தில் சுழியோடும் சிறுமீன்கள்!

ஆசானையே கூட ஆழம் பார்க்கவென
ஆசாடபூதித் தனமான கேள்விகளை
கூசாமலே அடுக்கிக் கும்பலின் மத்தியிலே
பேசா மடந்தையர் போல் வாய் பொத்தி நின்று
நீசத்தனம் செய்யும் செல்லச் சிறுமணிகள்!

அடக்கமும் ஒடுக்கமும் ஒழுங்கும் சீருமென
அதிபர் முன் நின்று அறிவுரைகள் சொல்கையிலே
பணிவுடன் வாயடக்கி அதிபரின் முகம் நோக்கி
விருப்புடனே அதையேற்று வகுப்பறைக்குச் சென்ற பின்னர்
அனைத்தையும் உடன் மறந்து ஆர்ப்பரிக்கும் குருத்துக்கள்!

வயசேற வயசேற வகுப்பேற வகுப்பேற
பையப் பையவெனப் பண்புகள் கற்றறிந்து
மெல்ல அறிவு விழி திறந்துலகு தனைப் பார்த்து
வெல்லுதல் இவ்வுலகில் வேண்டியதோர் கருமமென
வல்லுடலும் கலைத்திறனும் வளர்த்திடும் வைரங்கள்!

இவர்கள்தான் மாணவர்கள்!

**21.8.1999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலிப்போம்!

கல்வியைக் காதலிப்போம் – எனவே
கலைக் கூடத்தைக் காதலிப்போம் – அதனால்
கற்பிக்கும் நல்–ஆசானைக் காதலிப்போம் – தொடர்ந்து
அவர் நெறிப் படுத்தலைக் காதலிப்போம்!

தேசத்தைக் காதலிப்போம் – அதனால்
சுதந்திரம் வேண்டி நிற்போம் – எனவே
வீரரைக் கௌரவிப்போம் – தொடர்ந்து
எம் பங்களிப்பு எடுத்தளிப்போம்!

தன்மானத்தைக் காதலிப்போம் – எனவே
இன மானத்தைக் காதலிப்போம் – அதனால்
புலி வீரரைக் காதலிப்போம் – இஃதால்
ஈழத்தை மீட்டெடுப்போம்!

உயர்வினைக் காதலிப்போம் – எனவே
உலகிலெம் தேசத்தைப் பொறித்திடுவோம் – அதற்கு
வீரத்தின் களம் புகுவோம் – அப்போ
ஈழத்தின் கொடி சிரிக்கும்!

8.9.1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரம் விலை போகாது

வீரம் விலை போகாது
விவேகம் துணைக்கு வராவிட்டால்
அறிவாயுதம் ஏந்தும் மாணவ மணிகளே!
அழியாத சொத்தான கல்விக் கடலிலே – நாம்
துணிவோடு சுழியோடி முத்துக் குளிப்போம்!

விடுதலைப் பாதையில் விரைந்து நாம் சென்றிட
அறிவொளியதனையும் துணையெனக் கொள்வோம்!
கல்வியைக் கற்போம்!
கருத்தொடு அதனிலே விடுதலை கலப்போம்!
வீரம் வளர்ப்போம்!
அத்துடன் கல்வியை வித்தென விதைப்போம்!
பள்ளியும் பாசறையும் இரண்டறக் கலந்து
பாசறைப் பள்ளியாய் மாறிட வைப்போம்!

கல்வியொரு கண்ணாக வீரம் மறு கண்ணாக
போரும் புத்தறிவும் இணைந்த ஒரு மண்ணாக
ஈழம் விளங்கவொரு சேனை அமைப்போம்!
எத்துணை தடைகளை எதிரியவன் போட்டாலும்
சற்றுமே சளையாமல் எம்பணி தொடர்வோம்!

அந்தோ எதிரியின் கூக்குரல் கேட்கிறது
எங்கள் பிணந்தின்ன இனிக் கழுகுகள் வரலாமோ?
திங்கள் முகத்துச் சின்னஞ் சிறுசுகள்
புத்தகங்கள் புழுதி படத் தரையில் விழலாமோ?

பள்ளிகள் இன்றொருகாற் பாசறையாய் மாறட்டும்!
பாசறைகள் மீண்டொருகாற் பள்ளிகளாய் மாறட்டும்!
தேவைக்கேற்ற படி கோலம் எடுப்போம்!
போரின் களமிறங்கிப் பாடம் படிப்போம்!

**மாணவர்எழுச்சிவிழா - 6.6.95 - வித்தியானந்தாமைதானம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'றெட்பானா' முன் பள்ளி வாழியவே!

வற்றாப் பளையில் வந்தமைந்த எங்கள்
'றெட்பானா' முன் பள்ளி வாழியவே!
சுற்றமெல்லாம் கல்விச் சுடர் பரப்பி – என்றும்
மற்றவர் போற்றிட வாழியவே!

மண்ணின் மழலைகள் தன்னிறைவாகவே
வளர்ந்திட வழி செய்யும் சோலையிது!
கண்ணின் மணிகளைக் கருத்துடன் பேணி
நல்வழி காட்டிடும் சாலையிது!

பண்ணிசைப் பாடலும் படிப்பினைக் கலைகளும்
பாங்கொடு புகட்டிடும் கலையகமே!
மெய்த்திறன் பயிற்சிகள் மாணவர்க்களித்திடும்
செயற்திறன் மிக்கதோர் பாசறையே!

நீதியும் நேர்மையும் நெஞ்சதில் உறுதியும்
சீரிய பண்பும் செழித்திட வைப்பாய்!
பாசமும் நேசமும் பாலகர் மனங்களில்
தேச உணர்வோடு பொங்கிடச் செய்வாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் வளம் இழந்தாலும்
# தோள் வளம் இழந்தோமா!

உலகத் தொழிலாளர்களின்
எழுச்சிநாள் ஐயா இன்று!
அதுதானே மே – ஒன்று!
இன்றொருகால் நாம் கூடி
எம் ஈழத் தொழிலாளர்களின்
தோள்களைத் தொட்டுப் பார்ப்போம்!
போரெனும் பூகம்பத்தில் பொலிவிழந்து போன எங்கள்
ஈழ மக்கள் எழுச்சியினை ஏதென்று மதிப்பிடுவோம்!

'ரிவிரச' வோடு நாங்கள்
கடலேரி கடந்த போது
வளமெல்லாம் இழந்தோம்தான்!
இவ்விடமும்
சேர் பொருளும்
கல்விப் பயிர் வளமும்
தொழில் வளமும் இன்ன பிற
எல்லாமே இழந்தோம்தான் – ஆனாலென்ன!

மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான் போல நாங்கள்
உளமுடைந்து உயிர் தொலைத்து மாளவில்லை
வாலை மடித்தபடி வேலிக்குள் முடங்கவில்லை
வலுக் கொண்டோம்!
புதுத் தளம் அமைத்தோம்!
போர் தொடுத்தோம்!

நாயினும் கடையராக நசுக்கப் பட்டோம்தான்!
மரங்களின் கீழே மழைக்கு ஒதுங்கினோம்!
கிளைகளில் துணிகட்டித் தொட்டில் ஆட்டினோம்!
கட்டாந் தரையில் காரிருளில் படுத்திருந்து
கறையானுக்கும் நுளம்புக்கும் கதை சொன்னபடியே
திட்டங்கள் தீட்டினோம்!
அடுத்த கட்டமாய் என்ன செய்யவென
எமக்குள்ளே குழம்பிப்போய்
முணுமுணுத்துக் கொண்டோம்தான்
ஆயினும் நாங்கள் சுதாகரித்துக் கொண்டோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோள் வலுவில் சுமைதாங்கச் சங்கற்பம் கொண்டோம்!
பழகாத பூமியில் நாம் பாழான நோய்களிற்கு ஆளானோம்!
மருந்துத் தடைகள்
மருத்துவர்கள் இலாநிலைகள்
போசாக்குக் குறைநிலைகள்
அனைத்தையும் எதிர்கொண்டு விவசாயப் போர் தொடுத்தோம்!
இயற்கை மருத்துவத்தை ஊட்டமுடன் வளர்த்து
மூலிகைப் பண்ணைகளில் மூச்சிரைத்தோம்!
வேளாண்மையிலும்
விலங்கு வேளாண்மையிலும்
விந்தைகள் பல செய்தோம்!

போரில்
தம் போர்க்குணத்தில்
மாரில் தாங்கிய இலட்சியத்தில்
புலிகள் – தம் வலுநிலை இழக்கவில்லை!
பாரியதோர் நிலப்பரப்பை இழந்தனரோ?!
நிர்வாகக் கட்டமைப்பை இழந்தனரோ?!
சீரோடு புலிக் கொடி பறந்த சீரிய
கட்டடங்களை இழந்தனரோ?!
ஏதேதுதான் நடந்ததென்று
யார் யார்தான் சொன்னாலும்
தோளிற் பெருவலு கிஞ்சித்தும் இழக்கவில்லை!

ஈழ வரலாறென்ன!
தெற்காசிய வரலாற்றின் பக்கங்களில் காணாத
பேரடி கொடுத்தனர் முல்லை மண்ணில்
போராடும் புலிகளின் தோளோடு தோள் நின்று
கோடானு கோடியாய் அள்ளினோம் நாங்கள்
–போராயுதங்களையும் அள்ளினோம் நாங்கள்–
போதாதா?
தோள் வலுவின் திறன் சொல்ல
இதுவொன்று போதாதா?

போரை வலிந்திழுத்துப் பகை
கிளிநொச்சி நகர்ந்த போது
வீரம் செறிந்த பதிலடி கொடுத்தனர்
ஆனையிறவின் ஆயுதக் கிடங்குகள்
அல்லோல கல்லோலப் பட்டன
ஆட்டிலறித் தளங்கள் அடியோடு சாய்ந்தன
போட்டிப் பகைவன் நிலை குலைந்து போனான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான் பரப்பில் வலம் வந்து
வக்கிரங்கள் செய்த அந்த
கருங்கழுகு எந்திரங்கள் ஒன்றன் பின் ஒன்றாக
வீழ்ந்தழிந்து போயினவே!
ஏதிந்த மர்மமெனறு நாடி பிடிக்க வந்த
மேல் நாட்டு வைத்தியரும்
தலை சொறிந்து போயினரே!

யார் கண்டார் ?
என்னதான் நடந்ததென்று
யார் கண்டார்?
எங்கள் தோள் வலிமை
மேலும் மேலுமாய் மெருகுதான் பெறுகிறது
நாளும் பொழுதுமாய் உறுதிதான் வளர்கிறது

முல்லையை மீட்டெடுத்துக்
கடல் வளத்தை அதிகரித்தோம்!
நந்திக் கடல் முனையில்
கூச்சமின்றி இறால் பிடித்தோம்...
கிழக்கின் – எல்லைகள் விஸ்தரித்து
வளங்கள் பல மீட்டெடுத்தோம்!
தொல்லைகளால் நாங்கள்
துவண்டதாக யார் சொன்னது?
மனத்தில் திடமுண்டு
வளத்தில் குறைவு வந்தால்
வளைந்து போய் விடமாட்டோம்
உதட்டு வார்த்தைகள் – எம்
சரிதத்தில் கிடையாது
அசையா உறுதியின் ஆணித்தரத்துடன்
விசையின் வேதமாய் அமைந்த தலைவனின்
வழியினைத் தொடர்ந்து ஈழம் சமைப்போம்!

தொழிலாளர் தினத்திலொரு
சபதம் நாமெடுப்போம்!
பாட்டாளி மக்கள் நாம்
தோளோடு தோளிணைவோம்!
ஈழப் பிரசவ இன்னல்களோடு – நாங்கள்
வாழப் பிறந்த மண்ணை
மீட்டெடுக்கப் பலம் குவிப்போம்!

**ஒலிபரப்பு - புலிகளின்குரல் வானொலி 1.5.1997 மே தினக் கவியரங்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்று படு தொழிலாளர் வர்க்கமே
# வென்றிடுவோம் தமிழீழம் விரைவிலே!

திங்கள் முகம்சிரிக்கத் தென்றல் தவழ்ந்துவர
மஞ்சள் முகந்திருத்தி மங்கையர்கள் வழியனுப்ப
அந்திக் கடற்கரையின் மண்ணில் தடம் பதித்து
ஆண்மைத் திண்தோளார் ஆழிப் படகேறி
நுரைசேர் அலைகளின்மேல் எகிறி விழுந்தோடி
கரைசேர் நாள்வரைக்கும் காதில் ஒலிக்கும்வகை
குரல் சேர் கூச்சலுடன் எம்பிக் கையசைக்கும்
காட்சி தனைஇனிநாம் காண வெகுதூரமில்லை!

பல்லாயிரம் தொழில்கள் செழித்திருந்த தேசமதில்
வல்லாதிக்க வெறி வாலாட்டத் தொடங்கியதால்
முள்ளால் நிறைந்த வெறும் தரிசாகிப்போச்சு நிலம்
அல்லாடிப் போய்நாங்கள் அலுக்குலைந்து போய்விட்டோம்
தொழில்கள் சிதைந்ததனால் தோள்கள் துவண்டிட்டோம்
இவையெல்லாம் நிலைமாறும் நேரம் இனி வருகுதையா
'அவை'யெல்லாம் – உலகத்துப் பேராளர் பேச்சரங்க 'அவை'யெல்லாம்
ஈழத்துப் போர்முரசின் அதிர்வோசை ஒலிக்குதய்யா!

தேசத்தின் உடன்தேவை ஏதென நீ புரிந்து
நாசம் தவிர்ப்பதற்காய் நாட்டமுடன் களமிறங்கி
உழைப்பால் ஒன்றுபட்டு உதிரத்தால் வழிசமைத்து – எம்
வெற்றித்தேர் முன்நகர உந்துவிசை ஆகிநின்றால்
'ஜயசிக் குறு'க்களெல்லாம் சுக்குநூறாகிவிட – எதிரிக்கு
'பயசிக்குறு' வந்து பாய்ந்தோடிப் போய்விடுவான் – எமக்கே
'ஜயசிக்குறு' வாகி எம்தேசம் நிமிர்ந்தெழுந்து
தமிழீழம் இதுவென்றே புலிக்கொடியோடு உறுமிநிற்கும்!

கருத்தொருமித்து மனம் கடனே எம்பணியென்று
விருத்தெரியா விடலையெல்லாம் வீரமுடன் அணிசேர்ந்து
பொருள் தெளிந்து போரின் கலை பயின்று
விருப்புடனே விடுதலைக்காய்க் கறுப்பு உடைதரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரிருளோ கடலோ – கானகமோ ஏதென்றால் எமக்கென்ன
கிழித்தெறிவோம் எம்முடலை, தகர்த்தழிப்போம் தருக்கர்களை
என வரித்து
தேசத்தின் விடியலுக்காய்
தேசத்து நாயகனின் சுடரொளிக் கண்ணசைவில் பொருது நிற்க
நாமெல்லாம், இழை பிரிந்து ஈனர்களாய் நிற்பதுவோ!?

இலட்சியத்து வேள்விக்காய் ஒன்று பட்டு நாமுழைப்போம்
கலைத்துவமோ களப்பணியோ கனகடின உடலுழைப்போ
கடலோ வயலோ கானகமோ தெருவோ வாய்க்காலோ
கணக்கோ வேறெந்தக் கணினித் தொழிற்துறையோ
மருத்துவமோ மாந்தர்க்கு உதவும் மனுப்பணியோ
எத்துறைசார் ஏந்தல்களும் தோளோடு தோளிணைந்து
தொழிலாளர் வர்க்கமென்ற குடையின் கீழ் மனமிணைந்து
தொடர்ந்தாலே தமிழீழ வெற்றி வரும் வெகு விரைவில்!

ஒன்றுமே குறை கூற ஒவ்வாத தலைவன் உள்ளான் – தமிழ்ப்
பெண்டிரும் களமிறங்கிப் போராடும் நிலை கொணர்ந்தான்
வையமே வியந்திடும் கரும்புலிப்படை வகுத்தான்
எவ்வணியும் பெற்றிரா நெறியாள்கை எமக்குண்டு
இதுவரை கண்டிரா விறல்வீரம் இங்குண்டு
இத்தலைவன் காலமதே எம்மவர்க்கு விடியல் தரும் – இப்
பொற் தலைவன் வழியிலெங்கள் புனிதமண் மீண்டுவிடும்!

முழுவளமும் முனைப்புடனே முப்புலமும் பயன்படுத்தி
வழுவா வழிப்பாதையில் அணிவகுத்து நின்றே நாம்
பொருதாத் திசையென்று ஏதொன்றும் வைக்காமல்
முழுதாய் முற்றிலுமாய் முழுமூச்சாய் முகடதிர
உழுவோம் உழைத்திடுவோம்! போருக்கு உரமேற்றித்
தொழிலாளத் தோழர்கள் நாம் திரள்வோம் – தீயெனவே
தடைகளெலாம் களைவோம்! எதிரிதன் சிரமேற் கைகூப்பித்
தொழுதோடுவான்! பிறகென்ன! மலர்வோம் நாம் ஈழமென!

**ஒலிபரப்பு - புலிகளின்குரல் வானொலி 1.05.98 (குரல் - கனிமொழி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரும்புலி அந்தாதிக்கவி

வடமராட்சியின் வீரம் விளையும்
பருத்திநகரில் பிறந்தவன்
இடம்பெயர் வென்று ஏதும் வர – முன்னரே
வன்னிக்கு நகர்ந்தவன்
வற்றாப்பளையென்னும் வளம் கொழி பூமியில்
வாழ்வு அமைத்தவன்
எத்தேசத்திருப்பினும் ஈனமாய் வாழ்வதை
முற்றாக வெறுப்பவன்
சுதந்திர வேட்கையின் சூக்கும வேதத்தை
உள்ளாரச் சுகிப்பவன்
உடலால் ஊனமுற்றிருப்பினும் உளத்தால்
களத்தில் நிற்பவன்
ஆடாத் தலைவனின் வாடா வேகப்
புயல் மூச்சதனில்
மாறா ஈழம் மாண்புடன் மலருமென
மனதார நினைப்பவன்
தீர்க்கமான திடநெஞ்சு கொண்ட
போர்க்குணத் **தீட்சண்யன்**

நாவண்ணன் *(குரல்):*
அடுத்து தீட்சண்யரே!
**புறம்** எனத் தொடங்கி – கரும்
புலியெனப் புகன்றிடுக

தீட்சண்யன் *(குரல்):*
**புறம்** காணா மறநெஞ்சம்
கொண்ட இளம் வீரர்
அறம் காணக் காலனையும்
தோளிற் தொடும் சூரர்
களம் காணப் போட்டியிட்டு
வாய்ப்பிழக்கும் போதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரால் முகம் நனைத்து
கண் சிவக்கும் பாலர்
இலட்சியத்தின் நெருப்பையெல்லாம்
இதயத்தில் சுமந்து நின்று
தலைவனவன் கண்ணசைவைக்
கணம் கணமாய்க் காத்திருந்து
உடலோடு உயிரதையும்
அதனோடு வெடியதையும்
ஆர்வமுடன் சுமந்து செல்லும்
தீரர் அன்றோ **கரும்புலி!**

*நாவண்ணன் (குரல்):*
*தீட்சண்யன்*
*கரும்புலி என்ற*
*கர்ச்சனையில் கவி முடித்தார்... ...*
*எனவே கரும்புலி யென கர்சனையில் தொடங்கி*
*தற்கொடையில் முடிப்பீர்...*

*தீட்சண்யா!*
*... தற்கொடையில் முடித்தார்.*
*எனவே*
**தற்கொடை***யெனத் தொடங்கி*
**கருவேங்கை***யென முடிப்பீர்.*

*தீட்சண்யன்(குரல்)*
**தற்கொடை** *தானய்யா தற்கொடைதானய்யா*
*தற்கொலைப் படையென்று சொல்வதொரு வக்கிரமே*
*பொற்கொடையாலோ பொருட்கொடையாலோ*
*எட்ட முடியாததொரு இலட்சிய விருட்சமெல்லாம்*
*தற்கொடையால் எம்வசம் வந்த தறியீரோ?*
*சிக்காத சீரிய இலக்குகள் பலவெல்லாம்*
*வக்கற்றுப் போகையிலே வடிவிழந்து போனது யார்?*
*சுக்கா? மிளகா? சுண்டைக்காய் விளையாட்டா?*
*செக்காக எம் மனமுழல செத்தவர்கள்* **கருவேங்கை!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவண்ணன் (குரல்):
தற்கொடை, பொற்கொடை, நற்கொடை,
ஆஹா இங்கே சொற்படை வந்து சொக்க வைக்க
சுக்கா, மிளகா சுண்டைக்காய் விளையாட்டா?
நல்லது தீட்சண்யா!
இல்லையடி என்பதையே சொல்லாய் முதற் கொண்டு
துயரம் அதுவாக துளிர்க்கட்டும் உம் கவிதை

தீட்சண்யன் (குரல்)
**இல்லையடி** நாமின்று காணாத துயரமொன்று
பொல்லாத புல்லுருவிப் படைகள் எல்லாம் வந்து
எல்லையெதுவென்ற விவஸ்தைகளே புரியாது
வல்லாதிக்கத்தின் அடிவருடிகளாயிருந்து
புல்லாங்குழலிசையும் புதுப்படமும் பார்த்திருக்க
எல்லா உணர்வுகளும் கட்டிற்குள் போட்டடக்கி
மாவீரர் துயிலுமில்லக் குழிகளிலும் படுக்காமல்
மற்றெல்லோரும் வாழ்வதற்காய் – கரும்புலிகள்
தாம் மடிதல் பொல்லாத பெருந் **துயரம்!**

தீட்சண்யன் (குரல்)
**வெற்றி** எமக்கேயென்ற வீறாப்புத் தளராமல்
பற்றி எரிந்தழிந்து பஸ்பமாய்ப் போவதற்காய்
சுற்றிப் போட்ட துண்டுக் கட தாசிகளை
பற்றிப் பாய்ந்தெடுத்துக் கண்ணோடு அதை ஒற்றி
கூற்றுவனைத் தட்டிக் குசலம் விசாரிக்க
வாய்ப்பொன்று வாராதா என ஏங்கி விழிமலர்த்தும்
வீரக் கரும்புலிகள் ஈழத்தில் இருக்கையிலே–எம்
தேசம் விடியாதா? நிச்சயமாக எம் தேசம் **விடியும்!**

தீட்சண்யன் (குரல்)
**வெங்களம்** ஆடிடும் மண்ணிலே வாழ்பவர் நாம்
சிங்களம் செய்திடும் சின்னத் தனங்களால்
எம் களம் சிதைந்திடும் என்றார் நினைப்பார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களும் ஞாயிறும் கண்டிடும் காட்சிகள்
ஆம் சின்னத் தனங்களைக் காட்டிடும் சாட்சிகள்
வன்சொலும் வார்த்தை ஜாலப் பிரச்சார எந்திரமும்
என் செய்யும்? வாய்ப் பந்தல் என் செய்யும்?

கரும்புலிகள் – தம் மனபலத்தால்
பாடுவோம் – இவையனைத்திற்கும் **மங்களம்!**

தீட்சண்யன் *(குரல்)*
**வாழும்** மண் மீள வேண்டும்
நாளும் பொழுதுமாய் வேட்கையும் வீரமும்
வளர வேண்டும்
கூழுக்காய்க் குழி பறிக்கும் காக்கையர் கூட்டம்
மாள வேண்டும் – மக்கள்
கூடும் இடமெல்லாம் விடுதலையின் வீச்சே
பேச்சாகக் கனல வேண்டும்
கரும்புலியின் மன ஓர்மத் தாற்பர்யம்
களங்கமற நெஞ்சில் காத்திரமாய்ப்
பதிய வேண்டும்
அப்போது – நீளும் துயரங்கள் மாளும்!
ஈழத் தமிழினம் – **ஆளும்!**

**ஒலிபரப்பு - புலிகளின் குரல் வானொலி**
**(கரும்புலி நாளில்**
**கரும்புலி சிறப்பு நிகழ்ச்சிக்கான**
**அந்தாதிக் கவியரங்கில்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தையலென வந்த தை – மகளாள் தந்த தமிழ்கவிதைகளால் அந்தாதி

**[தைப்பொங்கல் அந்தாதிக் கவியரங்கில்]**

*தீட்சண்யன் (குரல்):*
திருநாள் இது எமக்கு, ஈழத் தமிழரிற்கு,
பெருநாள் உழவர்களின் பேருவகை நந்நாள்
தருவாள் தை மகளெமக்கு தண்மைநிறை வாழ்வதனை
புது 'வாள்' கையெடுத்து போரிறங்கும் வீரமதை
ஒருகாலும் தளராத நெஞ்சமுடன் அருள்வாள்
இரு காலும் எம்பிநாம் இணையறாத் தீர்க்கமுடன்
பொருதாக் களமேது மினி ஈழத்தில் இருக்காது
புரிவாய் புவனமே!
நாமினிமேல் என்றுமே அவியாப் பெருநெருப்பு!

*நாவண்ணன் (குரல்):*
வற்றாப்பளையூரின் வற்றாத கவிச்சுவையே!
நற்றமிழ் கவிஞ! நமது தீட்சண்யா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத்திருநாளில், தமிழன் பொங்குகின்ற நாளில்
நின்பாடல் –
தை யெனத் தொடங்கி பொங்கல் என முடியட்டும்.

*தீட்சண்யன் (குரல்):*
**தை** யென்ற தை மகளைக் கையேந்தி வரவேற்று
பைய எம் துயரனைத்தும் பாங்குடனே துரத்திவிட
வெய்யோன் கருணையுடன் மெய்வருந்திக் களனிகளில்
உய்த்தெடுத்த புதுக்கனிகள் கரும்பு–பழ வாழையென
அத்தனையும் எம் முற்றக் கோல வரம்பினுள்ளே
சுத்தமாய்ப் பரப்பிவைத்து சுகந்த மணம்–கமழ
பாலெடுத்துப் பொங்கலுக்கும் பானையிலே அரிசியிட்டு
வெண்ணிறப்பால் பொங்கிவர மனம்நிறையும் **பொங்கல்!**

*நாவண்ணன்: (குரல்):*
தீட்சண்யன் கவிதையிலே
தை எனத் தமிழ் வந்து – அவர்
தந்ததுவோ தமிழ்ப்பொங்கல்.
போர்க்காலப் பொங்கலுக்கு
மோதகப் படையல் பொருத்தம்தான்– இந்த
மோதகத்தை முதல் எடுத்து, தீட்சண்யா!
முடித்திடுக உன் கவிதை சூரியனில்

*தீட்சண்யன் (குரல்):*
**மோதகம்** இதுநல்ல தமிழ்–மக்கள் முழுஉணவு, உடலிற்குச்
சாதகமான புரதம் மாப் பொருட்களுடன்
இனிப்பிட்டும் இன்னபிற வெல்லமும் விட்டமினும்
கணக்கிட்டு வைத்தாற்போல் உருக்கொண்ட நல்லமுது
பொங்கற் படையலிலே புதுப்பொலிவாய் வந்தமர்ந்து
எங்கள் நாவினிலே நீரூறவைக்கும் இது...
மங்கல நாளதிலே மனம்நிறைந்த மகிழ்வுணவு
உண்டு–இதனைச் செல்பவன்தான் என்றும் களச் **சூரியன்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவண்ணன்: (குரல்):
மோதகம் வெறுமனே மாவுருண்டையல்ல
பலசத்துச் சேர்ந்த பாவுருண்டையாய் தந்தார்
சுவைக்க மறுப்பானோ சூரியன் –
மீண்டும் தீட்சண்யரே
கலப்பையை முதலில் கையெடுத்து
அகப்பை அதனில் அந்தமாய் தருக

தீட்சண்யன் (குரல்):
**கலப்பை** களனியதில் ஆழமாய்க் கூர்பதிக்க
வலக்கை மேழியதை வலுவாக நெறிப்படுத்த
நிலத்தில் நெடுவரப்பும் குளத்து நந்நீருமாய் –வயற்
புலத்தில் பொன் விளைக்கும் வல்லான் களைப்பெல்லாம்
புறத்தில் ஒதுக்கிப் பூரிக்கும் நந்நாளில்
முறத்தில் புடைத்தெடுத்த புதுநெல்லில் கதிர்சேர்த்து
சிறப்புடன் சிறுவர்களும் சுற்றிநின்று ஆர்ப்பரிக்க
பொறுப்புடன் பொங்கல் அள்ளும் கருவியதே **அகப்பை!**

தீட்சண்யன் (குரல்):
தலைப்பை வைத்து எவ்வளவோ சொல்லிடலாம்
விதைப்பை நினைப்பதற்கே வேகுமனம் நோகிறதே!
உரப்பையைக் கண்டே ஈரெட்டு ஆண்டாச்சு!
கதைப்பும் களமுமாய்க் காலங்கள் போயாச்சு!
உதைப்பின் உக்கிரத்தால் ஊனமும் உயிர்த்துடிப்பும்
மிகைப்பட்டதே அன்றி வேறென்ன நாம்கண்டோம்?!
விதைப் – பை எடுத்து(உ)ழவர் வரப்பிறங்கிச் செல்கையிலே
மதர்ப்புடன் மற்றோர்நாம் களமிறங்கி எதிரியின் பால்
விதைப்போம் – **வியப்பை!**

**ஒலிபரப்பு - புலிகளின்குரல் வானொலி 1998 தைப்பொங்கல் விழாக் கவியரங்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சித்திரைப்புத்தாண்டு
## வந்தென்ன! போயென்ன!

நித்திரை விழித்துப் பட்சணங்கள் பலசெய்து
வெற்றிலை பாக்குடன் மங்கலச் சுடரேற்றி
முற்றிய நற் பழங்கள் புது மலர்களுடன் முகம் சிரித்துப்
பத்தரை மாற்றுத் தங்கமென அலங்கரித்து
பக்தியுடன் பரவசமாய் வரவேற்கும் நாளன்றோ
முன்னொருகால் நாம் கண்ட சித்திரைப் புத்தாண்டு!

சற்றொரு கால் நின்று இன்றைச் சாபநிலை சிந்தித்தால்....
வைத்த கால் வைத்தபடி வாதம் விறைப்பெடுக்க
முற்று முழுதாகவே மூளையெலாம் பேதலிக்கிறது
உற்றவனை உற்றவளை பெற்றுப் பேறளித்தவளை
கற்றறிவு தந்தவனை கற்கையினைப் பெற்றவனை
பெற்றவனைப் பெற்றவளை என எல்லாம் இழந்தாச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தையிலே வளர்ந்தவர்கள் பற்றையிலே பதுங்குகின்றார்
புத்தம் புதுக் காரினிலே பள்ளிவழி சென்றவர்கள்
சித்தம் தெளிந்தின்று சீருடை தாம் தரித்து
மெத்தக் கவனமுடன் தேசம் காக்கின்றார்
மெத்தனமும் மெருகும் கொண்ட இள மகளிரெல்லாம்
புத்தகமும் சத்தகமும் புறத்தேயெறிந்து விட்டு
வித்தகமாய்க் களமாடுகின்றார்!

கம்பளிப் போர்வையிலே இதமான சூட்டுடனே
நிம்மதியாய் நித்திரைக்குப் பத்திரமாய் மடிதேடும்
சின்னக் குழந்தையெல்லாம் சேலைத் துண்டுகளின்
மூலைத் தலைப்பதனில் முடிச்சுண்டு முனகுகையில் – எம்
தானைத் தலைவனவன் தளராத உறுதியுடன்
சேனைப் படைநிறுத்திச் செயற்திறன் காட்டுகிறான்.

உணர்ந்து புரிந்தெழுந்து தேச இளைஞரெல்லாம்...,
உழன்று உழைத்து எங்கள் பாசப் பாட்டாளியெல்லாம்
கறந்த மார் மறவாச் சின்னஞ் சிறார்களெல்லாம்
வண்ணச் சிட்டுக்களாய் வலம் வரும் இளைஞியெல்லாம்
வெள்ளைச் சீருடை தரித்த விடலைப் பருவமெல்லாம்
காளை முறுக்குடனே களமாட வருகின்றார்.

நாடு நலிகிறது
நம் ஈழ மண்ணிதன் காடு அதிர்கிறது
பாடு பாடாகப் பிஞ்சும் காயுமெனக்
கொட்டிச் சரிகிறது
வெட்டவெளிகளில் கொட்டு கொட்டென்று
சனம் குந்திக் கிடக்கிறது
எட்டக் கால் பதித்து எதிரி எம் எல்லைக்குள்
முட்டக் கை வைக்கின்றான்
குட்டை குளங்களிலே குழந்தை குமருகளின்
உடலம் சிதைகிறது
சித்திரைப் புத்தாண்டு வந்தென்ன! போயென்ன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பும் கடிதங்கள் மல்லாவி கடக்கவில்லை
ஆசுப்பத்திரியில் மருந்துமில்லை இடமுமில்லை
தூசிப் படலத்தால் தெரு மூடிக் கிடக்கிறது.
மாசிப் பனியென்ன பங்குனி வெயிலென்ன –
மாற்றவோர் ஆடையில்லை
பாசப் பிணைப்புடன் பரிவுக்கரத்துடன்
தேற்றவோர் தேசமில்லை – இங்கே
சித்திரைப் புத்தாண்டு வந்தென்ன! போயென்ன!

ஆங்காங்கே ஈழமெங்கும் பட்டினிச் சாவு!
அரசாளும் அம்மணியோ ஆர்ப்பரிப்புக் கூத்து!
சிரசாலே சிங்களத்தைத் தொழுது சில குழுக்கள்!
மனசாலும் மண்–மானம் எண்ணாத புழுக்கள்! – நாம்
விசையோடு ஆர்த்தெழுந்து போராடும் வேளையிலே
சித்திரைப் புத்தாண்டு வந்தென்ன! போயென்ன!

கனவெல்லாம் நனவாகிக் காரியங்கள் ஆகும் வரை
நிலமெல்லாம் நமதாகி இருப்புகளிற்கு ஏகும்வரை
வயலெல்லாம் மீண்டும் எங்கள் கால்பட்டுச் சிலிர்க்கும்வரை
மனமார எம் மழலைகள் மகிழ்ந்து குதித்தாடும்வரை
கயவர் கூடாரமெல்லாம் நாடொழிந்து போகும் வரை
கரிகாலன் கொடியிங்கு வரிப்புலியாய் ஆடும்வரை
சித்திரைப் புத்தாண்டு வந்தென்ன! போயென்ன!

**ஒலிபரப்பு - புலிகளின்குரல் வானொலி 14.4.1999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வீரம் சுமந்து வா தோழி!

வேரோட்டமே நாம்தான் என
வீறாப்புடன் விழித்துக் கொண்டோம்!
தேரோட்டமும் தேர்.. நல் அறிவும்
தீண்டாதவை என நினைத்திருந்தோம்!
பார் போற்றிடும் பக்குவ ஈழச்
சீர் நாட்டை நாம் மீட்டெடுப்போம்!
தாலாட்டிடும் எம் மென் கரங்கள் – இனி
தானையிலும் ரவை கக்கிடட்டும்!

குனிந்து நடந்து குரல் வளையது
நலிந்து நின்றது போதும்!
நிமிர்ந்து தோளில் போர்க்கலனைச்
சுமந்து வந்திடு தோழி!
பதுங்கிப் பகைவன் வேவில் வாறான்
பார்த்து நிற்கலாமோ நீ!
வெதும்பும் மக்கள் துயர் துடைத்திட
விரைந்து வந்திடு தோழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்புப் பேயாய் கயவர் இங்கு
கால் பதித்திடலாமோ!
வெறுப்புத் தெறிக்கும் விழிகள் வியர்க்க
வீரம் சுமந்து வா நீ!
பசிக்கும் குழந்தை இரைப்பை சுருங்க
தவிக்கும் நிலைமை பாராய்!
ரசிக்கும் கோர மனமும் உனக்கு
வரித்து நிற்குமோ தோழி!

கொடுப்புள் சிரித்து – கோரப்பல்லை
காட்டும் ஈனர் கூட்டம்
விழுப்புண் எடுத்து விரைந்து – நாங்கள்
விடியல் ஒன்றைக் காண்போம்!
நெரிக்கும் தடைகள் நேர்மை அற்று
நாடே நாறிப் போச்சு!
நொடிக்குள் நாங்கள் விரைந்தெழுந்து
வீரச்சரிதம் படைப்போம்!

படித்த மனிதர் படியாதவர்கள்
என்று பேதமில்லை!
வடிக்குள் தடங்கும் திசுக்களாயே
எங்கள் வாழ்வு மாயும்!
வெடிக்கும் குண்டு கணைகளெல்லாம்
வீரம் பேச வேண்டும்!
படிக்கல் தாண்டிப் பத்தினிகள்
களத்தில் பாய வேண்டும்!

தவிர்க்க வொண்ணாக் களநிலையை
சகித்துச் சோரலாமோ!
எடுத்து விட்டோம் பயிற்சிகள் நாம்
கொடுத்திடுவோம் களப் பதிலடிகள்!
சிலிர்க்க வைக்கும் சாகசங்கள்
செய்து காட்டப் போகிறோம்!
விழி நிமிர்த்தும் வகையில்
வீரம் காப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் எழுச்சி

பெண்ணியம் காக்கப் போரிடு பெண்ணே!
பொறுமைக்கு இல்லையோ எல்லை?
கண்ணியம் காத்திடு என்றவர் கூறி – உன்
காலிற்கு விலங்குகள் இடவோ?!

மண்ணிலே மாதராய் வந்தவரெல்லாம்
மற்றவர் கைப்பொருள் தானோ!
கண்ணிலே மையும் கொண்டையில் மலரும் – உன்
தளைகளை அறுத்திட வருமோ?!

அடுப்படிக் குடித்தனம் நடத்தியே உந்தன்
அறிவது மங்கியே போச்சோ?
பாரினில் பெண்ணினம் உரிமைகள் வென்றிட – நீ
உவமைக்குள் வாழ்வது சரியோ?

ஈழத்தில் இன்றொரு புதிய சகாப்தம்
வீறுடன் விரிவதை அறியாயோ?
காலமதாய் வந்த தளைகள் பொடிபட
கன்னியர் நிமிர்ந்தது புரியாயோ?

கூண்டுப் பறவையாய் குந்தி இருந்தவர்
கூவிக் களமேறல் கேளாயோ?
கூலிப் படைகளின் குடல்கள் அறுபட – புது
வேலி சமைப்பதைக் காணாயோ?

வாருங்கடி பெண்கள் அணியில் இணைந்து – நாம்
போரை விரைவிலே முடித்து வைப்போம்
வீரத் தலைவனின் வழியில் நடந்து – வெற்றி
வாகைகள் சூடியே நாடமைப்போம்!

**14.5.1998**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலியடைப்போம் வாருங்கடி

வீட்டு வேலி அடைப்பதற்கு முன்னாலே—நம்
நாட்டு வேலி பார்த்தடைப்போம் வாருங்கடி!
போட்டி போட்டு பகைவன் வாறான் முன்னாலே —காலை
ஆட்டிக் கொண்டே நாமிருந்தால் என்னாகும்?

மும்முனையில் முனைந்து அவன் வாராண்டி
அம்மியடியில் அமர்ந்திருப்பது ஏனோ நீ?
செம்மணியின் சங்கதிகள் கண்டவளே
வன்னியிலும் அந்நிலைகள் வரலாமோ?

ஊருக்குள்ளே குண்டு கொணர்ந்து கொட்டுகிறான்—நீ
போருக்கென்று புறப்படவே தயங்குகிறாய்
வாரடித்துக் குருதி மண்ணில் பாய்கிறது —எம்
வேரறுத்தே வீழ்த்தப் பகை துடிக்கிறது

கூடி நாங்கள் ஈழப்படை சேர்ந்திட்டால்
வாடி நிற்கும் வளமண்ணை மீட்கலாம்
ஆயுதங்கள் தலைவனடியில் கொட்டிக் கிடக்குது
ஆளுக்கொன்றாய் அள்ளி நாங்கள் அணிநடக்கலாம்

வேற்று நாட்டான் எம் தெருவில் வீசி நடக்கிறான்
நீ பூட்டிக் கொண்டே வீட்டிற்குள்ளே கூசி நிற்பதோ!
பாட்டிமார்கள் வீட்டில் நின்று ஆசி கூறட்டும்—நாம்
படை நடந்து பகைவர்களைத் துரத்தியடிப்போம்!

**29.3.99**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்கையர் நாங்கள்

நல் மங்கை இவளென்று ஆணுரைக்க முகம்
செக்கச் சிவந்து நாம் நிலம் பார்த்தோம்!
பக்கத்தில்—வந்தவர் போற்றி விட நாங்கள்
புத்தொளி வீசிச் சிரித்து நின்றோம்!

இல்லாள் என்றெமை இல்லம் வைத்தார்
நல்லாள் — என்றே வாசலிற்குள்
கல்லாய்ச் சமைந்து நிற்க வைத்தார்
அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என
அர்ச்சனை செய்தே பூட்டி வைத்தார்
கல்லாய் நாங்கள் உணர்வடக்கி
புல்லாய் கால்களில் மடிந்து வந்தோம்

வந்தார் எம்—தமிழ் மண்ணின் வேந்தர்
தந்தார் பெண்ணின் விடுதலைத் தேர்
பொய்யான தடைச் சங்கிலிகளை
பொடிப் பொடியாக ஆக்கி விட்டார்

ஊது குழலையே கரம் பிடித்து
உலை மூடியோடு நின்ற நாங்கள்
பேரொலி முழங்கச் சங்கெடுத்து
போரினிற் சாதனை படைக்கிறோமே!

வாடிக்கையான வம்புகளும்—நம்
வழியினில் இப்போ வருவதில்லை
கேளிக்கைப் பேடிகள் எம்மைக் கண்டு
வாரிக் கொண்டோடலைப் பாரடி நீ!

போரிற் சிறந்த எம் பெருந் தலைவன்
பாரில் எமை நன்கு உயர்த்தி விட்டார்
நேரில் அவர் தெரு வீதி வரும் வரை
போரில் எம் கரங்கள் ஓய மாட்டா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாலதி தொடங்கி எத்தனை பேரெங்கள்
சாதனை வேகத்தைக் காட்டி விட்டோம்
மீதியாய் மற்றெல்லாம் நின்று சொல்ல
வேளை இதுவல்ல வா தோழி!

படைக் களமெல்லாம் கலக்கி விட்டோம்
சுடு பொறிக் கலனெல்லாம் சுழற்றி விட்டோம்
நடை தளர்ந்து பகை ஓடிட வைத்தே
வீரமுடன் நாம் படை நடந்தோம்

வீரம் செறிந்த தலைவனவன்
வேழமாய் இன்றெம்மை வளர்த்து விட்டார்
வாழும் தலைவன் வழியினின்றும்
வீரம் படைத்திட வா தோழி!

ஈழமண் மீட்பிலே எங்கள் பங்கு
எத்துணையுமே குறையாது
கரிகாலன் கடலணிப் படையினிலும்
எம் அணி என்றும் குறையாது!

பாலகி பாவை என்றொரு வேற்றுமை
எங்களிற்குள்ளே கிடையாது
பிரபாகரன் தலைமையில் ஈழமண் மீட்பது
என்றொருகாலும் தவறாது!

7.10.98



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீதனம் என்னும் மாயையை ஒழிப்போம்

கண்ணின் மணியென நாம் கருத்தோடு வளர்த்தெடுத்த
பொன்னின் புதுமலர்ப் பாவையினைக் கரம் கொடுக்க—மண்ணும்
மடிநிறைய மின்னும் சீர்வரிசைச்சீதனமும் வேண்டுமா?
கரும்பைத் தின்பதற்கும் கைக்கூலி கேட்கும் இடும்பன் யார்?

அவன் வாழ்கைத் துணைவியாய் அவன் கருவைச் சுமந்து
அவனே உலகமென அவனோடு அவன் குலம் பணிந்து
அவனுக்காய் வாழ்வதற்கும் பணம்கேட்டல் இலட்சணமோ
இது ஆண்—விபசாரத்தின் அசல் வெளிப்பாடல்லவோ!

எதற்கு விலை கேட்கின்றார்! ஏன் அதனைக் கேட்கின்றார்!
இடக்குமொழி பேசிநிற்கும் மாமியும் முன்னொருகால்
சீதனச் சிக்கலிலே மாட்டாத மருமகளோ
ஆண்பிள்ளை பெற்றுவிட்டால் அரக்க குணம் வந்திடுமோ!

என்னத்திலே பெண்கள் சோடைபோய் விட்டார்கள்?
படிப்பிலா பல்கலையிலா பதவியிலா பண்பாட்டிலா
நடிப்பிலா நர்த்தனத்திலா போட்டியிலா புலமையிலா
விழுப்புண் பெற்று மண்ணுக்காய் மடிவதிலா?

ஏழ்மையினால் ஓர் யுவதி அபலையாய் அழிவதென்றால்
ஆண்மையென ஆடவர்கள் வாய்திறந்து பேசலாமோ!?
ஈனமகன் அவனென்றும் ஆண்—விபச்சாரி என்றும்
மார்பினிலே நூல்கோர்த்து மட்டையொன்று தூக்கலாமே?

சுதந்திர ஈழமதைச் சொர்க்கபுரி ஆக்குவோம்!
வளர்ந்துவிட்ட சமுதாயத் தூரெடுத்து நீக்குவோம்!
புரையோடிப் போய்விட்ட பழமைகளைப் பொசுக்குவோம்!
சீதனச் சிறுமையினைச் சின்னாபின்னமாக்குவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கறைகள்

ஏன்
குனிந்து செல்கிறாய்?
நீ
உடைத்து விட்ட
என் இதயத்தின்
இரத்தத் துளிகள்
சிந்திய இடத்தில்
காய்ந்து விட்டனவா
என
மோப்பம் பிடிக்கிறாயா?!

ஏன்
அடிமேல் அடிவைத்து
மெல்ல நடக்கிறாய்?
உன்னால் உடைந்து விட்ட
என்
இதயத் துகள்கள்
குத்தி விடுமே
என
பயப் படுகிறாயா ?!

இனிமேல்
உனது பாதங்கள்
எங்கு படர்ந்தாலும்
எனது குருதிக்
கறைகளும் படியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஜன்னல் மலர்

காலையில்
என் கண்களைத் திறந்து விட்டு
என் மேல் படர்ந்து விடுகிறது
அந்தக் கொடி
மாலை வரை
மொட்டவிழ்க்காமல் நின்று
என் கண்கள் மூடும் நேரம்
மொட்டு விரியுமென்று
தேன் சிந்து மென்று
எதிர் பார்த்தேன் – ஆனால்
உப்பு நீர் சிந்தியது, ஏன்?
வண்டு வரவில்லையோ?

## வீட்டு ஜன்னல் கூறுகிறது

நாளையும் என்னில்
இறுகப் படரும்
முக மலரை
என்னில் பதித்து
விழிக்கரங்களால்
தெருவைத் தழுவும்
வேதனைத் துளிகள்
என்னில் வழிய
மாலையில்
என் விழிகள் மூடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளக்கம்

உன்னை மறக்கும் படி
உருகிச் சொல்கிறாயே!
நான்
என்னை மறந்து
நீயாக இருப்பது
புரியவில்லையா?

காதல் நினைவுகளை
கனவென மறக்கும் படி
கண்ணீர் வடிக்கிறாயே!
என் கனவுகளிலெல்லாம்
நீ கரைந்து வருவது
உன் நினைவிலில்லையா?

## மயிர்க்கொட்டி

அவளொரு மயிர்க் கொட்டி
அன்று
எல்லோரும் ஒதுங்கி
ஓடிய போது
நெருங்கிச் சென்ற
என்னைத் தன்
சோகங்களால் நிரப்பி விட்டு
இப்போ வண்ணத்துப் பூச்சியாய்
வானில் திரிகிறாள்!
நான்
அண்ணாந்து பார்த்து
அங்கம் சொறிகிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரசனை

பாவையரை மட்டுமல்ல
பழங்களையும் கூட
நிர்வாணமாக்கித்தான்
தினமும் ரசிக்கின்றோம்!

மங்கையரை மட்டுமல்ல
மலர்களையும் கூட
முகர்ந்து பார்த்துத்தான்
முதலில் ரசிக்கிறோம்!

## விடிவு

காலைகள் விடிவதைக்
கண்டிருக்கிறேன்.
முதல் முறையாக
நான் விடியத் தொடங்குகிறேன்
உன்னைக் காணும் போது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல்

குளிர் காய்வதற்காக
மூட்டப் பட்ட நெருப்பு!
ஆனால் வேகுவதென்னவோ
நானேதான்!

## கவிதை

வண்ணக் கவிதைகள்—பல
எழுதியிருக்கிறேன்.
படிக்கத் தொடங்கினேன்
உன்னை மட்டும்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிழ்வு

நான்
மகிழ்ச்சியாயிருக்கிறேன்
எனது வெற்றிக்காக அல்ல!
உனது
பலத்திற்காக!

## லயம்

நீ
பேசவேண்டுமென்றில்லை
சும்மா பார்த்து நில்லேன்
நான் பம்பரமாடுவேன்
லயங்களோடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாங்கள் பார்ப்பது

எங்கள் இரத்தங்கள் பாயும்
தங்க நிலங்களில்
வெள்ளிக்களைகள் முளைப்பதால்
நாங்கள் களைத்து விட மாட்டோம்

களைகள் களைகள்தான்
நாங்கள் பார்ப்பது
மழைகளை மட்டும்தான்!

## நாங்கள் ஊமைகளல்ல!

நாங்கள்
பேசுவதில்லை – அதனால்
நாங்கள் ஊமைகளென்பதல்ல!

நாங்கள்
பேசுவதில்லை – ஏனெனில்
நீங்கள் ஊமையாகி விடுவீர்களேயென்பதால்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருட்சங்கள்

வேரறுந்து வீழ்ந்திட – நாம்
வெறும் செடிகளல்ல
விடுதலை வீரம் செறிந்த
விருட்சங்கள்!

பற்றறாத தேசப் பற்றறாத
எம் வீர வாழ்வு என்றும்
சொரணை கெட்டுப் போகாது
சுதந்திரம் காணாமல் வீழாது!

## திசை திருப்பம்

எங்கோ ஓர்
ஆற்றுப் படுக்கையில்
சரிந்த
ஏதோ ஒரு மரத்தினால்
திசை மாறியது
அந்த ஆறு மட்டுமல்ல
வேறும் சில
பேராறுகளும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலைதான்!

எங்கள்
சொந்த மலையின்
ஒரு நல்ல ஊற்று
நதியாகப் போய்
எம்மவரின் மண்ணை
நனைக்குமாயின்...

அது, நதியென்றாலென்ன!
ஓடையென்றாலென்ன!
வாய்க்காலாயிருந்தாலும்
வளம் படுத்தப் பயன் படுகிறதே!
நாம் வெறும் கற்குவியலல்லவோ!

## சரணாகதி

ஆயுதங்களால்
உலகம் 'வெறுமை'யாக்கப் பட்டது
பலமுறை!

'வெறுமை'யினால்
என் ஆயுதமெல்லாம் இழந்தது
இன்றுதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகன் பரதனுடன் தீட்சண்யன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிள்ளையாரே!

ஆத்தியடி அமர்ந்திருக்கும் பிள்ளையாரே!
உனை அடிதொழுது போற்றுகிறேன் பிள்ளையாரே!
கீர்த்திகளும் நலன்புகழும் பிள்ளையாரே!
எனைச் சேர்ந்திடவே அருள்புரிவாய் பிள்ளையாரே!


நாற்றிசையும் அருள் வழங்கும் பிள்ளையாரே!
நான் நடைமறந்த நாச மேனோ பிள்ளையாரே!
கீழ்த்திசையில் நீயிருக்கப் பிள்ளையாரே!
நான் தினம் தொழுதல் மறந்தனையோ பிள்ளையாரே!

வார்த்த புதுச் சிலையெனவே பிள்ளையாரே!
எனை வளமுடனே ஆக்கிவைத்தாய் பிள்ளையாரே!
பார்த்திருக்கப் பதை பதைக்கப் பிள்ளையாரே!
எனைப் பாதியிலே முடக்கியதேன் பிள்ளையாரே!

ஆர்த்தெழுமென் மனநிலையிற் பிள்ளையாரே!
கண்ணீர் ஆறாகப் பெருக வைத்தாய் பிள்ளையாரே!
காத்திருப்பேன் கருணை பெறப் பிள்ளையாரே!
எனை ஆத்மநலம் பேணவைப்பாய் பிள்ளையாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீட்சண்யன் அப்பா, அம்மாவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைக்கோர் கடிதம்

வெந்துயரால் வாடுகிறேன் அம்மா!
முந்தியெனைப் பெற்றெடுத்து
மூத்த திரு மகவென்று
தந்தி கண்டு வந்து பார்த்த அப்பா,
பிந்தி வந்த நாட்களிலே – எனைப்
பித்தனைப் போலாக்கி விட்டு – உங்கு
கண்ட துயரனைத்தும் நான் அறிவேன்.
என் செய்ய?!

கொள்ளிக்கும் கொடுப்பனவு இல்லாமற் போய் விட்ட,
'ஷெல்' லின் பாற்பட்ட வெறும் ஊனனாகி விட்டேனே!
எண்ணிட முகம் விறைக்கும் இம்சைக்குள்ளானேனே!
சொல்லிட முடியாத சோகமம்மா எனது
வந்திடுவீர் என்றுதான் வாட்டமுடன் பார்த்திருந்தேன்
இப்படி நீர் மௌனத்தின் வஞ்சனையால்
கொன்றிடுவீர் என என்றும் கனவிலும் நினைத்ததில்லை.
சென்றிடுவீரோ! சீர்மைச் செழுமைகளிற்கு!?

தாய் வருவாள்,
தானம் நாம் கொடுப்போம்
முப்பத்து ஒன்றில் நாம் முழுக்காலும் நினைவிருத்தி,
பக்கத்து வீடு என மட்டும் பாராது
எக்கச்சக்கமாய் படையல் பண்டமென
அள்ளி வழங்கிடத்தான் எண்ணியிருந்தேன்
மண்ணாகிப் போச்சே மகன் எந்தன் ஆதங்கம்
மடலாவது ஏதும் வருமென்று பார்க்கின்றேன்!?

28.12.97

**1.12.1997 இல் அப்பா மரணமான போது, கொள்ளி வைக்கக் கூடப் போக முடியாத நிலையில்..!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீட்சண்யன் அம்மாவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மாவுக்கு..!

(போரும் வாழ்வும்
திடீரென ஒரு உணர்ச்சிப் பிரவாகத்தில் ஒரு படம் என் முன்னால் விரிந்தது. இது கவிதை அல்ல. ஒரு வார்த்தைக் கோலம். உணர்வின் கொப்பளிப்பு.)

*ரீ.வீ யில் எங்களைப் பார்த்தீர்களா அம்மா?*
*நேற்றைய காலத்துத் திரைப்படங்களில் பார்த்தது போல*
*நாங்கள் சிரித்துக் கொண்டும்! கையசைத்துக் கொண்டும்!*
*எக்காளமிட்டுக் கொண்டும்! தெருவில் பயணித்ததைப்*
*பார்த்தீர்களா அம்மா!*

*அதனை நீங்கள் உங்கள் நாட்டுப் பத்திரிகையில்*
*வாசித்தீர்களா அம்மா? – அப்பா!*
*எப்படி நாங்கள் அவற்றை –*
*முதன் முதலாகச் சகித்துச் சென்றோம்?*
*நீங்கள் உங்களது போர்க்காலக் கதைகளை –*
*எமக்குச் சொன்னீர்கள்*
*எங்களது போரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள், அம்மா?*

*கடிதங்கள் உங்கள் கையில் சேர்ந்தனவா–அம்மா?*
*உங்களைப் பிரிந்து நான் எவ்வளவு தனிமைப்பட்டேன்?*
*எவ்வளவு வேதனையுற்றேன்?*
*எனது அன்பைச் சோதரங்களிற்குத் தெரிவித்தீர்களா?*
*அவர்கள் எமது பிரிவையிட்டு கவலைப் படுகிறார்களா?*

*நீங்கள் எங்களைக் கடலோரமாகக் கண்டீர்களா?*
*அதில் எது நான் என – உங்களால்*
*அடையாளம் காண முடிந்ததா?*
*குண்டடிபட்ட ஒருவனுக்கு–*
*அந்தச்சுமை அளவுக்கதிகமானது போல*
*உங்களுக்குத் தெரிந்ததா?*
*அம்மா, எம்மவர்களுக்கு என்னைக் காட்டினீர்களா?*

**27.5.1999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீட்சண்யன் இளைய சகோதரர்களுடன்
1965



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கைக்கு...!

நூறாய் ஆயிரமாய்
தூரம் எமைப் பிரித்தாலும்
மாறா அன்பு நூல்
மனங்களைத் தொடுக்கும்!

வேறாய் நிற்பது
உடல்கள் மட்டுமே
ஊறும் நினைவுகள்
உள்ளக் கனவுகள்
கூடும் கணங்கள்
குறையாது என்றும்!

27.2.87



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தங்கைக்கு..!

என் பிரிய தங்கையே..!

உன் வரிகளால் என்னைக்
கட்டிப் போட்டிருக்கிறாய்!
அன்பெனும் கயிற்றினால்... என்
ஆற்றாமையெல்லாம்
அடித்துத் துரத்தி ஆதரவாய் நிற்கிறாய்!

சோகம் விரக்தியென்றும்
வெறுப்பு வெறுமையென்றும்
சாத்தான்கள் என்னையே
கொல்ல வருகையிலே
மார்க்கண்டேயனுக்கு
சிவலிங்கம் போல – இந்த
மார்க்கமற்றவனுக்கு
உன் அன்புக் கடிதந்தான்!

வாழ்வேன்! – அந்த
நம்பிக்கையில்தானே – வாழ்கிறேன்!
ஆனால்
இது வாழ்வல்ல
சாகாமலிருக்கும் ஓர் சமாதிநிலை!

அன்புடன்
நான்தான் – உன் அண்ணன்.

15.7.1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினி படுத்தும் பாடு

தேசப் படங்களில் புதுப் புது ரேகைகள் விழுந்து
இராசதானிகள் நாளும் பெருகி வருகையில்
தேகக் களங்களில் பட்டினிப் பாழ் வரிகள்
துல்லியமாகக் கோலம் விரிப்பதேன்?

வானைத் தொடவென்றே வண்ணக் கட்டிடங்கள்
வளர்ந்து வளர்ந்து வாய் பிளக்க வைக்கையிலே
எம் சமுதாயக் கூரையின் உச்சி முகடுகள்
தலைமீது கனமாக இறங்கி வருவதேன்?

கலைகள் கற்பனைகள் காவிய இலக்கியங்கள்
கடல்கள் தாண்டி மலைத் தொடர்கள் தாண்டி
கையோடு கை கோர்த்துப் பவனி வருகையிலே
எம் கற்புகள் தெருமுனையில் காசுக்குப் போவதேன்?

விடை துரத்தாக் குஞ்சுகளாய்
மடி தவழ வேண்டிய எம் தேசத்துப் பிஞ்சுகளோ
தென்னிலங்கைக் கடற்கரையில் மானத்தைக் கடைவிரித்து
மாற்றான் மடி தவழ்ந்து நின்று
காசோடு கடும் நோயைத் தேசத்திற்கு அருள்வதேன்?

நம்நாடு நம்இனம் நம்மண் நம்சொந்தம்
வரையறைகள் எல்லாமே பட்டினியில் கருகியதால்
மோசப் பேருலகின் முழுமைப் பிரஜைகளாய்
நாசக் கெடு வழியில் தேசத் துரோகங்கள்
காட்டிக் கொடுப்புகள்..!

சோவியத் ஒன்றியம் வெடித்துச் சிதறியதேன்?
சோமாலியாவில் சோகங்கள் நிகழ்வதேன்?
ஆப்கான் பிரச்சனைகள் ஆறாமல் இருப்பதேன்?
யாழ்ப்பாணம் இன்னமும் இருளிலே கிடப்பதேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினியின் கோரங்கள் பலப்பல வடிவெடுத்து
கொட்டும் முழக்கமாய் குடலறுக்கும் துரோகமாய்
பட்டும் படாத வஞ்சக வலைவிரிப்பாய்
என்றும் எம்முலகில் ஊழிக் கூத்தாடுதையா!

காஷ்மீரக் கம்பளங்கள் உலகச் சந்தையிலே
உச்சவிலை எட்டுகின்ற ஒரேயொரு காரணத்தால்
விடலைகளும் மழலைகளும் உயிருள்ள தறிகளென
வியாபாரப் பெருவலையில் சிக்கித் துடிப்பதேன்?

வையகத்தைச் சீரழிக்கும் வைரி என நன்குணர்ந்தும்
போதைவஸ்து வர்த்தகத்தின் ஆசைப் பணப் பொறியில்
சிக்குண்டு சிறைகளிலே வாழ்க்கையினைச் சீரழிக்கும்
எண்ணிக்கைப் பெருமையெல்லாம் எமக்கு வரக்காரணமேன்?

சிவப்பு விளக்கெரியும் சிங்காரப் பூமிகளேன்?
நீலப் படங்களின் நிஷ்டூரக் காட்சிகளேன்?
மஞ்சள் பத்திரிகைகளின் மானங்கெட்ட சேதிகளேன்?
பச்சையான பல பாவச் செயல்களேன்?

நிச்சயமாய் இக்கொடிய நீசத்தனங்கள் எல்லாம்
பட்டினிப் பயங்கரத்தின் பாழும் விளைவல்லவோ!
அற்புதப் பூவுலகம் அமைதி பெற முடியாமல்
சித்திர வதைப் படுதல் பட்டினியின் செயலன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே போகிறோம்..?

உலகம் இருபத்தோராம் நூற்றாண்டில்
காலடி வைக்கக் காத்திருக்கும் போது
நாம் பதினேழாம் நூற்றாண்டின்
புழுதிக்குள்ளே மல்லாந்து கிடக்கின்றோம்.

செவ்வாய்க் கிரகத்திலிறங்கி
சோதனை நடத்துகிறது பாத்ஃபைன்டர்
இங்கே மன்னார்த் தடைமுகாம் தாண்டும் தேதியறிய
பத்திரிகைகளுள் பரபரக்கிறோம்.

எங்கே போகிறோம் நாம்?
எங்கே போகிறோம் நாம்?

கத்தியில்லாமல் இரத்தமில்லாமல்
மூளைக்குள்ளேயே லேசர்க் கதிரினால்
நுட்பமான சத்திரசிகிச்சை நடக்கிறது
ஆனால் நாமோ
தலையிடிக்குப் போடப் பனடோலுக்கும் வழியின்றி..!
எங்கே போகிறோம் நாம்?!

அனல் மின்சாரம் புனல் மின்சாரம்
நியோன் ஒளிவெள்ளம் எலெக்ரோனிக் மின்நடனம் என
நகரங்களெல்லாம் பிரகாசித்துப் பளபளத்து நர்த்தனமாட
நாம் குப்பி விளக்கிற்கு எண்ணெய் தேடி
குடும்பக் காட்டுடன் கியூ வில் நிற்கிறோம்
உண்மையில் நாம் எங்கே போகிறோம்?!

மரங்களை வெட்டாதே மலர்களைக் கொய்யாதே
உயிர்களை வதைக்காதே மயில்களைச் சுடாதே
சூழலைக் கெடுக்காதே என்றெல்லாம்
உலகெங்கும் குரல்கள் கேட்கிறதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே பள்ளிக்குப் போன பயிர்
சுள்ளியாய் முறிந்து கிடக்கிறதே!
தட்டோடு பூ வேந்திப் போனவள்
பட்டாடை சிவப்புறப் பாதையிலே கிடக்கிறாளே!

மொட்டாக மலராக
பூங்கொத்தாகப் பிஞ்சாக
கனியாக கனிக்கொத்தாக
எத்தனை குடும்பங்கள் வாழ்வழிந்து போயினவே!
எங்காவது எமக்காகக் குரல்கள் கேட்கிறதா?
சத்தியமாக நாம் எங்கே போகிறோம்?!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலவே நீயேன் அழுகின்றாய்?

பல் விதமான கட்டுத் தளைகளால்
மட்டு மட்டான எல்லைக் குள்ளே
சொல்லொணாத் துயர் அலையிலகப்பட்டு
புல்லெனெ வாழ்கிறோம் கண்டாயா?

எவ்விதமான இன்னலும் இன்றி
பவ்வியமான வான வெளியிலே
துல்லியமான பாதையிற் செல்லும்
நிலவே நீயேன் அழுகின்றாய்?

இருப்பிடமிழந்து போக்கிடம் இழந்து
பாதையோர மரங்களின் கீழே
ஏணை கட்டி ஆடிடுமெங்கள்
ஈன மழலைகள் கண்டாயா?

மாறா ஒழுக்கில் வீறாப்புடனே
விண்ணின் கோள்கள் சுற்றத்துடனே
சூரியத் தொகுதியில் சுற்றி வருகின்ற
நிலவே நீ ஏன் அழுகின்றாய்?

பாழாய்ப் போன கல்வி நிலைகள்
வாழ்வின் இருளில் எம்மைத் தள்ள
கூரையில் வீழ்ந்திடும் குண்டுகளுடனே
வாழும் எம்நிலை கண்டாயா?

பகலவன் பொழிந்திடும் ஒளி வெள்ளத்தில்
பளபளப்பாகத் தண்ணொளி வீசி
பகட்டாய்ப் பா க்களில் இடம் பிடிக்கின்ற
நிலவே நீயேன் அழுகின்றாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழவரெமக்காய் குரல் கொடுத்திடவே
யாருமே இன்றித் தவித்திரு நிலையில்
பாரதன் கவனம் ஈர்த்திடவென்று—நாம்
படுகின்ற பாடுகள் கண்டாயா?

வானியல்க் கணிப்பு சோதிடக் குறிப்பு
அனைத்திலும் உந்தன் ஆட்சியை ஓய்ச்சி
கவனத்தை ஈர்த்திடும் பெருமை நிலையிலும்
நிலவே நீயேன் அழுகின்றாய்?

எங்களின் மீது திணிக்கப் படுகின்ற
அடக்கு முறைகளும் அவல நிலைகளும்
எப்படி யெல்லாம் மறைக்கப் படுவதை
நிலவே நீயும் கண்டாயா?

எல்லோருக்கும் தரிசனம் காட்டி
கடலும் மலையும் கண்டு களித்து
உடலில் ஊனம் எதுவுமற்றிருக்கும்
நிலவே நீயேன் அழுகின்றாய்?

எங்கள் பாதையில் எவரேனும்
குறுக்கிட வேண்டாம் எனக் கேட்டோம்
சுயமாய் இயங்கிட விடக் கேட்டோம்
என்பதை நீயும் கண்டாயா?

உந்தன் பாதையில் சுயமாக
குறுக் கீடேதும் இல்லாமல்
வழமை போன்றே பயணிக்கும்
நிலவே நீயேன் அழுகின்றாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊமை இருட்டு

ஒற்றைக் கதவுகளில் ஒருக்களித்து நின்ற
பெட்டிக்கடைகளும் மூடப்பட்டன.

மண்ணெய் இல்லாத மௌனக்குடில்களின்
ஓலைக்கதவுகள்
தும்புக் கயிற்றில் விறைத்து நின்றன.

சேலைத் தலைப்பைப் பிசைந்த படியே
மூலைத் தரையில் முனகும் என் மனைவி...

தூரத்து இராணுவ வாகன இரைச்சலில்
கூகையும் கோட்டானும் நிசப்தம் அடைந்த,
இராணுவத் தளைகளால் இழையோடப்பட்ட,
மௌனப் புயல்களால் வழிமூடப் பட்ட
கனத்த இரவின் தனிமைத் துணையில்
வேலிக்குள்ளே வீட்டிற்குள்ளே
திறந்த சிறையின் கோட்டிற்குள்ளே
விடிவைக் காத்து வேதனை முனகல்கள்.

கடையடிச் சந்தியில் காரிருள் நடுவில்
மோட்டார் சைக்கிள் முகப்பு ஒளிக்கீற்று
ஒரே ஒரு முறை மின்னி மறைந்து
தடதடவென்று இரைந்து செல்ல...
நெஞ்சில் ஒரு நிமிர்ந்த தெம்பு,
எங்கள் பெடியளும் நிற்கிறார்கள்.

மூலைத் தரையில் முனகல் நடுவில்
ஒரு பெருமூச்சு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நில்லுங்கள்..! திரும்புங்கள்..!
## வாருங்கள்..! வந்து ஏந்துங்கள்..!

முல்லைநகரின் சந்தைக் கடைகளில்
சென்று வருகையில்...
அந்தப் பதற்றம்
பச்சை வாகன வரிசைகள் வந்து
உறுமிக் கொண்டு நிற்க முதலே
நீட்டிய விறைத்த துவக்குகள் குழாய்கள்
பட்டிகள் சகிதம் ...தட ..தட வென்று
அந்தப் பிராணிகள் வந்து குதித்தன!

திசைகள் திக்குகள் புரியாமல்
காணிகள் ஒழுங்கைகள் எல்லாம்
மனிதக் குழந்தைகள் பெண்கள் – மேலும்
கிழடுகள் கட்டைகள்
கம்பிகள் தாண்டி மிதிபட்டு ஓட..
சடசடவென்று வேட்டுச் சத்தம்!

என்ன இது? எங்கு போகிறோம்?
சொந்த மண்ணிலே வீதியில்
எங்கள் காணிகள் மனைகளில்
மனைவிகளில் கூடவா
மாற்றானின் விரல்கள்..!?

நில்லுங்கள்..! திரும்புங்கள்..!
வாருங்கள்..! வந்து ஏந்துங்கள்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கே தயவு செய்து மலர் போட வேண்டாம்!

இங்கே தயவு செய்து மலர் போட வேண்டாம்
தமிழீழத்திற்குக் கொஞ்சம் உரமேற்றுங்கள்!

செத்து விட்டேன் என்றா நினைத்தீர்கள்?
இல்லை ஐயா, வித்தாகி விட்டேன் – விருட்சம் வரும்!

புரிந்து கொள்ளுங்கள்! இது சிதையல்ல!
பட்டறிவுப் புத்தகம் பக்கம் புரண்டு கிடக்கிறது!

வேண்டுமென்றா செத்தேன்? இல்லை!
நாண்டு நின்று நல்லவரை நாசமாக்கும்
கொடுமைக்கு நானும் பலியானேன்!

**(சாவு நெருங்குவதைத் தான் உணர்ந்து
தீர்க்க தரிசியாய் தீட்சண்யன் எழுதி வைத்த இறுதிக்கவிதை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீட்சண்யன் அம்மாவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் பேசுவதில்லை
அதனால்
நாங்கள் ஊமைகளென்பதல்ல

நாங்கள் பேசுவதில்லை
ஏனெனில்
நீங்கள் ஊமையாகி விடுவீர்களென்பதால்



மனஓசை
வெளியீடு

விலை
ரூ. 180

ISBN: 978-3-9813002-1-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org